இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட்)

15வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட
அரசியல், ஸ்தாபன வேலை அறிக்கை

கடலூர்
மார்ச் 1,2,3,4
1995

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட்)

15வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல், ஸ்தாபன வேலை அறிக்கை

கடலூர் — மார்ச் 1,2, 3, 4 — 1995

விலை ரூ 14-00

முன்னுரை

அன்பார்ந்த தோழர்களே,

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தில் நமது கட்சி கடைப் பிடித்த அரசியல் அணுகுமுறை, கட்சி நடத்திய இயக்கங்கள், வெகுஜன அரங்கங்களின் பணி, கிளை முதல் மாநில செயற்குழு வரை கட்சி அமைப்புகளின் செயல்பாடு ஆகிய அம்சங்களை மாநில மாநாடு பரிசீலித்தது. கடந்து வந்த பாதையை பரிசீலித்து புதிய அரசியல் ஸ்தாபன கடமைகளை மாநாடு தீர்மானித் துள்ளது.

மாநில மாநாட்டில் தோழர் பிரகாஷ் காரத் ஆற்றிய நிறைவு உரை, தோழர் பி.ராமச்சந்திரன் வழங்கிய வாழ்த்துரை, மாநில செயற்குழு சார்பில் வழங்கப்பட்ட தொகுப்புரை உட்பட அனைத்து அம்சங்களும் இப்பிரசுரத்தில் இடம்பெற்றுள்ளன.

நமது கட்சியின் ஒவ்வொரு மாநில மாநாட்டிற்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு. கடலூரில் 1995, மார்ச் 1, 2, 3, 4 தேதி களில் நடைபெற்ற மாநில 15வது மாநாடு தமிழக கட்சி வரலாற்றில் ஒரு மைல்கல். மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளோடு மாநாட்டின் அனுபவம் நின்றுவிடக்கூடாது, கட்சி முழுவதற்கும் இது சொத்தாக மாறவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த ஆவணம் வெளியிடப்படுகிறது. கட்சி அணிகள் இதைப் படித்து பயன்பெற வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

புரட்சி வாழ்த்துக்களுடன்

என்.சங்கரய்யா
மாநில செயலாளர்

பி.ராமச்சந்திரன்

''தோழர்களே, கடந்த மூன்று ஆண்டுகளில் மிகக் கடுமை யான போராட்டங்கள், இயக்கங்கள் ஆகியவற்றை நடத்திய பின் வந்திருக்கிறீர்கள். 'கடுமையாக' என்று சொன்னால், இதற்கு முன் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு - இடை விடாது, ஒய்வு ஒழிச்சல் இல்லாது - இயக்கங்கள் நடத்திய பிறகு வந்திருக்கிறீர்கள். அந்தப் போராட்டங்களை, இயக்கங்களை ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்பீடு செய்தபின், அடுத்த கட்டத் தில் - தமிழகத்தில் கட்சி மிகப் பெரிய முன்னேற்றத்தை நோக்கி போவதற்கான கட்டத்தில் - இந்த மாநாடு கூடுகிறது. அதற்குத் தகுந்த முறையில் நம் மாநிலக்குழு சார்பில் பல்வேறு அம்சங்கள் முறையாகத் தொகுத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அரங்கில் - கடந்த மாநாடு நடைபெற்றபோது இருந்த நிலைமைக்கும், இப்போதிருக்கும் நிலைமைக்கும் ஏற்பட் டிருக்கக்கூடிய மிகப்பெரியமாறுதல் பற்றி அரசியல் தீர்மானத் தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் அன்று கட்சிக் காங்கிரசை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் உலக அரங்கில் இருண்ட சூழ்நிலை இருந்தது. ஆனால் அன்றைக்கிருந்த சோர் வும், திகைப்பும் மாறி, புதிய நம்பிக்கை வரக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

அன்றைய தினம் அந்தக் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்ட நேரத்தில், அதிர்ச்சி ஏற்பட்ட நேரத்தில், உலகத்தில் வேறு எந்த வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் செய்யாத அளவிற்கு, அந்த சம்ப வங்களைப்பற்றி நம் கட்சி காங்கிரஸ் ஒரு தத்துவார்த்த தீர்மா னத்தை நின்றவேற்றியது. இது ஒரு மிகப்பெரும் சாதனை யாகும். மற்ற கட்சிகள் எல்லாம் குழம்பிப் போயிருக்கக்கூடிய நேரத்தில், நாம் நமக்கு இருக்கக்கூடிய மார்க்சிய - லெனினிய அறிவின் அடிப்படையில் - அனுபவங்களின் அடிப்படையில் - இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், அதன் அடிப்படையில் நம் கட்சி முழுவதையும் ஒருமுகப்படுத்தி

- உற்சாகப்படுத்தி - தெளிவுபடுத்தி, தத்துவார்த்த ரீதியாக வலுப் படுத்தக்கூடிய முயற்சியிலும் வெற்றி பெற்றிருக்கிறோம்.

அதன் ஒரு பகுதியாக நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சி, நாம் கல்கத்தாவில் நடத்திய கருத்தரங்கம். ஏறத்தாழ 19 உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகள் கலந்து கொண்டன. உலகில் வேறெந்த கம்யூனிஸ்ட் கட்சியும் செய்யாத காரியத்தை நம்மால்தான் செய்ய முடிந்தது. இதை நடத்தியதன் மூலம் நம்முடைய சர்வ தேசக் கடமையைச் செய்வதில் நாம் ஒரு குறிப்பிடத்தக்க வெற் றியை அடைந்திருக்கிறோம்.

இந்த காலகட்டத்தில் உலகில் உள்ள பல கட்சிகளுடன் நமக்கு தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. நம்முடைய மத்தியக்குழு வின் அழைப்பின் பேரில் சண்டிகாரில் நடைபெற இருக்கும் கட்சிக் காங்கிரசில் முப்பதுக்கும் அதிகமான கம்யூனிஸ்ட் கட்சி கள் தங்கள் சகோதரப் பிரதிநிதிகளை அனுப்ப இருக்கின்றன. சிபிஎம் வரலாற்றில் இந்த அளவுக்கு வெளிநாட்டு பிரதி நிதிகள் எந்த மாநாட்டுக்கும் இதற்கு முன் வந்ததில்லை. கடந்த மாநாட்டில் கியூபா, சீனா, வியட்நாம், வடகொரியா கம் யூனிஸ்ட் கட்சிகளை அழைத்திருந்தோம். அவர்களும் வந்திருந் தார்கள். நேபாள கம்யூனிஸ்ட் கட்சியும் வந்திருந்தது. ஆனால் இந்த கட்சிக் 'காங்கிரசில் ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி, தென் ஆப்பிரிக்க கம்யூனிஸ்ட் கட்சி என்று ஏராளமான கட்சிகள் வர இருக்கின்றன. இது மிக முக்கியமான விஷயமாகும். குறிப் பாக ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் மீண்டும் புத்துயிர் பெற்று தற்போது நம் கட்சியுடன் நெருக்கமான தொடர்பு ஏற் படுத்திக் கொண்டுள்ளார்கள். இந்த மாநாட்டில் அவர்களும் கலந்து கொள்ள இருக்கிறார்கள். இது நமக்கு மிகவும் உற்சாகம் ஊட்டக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

கடந்த மூன்றாண்டுகளில் அகில இந்திய அளவிலும் சரி, மாநில அளவிலும் சரி, ஏராளமான போராட்டங்களை, இயக்கங் களை நடத்தி இருக்கிறோம். இவற்றின் மூலமாக நாம் என்ன சாதித்திருக்கிறோம் என்பதைப்பற்றியும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு சில தோழர்கள், 'இவ்வளவு வேலை நிறுத்தங்கள் செய் தோமே, பந்த்துகள் நடத்தி இருக்கிறோமே, இருந்தும்கூட இன்னமும் நரசிம்மராவ் முரட்டுத்தனமாக அவருடைய பாதை யிலேயேதானே சென்று கொண்டிருக்கிறார்' என்று சொல் கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல.

1991ல் நரசிம்மராவ் - மன்மோகன் சிங் அறிவித்த பொருளாதாரக் கொள்கையின் பல அம்சங்கள் இருந்தன. அதில் நேரடியாக மக்களையும், தொழிலாளர்களையும் தாக்கக் கூடிய பல அம்சங்கள் இருந்தன. அவற்றில் மிக முக்கியமான மத்திய அரசின் குறிக்கோளானது, அனைத்துத் தொழில் களிலும் ஊதிய முடக்கம் செய்வதென்பதாகும். ஆனால் நாம் கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்திய பல போராட்டங்களின் விளைவாக, ஊதிய முடக்கத்தை தூள் தூள் ஆக்கி இருக் கிறோம் என்பது மட்டுமல்ல, ஊதிய உயர்விற்கான ஒப்பந்தங் களையும் பல துறைகளில் செய்திருக்கிறோம். இவ்வாறு மத்திய அரசின் ஊதிய முடக்கக் கொள்கையை பின்னுக்குத் தள்ளி இருக்கிறோம்.

பிஜு பட்நாயக் தலைமையிலான கமிட்டி முடிவு செய்தபடி அகவிலைப்படியையும் அவர்களால் முடக்க முடியவில்லை. அதையும் உறுதியாக எதிர்த்து இன்று அந்தப் பிரச்சனைக்கும் இடமில்லாத அளவுக்கு தொழிலாளி வர்க்கத்தால் செய்ய முடிந் திருக்கிறது.

அடுத்ததாக, 1994 மார்ச் மாதத்திற்குள் ஒன்பதாயிரம் வங்கிக் கிளைகளை மூட வேண்டும் என்ற மத்திய அரசின் முடிவையும் உறுதியான போராட்டங்கள் மூலமாக தோற் கடிக்க முடிந்தது மட்டுமல்ல, அந்தப் பிரச்சனையில் அரசு இன்றையதினம் தற்காப்பு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

அதேபோல் தொழிலாளர்களை வெளியேற்றும் கொள் கையை அரசு அமுல்படுத்த வேண்டும் என்று உலக வங்கி நிர்ப்பந்தம் செய்தபோதிலும்கூட, அரசினால் இன்னும் அதை அமுல்படுத்த முடியாத நிலையினை ஏற்படுத்தியிருக்கிறோம்.

அதேபோல் மத்திய அரசின் படு பிற்போக்கான தொழிற் சங்க மசோதாவையும் இன்னும் அதனால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து நிறைவேற்ற முடியவில்லை என்பதை மறந்து விடாதீர்கள்.

பொது விநியோக முறையிலும் அரசின் எண்ணம் ஈடேற வில்லை. சந்தைப் பொருளாதாரத்தின் அடிப்படையாக, மக்க ளுக்கு எந்தவிதமான நன்மையும் செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு இல்லை. அத்தியாவசியமான பொருள்களை அரசு கட்டுப்பாட்டு விலையில் கொடுக்க வேண்டாம் என்று முடிவெடுத்தார்கள். ஆனால் இன்றுவரை அதனை அவர் களால் அமுல்படுத்த முடியவில்லை.

இவ்வாறாக, கடந்த மூன்றாண்டுகளில் நம் போராட்டங்கள் மூலமாக மத்திய அரசு மக்கள் மீது தொடுத்த பல தாக்கு தல்களை நாம் தடுத்து நிறுத்தி இருக்கிறோம்; பின்னுக்குத் தள்ளி இருக்கிறோம் என்பதை நாம் தெளிவாக மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அதுமட்டுல்ல், நாம் தொடர்ந்து நடத்தி வந்த இயக்கங்களின் மூலமாக மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை சரியா னதா இல்லையா என்ற விவாதத்தை தேசிய அளவில் அரசியல் விவாதத்திற்கான விஷயமாக நம்மால் கொண்டு வரமுடிந் திருக்கிறது. இது இன்று பல வடிவங்களில் வந்துகொண்டிருக் கின்றன. கர்நாடகாவிலும், ஆந்திராவிலும் காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்தபிறகு, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக மக்களிடம் தனி மைப்பட்டிருக்கிறோம், ஆகவே அதனை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்ற சிந்தனை வந்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சிக்குள் நடைபெற்று வரும் விஷயங்கள் குறித்து நமக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, பொது விநி யோக முறையை நாடு முழுதும் விஸ்தரிக்க வேண்டும் என்று கட்சிக்குள் நிர்ப்பந்தம் தரப்படுகிறது. இத்தனை ஆண்டு காலம் நாம் சொல்லி வந்த அந்த 14 அத்தியாவசிய பொருள்களை பொது விநியோக முறையில் கொடுக்க வேண்டும் என்று

காங்கிரஸ் கட்சியின் கேபினட் சப் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. இவ்வாறு காங்கிரஸ் கட்சிக்குள்ளும் நம்மால் ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த முடிந்திருக்கிறது.

சென்ற ஆண்டு நம்முடைய பொருளாதார நிபுணர்களை வைத்து ஒரு கருத்தரங்கம் நடத்தினோம்; மாற்று பொருளாதாரக் கொள்கையை உருவாக்கி நாட்டு மக்கள் முன் சமர்ப்பித்தோம். ஆனால் அப்போது யாரும் அதைப்பற்றிக் கவலைப் படவில்லை. ஆனால் நான்கு நாட்களுக்கு முன்னால் அதே நிபுணர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டனர். அதைப் பாராட்டி பல பத்திரிகைகள் தலையங்கங்கள் எழுதி இருக்கின்றன. இது இடதுசாரி பொருளாதார நிபுணர்களின் கோரிக்கையாக இருந்தாலும், இன்றைய நிலையில் இந்த மாற்றுப் பொருளாதாரக் கொள்கையை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை கூட எழுதி இருக்கிறது.

வகுப்புவாத பிரச்சனை

அதேபோல் வகுப்புவாத பிரச்சனை. எவ்வளவு கடுமையாகப் போராடி இருக்கிறோம். நம்முடைய போராட்டத்தின் விளைவாகத்தான் பிஜேபி இன்று பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும் மற்ற பல கட்சிகளுக்குள்ளேயும் வகுப்புவாதத்திற்கெதிரான கருத்துக்கள் பரவலாக வளர்ந்திருப்பதற்கு நம்முடைய போராட்டங்கள் முக்கிய காரணமாகும்.

இதனால் முற்றிலுமாக வகுப்புவாத போக்குகள் தவிர்க்கப் பட்டுவிட்டது என்று சொல்ல முடியாது. ஆனால் அதையும் காங்கிரஸ் கட்சியின் நிகழ்ச்சி நிரலில் கொண்டுவர நம்மால் முடிந்திருக்கிறது. முற்றிலுமாக முஸ்லிம்கள் மத்தியிலிருந்து தனிமைப்பட்ட நிலைமை ஏன் ஏற்பட்டது என்று அந்தக் கட்சியை சிந்திக்க வைக்க நாம் பங்கு செலுத்தி இருக்கிறோம்.

ஜனதா தளம், தெலுங்கு தேசம், திமுக போன்ற கட்சிகள் எல்லாம் வகுப்புவாதம் சம்பந்தமாக ஆரம்பத்தில் இயக்கங்களை நடத்தினாலும், அதை தொடர்ச்சியாக செய்யவில்லை.

தொடர்ச்சியாக செய்தது இடதுசாரிக் கட்சிகள்தான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஊழல்

அதேபோல் ஆட்சியாளர்களுடைய ஊழல்களையும் நாம் அம்பலப்படுத்தி இருக்கிறோம். இவ்வாறு நமது பல்வேறு போராட்டங்களின் மூலமாக இயக்கங்களின்மூலமாக - ஒரு சிலர் கூறுவதுபோல, நம் போராட்டங்கள் பாலைவனத்தில் ஒருவன் கத்தியதைப்போல் அல்லாமல் - இந்திய அரசியலில் ஒரு மாற்றத்தை உருவாக்க முடிந்திருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

சென்ற கட்சிக் காங்கிரஸில் நாட்டில் உள்ள நெருக்கடி காரணமாக அரசியல் ஸ்திரமற்ற நிலை வரலாம் என்று சுட்டிக் காட்டி இருந்தோம். அது இன்று எந்த அளவுக்கு இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். நாட்டில் ஓர் ஆழமான அரசியல் குழப்பம் உருவாகிக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியினுடைய படுதோல்வி மேலும் கீழ்நிலைக்குப் போகக்கூடிய நிலைமை. பெரு முதலாளிகள் கட்சியாக இருக்கக்கூடிய காங் கிரஸ் கட்சி, இன்று உடைந்து, சிதைந்து போய்க்கொண்டிருக் கக்கூடிய நிலைமை சாதாரண விஷயம் அல்ல. இதை நாம் நரசிம்மராவுக்கு ஏற்பட்ட நெருக்கடியாக மட்டும் பார்க்கக்கூடாது. நம் கட்சி ஆரம்ப காலத்திலிருந்தே சுட்டிக்காட்டியதுபோல, ஆளும் வர்க்கம் கடைப்பிடிக்கும் பொருளாதார, அரசியல் கொள்கையின் விளைவாக இந்திய அமைப்பிலே உள்ளடங்கி இருக்கக்கூடிய அரசியல் நெருக்கடி அது. இந்த நிகழ்ச்சிப் போக்குகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகும். 1967ல் 9 மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்தது. மறுபடியும் காங்கிரஸ் உடைந்தது. மீண்டும் காங்கிரஸ் புத்துயிர் பெற்று இந்திராகாந்தி தலைமையில் 1975ல் ஆட்சிக்கு வந்தது. பின்னர் நாம் எதிர்பார்த்ததுபோல, நான்கு ஆண்டுகளில் - 1975ல் அவசர நிலை பிரகடனம் செய்ய வேண்டிய கட்டாயம் இந்திரா காந்திக்கு ஏற்பட்டது. 1977ல் கடுமையான அடி கிடைத்ததும் உங்களுக்கு தெரியும். 1980ல் மறுபடியும் தலை தூக்குகிறார்கள்.

நரசிம்மராவ் ''காங்கிரஸ் கட்சிதான் நிரந்தரமான கட்சி'' என்று சொல்கிறார்.இது விஞ்ஞானத்திற்குப்புறம்பான விஷயம் என்பது உங்களுக்குத் தெரியும். நிரந்தரம் என்று எதுவுமே கிடையாது.

1967ல் காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்தபோது பல மாநில கட்சிகள் ஆட்சிக்கு வந்தன. மறுபடியும் அந்தக் கட்சிகள் எல்லாம் சிதறிப்போய், மறுபடியும் காங்கிரஸ் வந்தது. 1977ல் ஜனதா கட்சி வந்தது. அதுவும் சிதறிப் போய்க் கொண்டிருக்கிறது. 1989ல் வி.பி.சிங் தலைமையில் மத்திய ஆட்சி ஏற்பட்டது.

இயல்பாக அரசியலை ஆய்வு செய்யக்கூடியவர்கள் எழுப்பும் கேள்வி என்ன தெரியுமா? காங்கிரஸ் இவ்வாறு உடைந்து கொண்டிருக்கிறபோது, இதற்கு மாற்று என்ன என்பதாகும். இப்போதுள்ள நிலையில் பிஜேபி மாற்றாக வரக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. மகாராஷ்டிரா, குஜராத் தேர்தல் முடிவுகள் நமக்கு பாதகமானதாக அமையலாம்.

மேற்கு வங்கம்போல, திரிபுரா போல இடதுசாரி கட்சிகள் - தேசிய முன்னணி என்று ஒரு மாற்று வரக்கூடாதா? அதற்கு ஏன் நம் கட்சி முன் முயற்சி எடுக்கக்கூடாது என்று ஒருசிலர் கேட்கிறார்கள். மாற்று என்ற முறையில் மெக்கானிக்காக சொல்கிறார்கள். சற்றே கற்பனை செய்து பார்ப்போம். பிஜு பட்நாயக், என்.டி.ராமாராவ், முலாயம் சிங் யாதவ், என்.டி.ஆர். - ஜெயலலிதா ஆகிய இத்தனை பேரையும் சேர்த்துக்கொண்டு நாமும் சேர்ந்து ஒரு மாற்று அமைத்தால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். இப்படி ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தி ஒரு மாற்று அரசு வருமானால், அதற்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை இருக்காது என்பது நமக்குத் தெரியும்.

இந்த நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும்? முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ அமைப்பில் படுமோசமான தன்மைகள் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு மாற்றாக, மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஓர் இடது

சாரி ஜனநாயக மாற்றை உருவாக்க வேண்டும். நாம் சொல்லக் கூடிய மக்கள் ஜனநாயக புரட்சி என்பது, இதையும் தாண்டி வரக்கூடிய கட்டம். இன்றைய நிலையில் இடதுசாரி ஜனநாயக சக்திகளுடைய மாற்று தேவை என்பதை கட்சி தீர்மானம் சுட்டிக்காட்டி இருக்கிறது. அதுவும் ஒரு திட்டத்தின் அடிப் படையில் இருக்க வேண்டும் என்ற கருத்தையும் நம்முடைய நகல் தீர்மானத்தில் சுட்டிக்காட்டி இருக்கிறோம். அந்த திட் டத்தை நாம் பெருமளவில் அடுத்த கட்டத்தில் பிரச்சாரம் செய்வது நம்முடைய அடிப்படையான கடமையாகும் என் பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இதையெல்லாம் யார் செய்வார்கள்? நம் தோழர்கள்தான் செய்ய வேண்டும். இப்போது தமிழகத்தில் 65 ஆயிரம் கட்சி உறுப்பினர்களாக வளர்ந்திருக்கிறோம். இது குறிப்பிடத்தக்க வளர்ச்சி என்பதில் சந்தேகமில்லை. இது சின்ன விஷயம் இல்லை. அகில இந்திய மட்டத்தில் பணியாற்றுவதால் சொல்கி றேன். தமிழகத்தின் வளர்ச்சியை அனைவரும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள். கோவையில் நடைபெற்ற ஜன நாயக மாதர் சங்க அகில இந்திய மாநாட்டைப்பற்றி சுசீலா கோபாலன் மிக பாராட்டி சொன்னார். மிகவும் சிறப்பாக இருந்ததாக பாராட்டினார். இது நமக்கு உற்சாகம் அளிக்கக் கூடிய விஷயம். ஒரு காலத்தில் தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சி வெறும் தொழிற்சங்க கட்சியாக மட்டும் இருந்தது. ஆனால் இப் போது அனைத்துத் தரப்பினரையும் ஈர்க்கக்கூடிய வகையில் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறோம். உறுப்பினர்கள் எண்ணிக்கை 65 ஆயிரமாக வளர்ந்திருக்கிறது. வெகுஜன அமைப்புகளின் எண்ணிக்கை 12 லட்சமாக உயர்ந்திருக்கிறது. கலைத் துறையில், இலக்கியத்துறையில் என்று பல முனை களிலும் முன்னேறி வருகிறோம். இது சின்ன விஷயம் இல்லை. 'தீக்கதிர்' இரு பதிப்புகளை நடத்திக் கொண்டி ருக்கிறோம். இவைதான் நம்முடைய மூலதனம். இதை வைத்துக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு நாம் செல்ல வேண்டும்.

இவ்வாறு நாம் உழைக்கும்போது தியாகங்களையும் ஏற்கத் தயாராக இருந்தால் பெருமளவிற்கு நாம் முன்னேற முடியும்.

பீகாரில் 4 மாவட்டங்களில் நடந்த நிலப்போராட்டத்தில் 35 தோழர்களை உயிர்ப்பலி கொடுத்திருக்கிறோம். போராட்டம் நடக்கிறபோது தியாகம் செய்யவேண்டி வரும். அதை நாம் மனதில் கொண்டு உறுதியாக முன்னேறுவோம்.

கடலூரில் 1, 2, 3, 4 மார்ச் 1995ல் நடைபெற்ற 15வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல், ஸ்தாபன வேலை அறிக்கை

அரசியல் நிலைமை

1. நமது கட்சியின் கடந்த மாநாட்டிற்குப்பின் சர்வதேச, தேசிய நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள், அதையொட்டிய நமது கடமை ஆகியவற்றை விளக்கி 15வது அகில இந்திய மாநாட்டிற்கான மத்திய குழுவின் நகல் அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது. மத்தியக்குழு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள அடிப்படையில் தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகாலமாக அரசியல், ஸ்தாபன கடமைகளை நாம் மேற்கொண் டுள்ளோம்.

மத்திய அரசின் மக்கள் விரோத கொள்கைகள்

2. 1991ம் ஆண்டு மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்ற காங்கிரஸ் அரசு கடந்த மூன்றரை ஆண்டுகாலமாக கடைப்பிடித்து வரும் புதிய பொருளாதாரக் கொள்கை அனைத்து துறைகளையும், அனைத்துப் பகுதி மக்களையும் கடுமையாக பாதித்து வருகிறது.

3. கடந்த காலங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சுயசார்பு கொள்கை கைவிடப்பட்டு, ஐஎம்எப், உலக வங்கி ஆணைப் படி கேந்திரமான தொழில்களில் பன்னாட்டு கம்பெனிக ளுக்கு இந்தியாவில் தொழில் துவங்க மத்திய அரசு அனுமதி அளிப்பது, இந்திய தொழில்களை பாதிக்கும் நிலையை உரு வாக்கி இருக்கிறது. சின்ன மீனை பெரிய மீன் விழுங்குவது போல் பல இந்தியக் கம்பெனிகளை வெளிநாட்டுக் கம்பெனி கள் விலைக்கு வாங்கி வருகின்றன. இந்திய பொருளா

தாரத்தின் முதுகெலும்பாக விளங்கி வரும் வங்கி, இன்சூரன்ஸ், தொலைபேசி போன்ற பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்க அரசு முயற்சித்து வருகிறது. எண்ணை, மின் உற்பத்தி, உருக்கு போன்ற தொழில்களிலும் பன்னாட்டு கம்பெனிகளை அனுமதித்து இருப்பது, பிஎச்இஎல் உருக்கு நிறுவனம் போன்ற பொதுத்துறை நிறுவனங்களை நலிவடையச் செய்து பன்னாட்டு கம்பெனிகளுக்கு தாரை வார்க்க எடுக்கும் முயற்சியேயாகும்.

மத்திய அரசின் மேற்கண்ட தொழில் கொள்கையினால் ஆலைமூடல், ஆட்குறைப்பு தொடர் கதையாகிவிட்டது. திருச்சி பிஎச்இஎல், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், ஊட்டி போட்டோ பிலிம் போன்ற தமிழகத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசு காட் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதன் மூலம் இந்தியாவின் இறையாண்மையே ஆபத்திற்குள்ளாகியுள்ளது. இந்தியச் சந்தையை உலகச் சந்தையோடு இணைப்பது என்ற அரசின் முடிவு இந்தியாவைப் பல வகைகளில் பாதித்து வருகிறது. பருத்தி, காபி, தேயிலை, சர்க்கரை, நூல் போன்ற பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்துவிட்டது. இதன் விளைவாக கோவை, சேலம், பெரியார், மதுரை, செங்கை, தென்னாற்காடு மாவட்டங்களில் கைத்தறி, விசைத்தறி, பஞ்சாலை, பனியன் தொழில்கள் கடுமையாக பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

4. மத்திய அரசு சமர்ப்பித்த பட்ஜெட்டுகளில் சாதாரண மக்கள் மீது வரிகளை சுமத்தி, முதலாளிகளுக்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டது. இதனால் அத்தியாவசிய பண்டங்களின் விலைகள் உயர்ந்துவிட்டது. அரிசி, கோதுமை, சர்க்கரை, பெட்ரோல், டீசல் போன்ற பொருட்களின் விலையை பலமுறை மத்திய அரசே உயர்த்தியது. இறக்குமதி பொருட்களின் மீதான வரியை குறைத்து வெளிநாட்டு முதலாளிகளுக்கு சலுகை அளித்ததால் சேலம் மேக்னசைட், பட்டுத்தொழில் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

5. நிதி நெருக்கடியை மெல்ல மெல்ல குறைப்பது என்ற பெயரில் கடந்த காலங்களில் மத்திய அரசு அமுலாக்கி வந்த சமூகநலத்

திட்டங்களுக்கான தொகை கணிசமாக வெட்டப்பட்டு விட்டது. சுகாதார வசதி பாதிக்கப்பட்டதோடு கல்வி, மருத்து வத்துறை தனியார் மயமாக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை கல்வியை கடைச்சரக்காக்கி வரு கிறது.

6. மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை, காட் ஒப்பந்த சரத்துக்களினால் இந்திய மக்கள் தொகையின் பெரும்பகுதி யினர் ஈடுபட்டுள்ள விவசாயத்துறையில் கடுமையான நெருக் கடி உருவாகியுள்ளது. உரவிலை உயர்வு, மின்கட்டண உயர்வு போன்று இடுபொருட்களின் விலை உயர்ந்ததோடு, விளைப் பொருட்களுக்கும் நியாய விலை கிடைக்கவில்லை.

கடலோரப் பகுதிகளில் இறால் பண்ணைகளை அனு மதித்து விளை நிலங்கள் மீன் பண்ணைகளாகி வருகின்றன. விவசாயத்தை நம்பியிருக்கும் லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களை பாதிப்பதோடு உணவுப் பொருள் உற்பத்தி யும் குறையும் அபாயம் உள்ளது. தமிழக கிழக்கு கடற்கரை யோரங்களில், புதுவை முதல் குமரி வரை இப்படிப்பட்ட பாதிப்பு உருவாகி இருக்கிறது. நாட்டின் அந்நியக் கடன் ரூ. 3 லட்சம் கோடியைத் தாண்டிவிட்டது. பிரேசில், மெக்சி கோவிற்கு அடுத்ததாக அதிகமான அந்நியக் கடன் பெற்றுள்ள நாடு இந்தியாதான்.

7. மொத்தத்தில் கடந்த 31/2 ஆண்டு காலமாக நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசு கடைப்பிடித்து வரும் நாசகரமான புதிய பொருளாதாரக் கொள்கைநாட்டு மக்களை கடுமையாக பாதிப்பதோடு, போராடிப் பெற்ற சுதந்திரத்திற்கே ஆபத்தை உருவாக்கி வருகிறது.

8. இந்த காலத்தில்தான் இதுவரை நாடு கண்டிராத ஊழல்கள் இந் தியாவில் அரங்கேறியது. ரூ. 8,000 கோடி பங்குசந்தை ஊழல், 5000 கோடி சர்க்கரை ஊழல், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் விற்பதில் ஊழல்கள், இதோடு நாட்டு பிரதமரே ஒரு கோடி லஞ்சமாக பெற்றார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி உள்ளார்.

மாநில அதிமுக அரசின் மக்கள் விரோத கொள்கைகள்

9. மாநிலத்தில் ஆளும் அதிமுக அரசு மத்திய அரசு கடைப்பிடித்து வரும் அதே பொருளாதாரக் கொள்கையை தமிழகத்தில் அமுலாக்கி வருகிறது. இதனால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டுள்ளதோடு, மக்களின் வாழ்க்கைத்தரமும் சரிந்து வருகிறது என பல நிபுணர்கள் கருத்து தெரிவித்து வருகிறார்கள்.

10. மாநில அரசுக்குச் சொந்தமான சிமிண்ட் ஆலைகள், அரக்கோணம் உருக்காலை, வெடிமருந்து தொழிற்சாலை போன்ற லாபகரமாக இயங்கும் பல பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்க்கும் கொள்கையை மாநில அதிமுக அரசு கடைப்பிடித்து வருகிறது.

11. மத்திய அரசும், மாநில அரசும் கடைப்பிடிக்கும் தொழிற் கொள்கையின் விளைவாக பல சிறிய, பெரிய ஆலைகள் மூடப்பட்டு விட்டன. பல ஆலைகள் நலிவடைந்து ஆட் குறைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

12. மத்திய அரசோடு போட்டி போட்டுக் கொண்டு மாநில அரசும் விலைகளை உயர்த்தியது. ஆண்டுதோறும் மின் கட்டணம், பஸ் கட்டணம், பால் விலை உயர்த்தப்பட்டு வருகிறது. அனைத்து அத்தியாவசியப் பண்டங்களின் விலையும் கடந்த மூன்றாண்டுகளில் கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு சாதாரண மக்களைக் கடுமையாக பாதித்து வருகிறது.

13. சுகாதாரம், மருத்துவம், கிராமப்புற வேலை வாய்ப்பு போன்ற சமூக நலத் திட்டங்களுக்கான தொகை ஒதுக்கீடு மாநில பட்ஜெட்டிலும் குறைக்கப்பட்டுள்ளது. மாநில அரசு மருத்துவமனைகளுக்கு ஒதுக்கும் நிதி வெட்டப்பட்டதால், நோயாளிகள் வெளியே காசு கொடுத்து மருந்து வாங்கும் நிலை உருவாகியுள்ளது. அரசு மருத்துவமனைகளில் பல பரிசோதனைகளுக்கு கட்டணம் வசூலிக்கப்படுகிரது.அரசு மருத்துவமனைகளை சீர்குலைத்து நோயாளிகளை அரசே தனியார் மருத்துவமனைக்கு தள்ளிவிடக் கூடிய கொள்கையை தமிழக அரசு கடைப்பிடித்து

வருகிறது. அத்துடன் அரசு மருத்துவமனைக்குள் பார்வை நேரம் தவிர நுழைவதற்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

14. மத்திய அரசின் கல்விக் கொள்கையைத்தான் மாநில அரசும் தமிழகத்தில் அமுலாக்கி வருகிறது. ஆண்டுதோறும் மாநில அரசு கல்விக் கட்டணத்தையும், தேர்வுக் கட்டணத்தையும் உயர்த்தி வருகிறது. போதுமான புதிய கல்லூரிகளைத் திறக்காமல் சுயநிதிக் கல்லூரிகளை துவக்க தனியாருக்கு அரசு அனுமதி அளித்து காசு படைத்தவர்களுக்கே கல்வி என்ற நிலைமையை மாநில அரசு உருவாக்கி உள்ளது. லட்சங்கள் இல்லாமல் மருத்துவக்கல்லூரிகளிலும், பொறியியற் கல்லூரிகளிலும் இடம் பிடிக்க முடியாது. கல்விக் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் அரசு கல்லூரிகளிலும் வசதியில்லாதவர்கள் கல்வி பயில முடியாத நிலை உருவாகி உள்ளது. உயர் கல்விக்கு அரசின் நிதி ஒதுக்கீடு முற்றாக நிறுத்தப்பட்டு விட்டது. பல்கலைக்கழகங்களே நிதி திரட்ட வேண்டும் என்ற அரசின் முடிவு உயர் கல்வியை கடுமையாக பாதிக்கும். பல்கலைக் கழக நிர்வாகங்களில் அரசின் தலையீடும் கல்வித் துறையை பாதித்து வருகிறது.

15. உள்ளாட்சி அமைப்புகளுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தப்படவில்லை. உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்கக்கூடிய, முறையான தேர்தல் நடத்தக் கூடிய மத்திய சட்டங்கள் வந்த பிறகும் மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்த மாநில அரசு மறுத்து வருகிறது.

16. சென்னை, மதுரை போன்ற மாநகராட்சி உட்பட உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால் குடிநீர், சாலைவசதி, சுதாகாரம் போன்ற அடிப்படை பிரச்சனைகள் கவனிப்பாரற்று கிடக்கின்றன.

17. மாநில அரசின் மக்கள் விரோத கொள்கை மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு எதிர்ப்புக் குரல் எழுப்பினால் அடக்குமுறை கொண்டு ஒடுக்குகிற நடைமுறைதான் மாநில அரசின் போலீஸ் கொள்கையாக உள்ளது. மக்களுக்கு பாதுகாப்பு

கொடுக்க வேண்டிய காவல் நிலையங்கள் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் நிலையங்களாக மாறிவருகின்றன. காவல் நிலைய மரணம், காவல் நிலைய கற்பழிப்பு தொடர்கதையாகி வருகிறது. இப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்த காவல் துறையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காததால் கொடுமை தொடர்கிறது. மேலும், கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற நிகழ்ச்சிகளும் அதிகரித்து வருகின்றன.

18. ஜனநாயக உரிமைகளுக்கு மாநில அரசு வேட்டு வைத்து வருகிறது. சட்டமன்றத்தில் ஆளும் கட்சியை விமர்சனம் செய்தால் பேசுவதற்கே அனுமதி மறுப்பதும், மீறிப் பேசினால் அடிப்பது உட்பட நாடாளுமன்ற ஜனநாயகம் கூட அதிமுக ஆட்சியில் கேலிக்கூத்தாகி விட்டது. சட்டமன்றத்திற்கு வெளியிலும், ஆளும் கட்சியை எதிர்த்து தர்ணா, உண்ணாவிரதம், ஊர்வலம் போன்ற இயக்கங்களுக்கும் பல நேரங்களில் அனுமதி மறுக்கப்படுகிறது.

19. தங்களுக்கு இசையாத அதிகாரிகளை ஆளும் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்திற்குள்ளேயே தாக்குவது போன்ற சம்பவங்கள் சாதாரணமாகிவிட்டன. ஆளும் கட்சிக்கும், அரசுக்கும் எதிராக தீர்ப்பளிக்கும் நீதிபதியை மிரட்டுவது என்ற அபாயகரமான போக்கும் உருவாகி விட்டது. அரசுக்கு எதிராக தீர்ப்பளித்த உயர்நீதிமன்ற நீதிபதியை மிரட்ட அவர் உறவினர் மீது காவல் துறையினர் மூலம் அரசு பொய் வழக்கு போட்டு மிரட்டியது அனைவரும் அறிந்த உண்மை.

20. ஆளும் கட்சியை விமர்சனம் செய்யும் பத்திரிகையாளர்களும், பத்திரிகை அலுவலகங்களும் ஆளும் கட்சியின் குண்டர்களால் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். தராசு அலுவலகத்தில் வேலை செய்த இருவர் இப்படிப்பட்ட தாக்குதலில் பலியானார்கள்.

21. இந்தப் போக்கு ஆளும் கட்சிக்குள்ளேயே தலைமையை எதிர்க்க கூடியவர்களையும் தாக்கும் நிலைமைக்கு சென்றுள்ளது. ஆளும், கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் பட்டப்

பகலில் தாக்கப்பட்டதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

22. அரசின் நிகழ்ச்சிகளுக்கு ஆடம்பரமாக லட்சக்கணக்கில் அரசுப் பணம் விரயமாக்கப்படுகிறது. சுயநலத்திற்காக ஆளும் கட்சிக்காரர்கள் முதலமைச்சருக்கு துதிபாடுவது, விளம்பரம் செய்வது, கட்-அவுட் கலாச்சாரம் என்று மக்கள் பேசும் அளவுக்கு தமிழக அரசியலில் ஒரு சீரழிந்த கலாச்சாரத்தை ஆளும் கட்சி உருவாக்கி வருகிறது.

23. மாநிலத்தில் ஆளும் கட்சியின் ஊழல் எங்கும் நிறைந்து வழிகிறது. முதலமைச்சர் முதல் கீழ் மட்டம் வரை ஊழல் முதலாளிகள் தொழில் துவக்க அனுமதி கொடுக்க லஞ்சம், பொதுப்பணித்துறை போன்ற அரசு வேலைகளில் காண்ட்ராக்ட் கொடுக்க லஞ்சம், ஆசிரியர், அரசு ஊழியர், மின்வாரிய ஊழியர், போலீஸ் என்று வேலைக்கு ஆள் சேர்ப்பில் ரேட் தீர்மானித்து பணம் வசூல் செய்வது, சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதினாலும் "பாஸ்" போட, வேலை கொடுக்க லஞ்சம் என்று அதிமுக ஆட்சியில் ஊழல் என்பது ஒரு தனி தொழிலாக மாறிவிட்டது.

24. கடந்த 3 ஆண்டு காலமாக அதிமுக அரசு கடைப்பிடித்து வரும் மக்கள் விரோத கொள்கை, ஊழல், போலீஸ் அராஜகம் ஆகியவைகளினால் ஆளும் அரசு மீது மக்கள் மத்தியில் அதிருப்தி உருவாகி வருகிறது.

25. கடந்த மாநில மாநாடு தீர்மானித்த கடமைகளை நிறைவேற்றுகின்ற அடிப்படையில் கடந்த 3 ஆண்டு காலமாக மத்திய அரசின் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்தும், வகுப்புவாத சக்திகளை எதிர்த்தும், மாநில அதிமுக அரசின் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்தும் சுயேச்சையாகவும், இடதுசாரி கட்சிகளுடன் இணைந்தும் மேலும் மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளுடன் சேர்ந்தும் பல இயக்கங்கள் நடத்தியுள்ளோம். இக்காலத்தில் நமது கட்சி கடைப்பிடித்த அணுகுமுறை, சுயேச்சையாக, கூட்டாக நடத்திய இயக்கங்கள், அவ்வப்பொழுது உருவான அரசியல் சூழ்நிலைமைகளில் மற்ற கட்சி

கள் கடைப்பிடித்த அணுகுமுறை ஆகியவற்றை அடுத்த பகுதியில் பரிசிலிப்போம்.

கடந்த மாநில மாநாடு தீர்மானித்த அரசியல் கடமைகள்

26. "நமது கட்சி முன்வைத்துள்ள மாற்றுக் கொள்கைகளை முழுமையாக நமது சுயேச்சையான மேடைகள், பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலம் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். நமது சுயேச்சையான நடவடிக்கைகளின் மூலம் மேலும் மேலும் அதிகமான மக்களை நமது தலைமையில் திரட்ட வேண்டும்".

27 "முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ வர்க்க கொள்கைகளுக்கு மாற்றான பாதையில் மக்களை அணிதிரட்ட, உண்மையான மாற்றாக இடதுசாரி ஜனநாயக அணியைக் கட்ட, இடதுசாரி சக்திகளின் பங்கும், பலமும் அதிகரிக்க வேண்டும்".

28. "தமிழ்நாட்டில் இன்றைய அரசியல் நிலைமையில் நாம் பல்வேறுவிதமான அரசியல் பிரச்சனைகளை எதிர்நோக்குகிறோம். பல்வேறுவிதமான கடமைகளையும்நிறைவேற்ற வேண்டியுள்ளது. மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகள், வளர்ந்து வரும் வகுப்புவாத அபாயம், உழைக்கும் மக்களை சாதிய அடிப்படையில் பிளவுபடுத்தும் போக்குகள், சீர்குலைவு - பிரிவினைவாத சக்திகள் தலைதூக்கி வருவது, குறிப்பாக தமிழ்நாட்டில் தொடர்ந்து நீடித்து வரும் எல்டிடிஇ நடவடிக்கைகளும் அவர்களுக்கு ஆதரவான குழுக்களின் செயல்பாடுகளும், மத்திய ஆளும் கட்சியுடன் கூட்டு சேர்ந்து அவர்களின் பிற்போக்கான கொள்கைகளைப் பின்பற்றி வரும் அதிமுக அரசு, அதிமுக - காங்கிரஸ் அரசியல் கூட்டு, இவர்கள் மக்கள் மீதும் - எதிர்க்கட்சிகள் மீதும் தொடுக்கும் தாக்குதல்கள் - இவற்றை முறியடிக்க விரிவான மக்கள் போராட்டங்களை உருவாக்க வேண்டும். மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் அனைத்தையும் இதில் ஒன்றுபடுத்த வேண்டும்".

சுயேச்சையான இயக்கங்கள்

29. நமது கட்சியின் சுயேச்சையான இயக்கத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று மத்தியக்குழு வலியுறுத்தி வழி காட்டியது. இதனடிப்படையில் கடந்த 31/2 ஆண்டுகளில் சக்தி யான அளவில் நாம் சுயேச்சையான இயக்கங்கள் நடத்தி இருக் கிறோம்.

14வது அகில இந்திய கட்சி காங்கிரஸ்

30. சென்னையில் நடத்திய இம்மாநாடு இக்காலத்தில் நாம் நிறை வேற்றிய மிகப்பெரிய பணியாகும். இது மாநிலந்தழுவிய ஒரு அரசியல் இயக்கமாக நடைபெற்றது. நிதி வசூலும், பொருட்கள் வசூலும், பிரச்சாரமும் மாநிலம் முழுவதும் நடைபெற்றது. சென்னையில் இம்மாநாட்டு ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப் பட்டன. சுவரெழுத்துக்களும், விளம்பரத்தட்டிகளும் கண் ணைக் கவரும் வண்ணம் இருந்தன. கட்சிக் காங்கிரசை யொட்டி தமிழ், மலையாள, தெலுங்கு கலை நிகழ்ச்சிகளும் நடத் தப்பட்டன. கட்சியின் தலைவர்களும், பிரதிநிதிகளும், அயல் நாட்டுப் பிரதிநிதிகளும் குறைவேதும் இல்லாமல் தங்குவதற் கும், உணவருந்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பாது காப்பு ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டன.

31. இம்மாநாட்டையொட்டிய ஊர்வலமும், பொதுக்கூட்டமும் சிறப்பாக அமைந்தது. சென்னையில் நடைபெற்ற கட்சிக் காங் கிரஸ் நிகழ்ச்சியின் பொது மக்கள் மத்தியிலும், இதர அரசியல் கட்சிகளிடத்திலும் நமது கட்சியைப் பற்றிய மதிப்பினை உயர்த்தியுள்ளது. நமது அணிகளுக்கு பெருத்த உற்சாகத்தை ஏற்படுத்தியது. பத்திரிகைகளிலும் நல்ல விளம்பரம் கிடைத்தது.

விலைவாசி உயர்வினை எதிர்த்து

32. 1992, மார்ச் மாதத்தில் மத்திய - மாநில அரசுகளின் பொரு ளாதார கொள்கையையும், அதன் விளைவாக எழுந்த விலை வாசி உயர்வையும் எதிர்த்து மாநிலந்தழுவிய அளவில் நமது கட்சியின் சார்பில் ஒரு மாத பிரச்சார இயக்கம் நடத்தினோம். மார்ச் 4 அன்று மாநிலம் முழுவதிலும் மத்திய - மாநில அரசு அலுவலகங்கள் முன்பு கட்சியின் சார்பில் மறியல் போராட்

டம் நடத்தினோம். மாநிலம் முழுவதும் 253 மையங்களில் 25,953 தோழர்கள் கலந்து கொண்டனர். இதில் 3,729 பெண்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. விலைவாசி உயர்வை எதிர்த்து நடத்திய பிரச்சார இயக்கத்திற்கும், மறிய லுக்கும் மக்கள் மத்தியில் வரவேற்பிருந்தது.

டங்கல் திட்டத்தை எதிர்த்து

33. நமது கட்சியின் மத்தியக்குழுவின் அறைகூவலின்படி டங்கல் திட்டத்தை எதிர்த்து மாநிந்தழுவிய பத்து நாட்கள் பிரச்சார இயக்கம் நடத்தினோம். டங்கல் திட்டத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் முழுவதையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியவில்லை என்றாலும், டங்கல் திட்டம் குறித்து உருகுவே சுற்று பேச்சுவார்த்தைய நடந்து கொண்டிருந்தபோது மற்ற கட்சிகள் எல்லாம் இதைப்பற்றி ஏதும் பேசாதபோது, நாம் எடுத்த சுயேச்சையான நடவடிக்கை - ஒரு பகுதி மக்கள் மத்தியில் டங்கல் திட்டத்தின் ஆபத்தினை விளக்க முடிந்தது.

அதிமுக அரசின் மீது குற்றப்பத்திரிகை

34. அதிமுக ஆட்சியின் ஓராண்டு சாதனை என ஆளும் கட்சி யினர் விழா கொண்டாட திட்டமிட்டனர். ஓராண்டு அதிமுக ஆட்சியில் நடந்த போலீஸ் அராஜகம், ஊழல், விலைவாசி உயர்வு போன்ற அதிமுக அரசின் அவலங்களை விளக்கி 'அதிமுக அரசின் மீது குற்றப்பத்திரிகை' என்ற தலைப்பில் ஒரு லட்சத்து 25,000 பிரசுரங்கள் கொண்டு வந்து மாநிலம் முழுவதும் பட்டிதொட்டிகளில் எல்லாம் அந்த பிரசுரத்தை விற் பனை செய்து பிரச்சார இயக்கம் நடத்தினோம். நாம் கொண்டு வந்த பிரசுரத்திற்கும், நடத்திய பிரச்சார இயக்கத்திற் கும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பிருந்தது.

வகுப்புவாதத்தை எதிர்த்து

35. அயோத்தியில் கரசேவை நடத்தி வகுப்புக் கலவரத்தை தூண்டிவிட பிஜேபி திட்டமிட்டு செயல்பட்ட போது அதை எதிர்த்து, அம்பலப்படுத்தும் வகையில் மாநிலம் முழுவதும நமது கட்சியின் சார்பில் பிரச்சார பொதுக்கூட்டங்கள் 1.12.92 அன்று நடத்தினோம்.

உள்ளாட்சி தேர்தல் கோரி மற்றும் மக்கள் பிரச்சனையை வலியுறுத்தி கோட்டை நோக்கி பேரணி

36. விலைவாசி உயர்வு, குடிநீர் பிரச்சனை போன்ற பல பிரச்சனைகள் மக்களைதாக்கியபோது, இப்பிரச்சனைகள் மீதும் பல ஆண்டுகாலமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தாததை கண்டித்து தேர்தல் நடத்த கோரியும் நமது கட்சியின் சார்பில் தென் மாவட்டங்களில் இருந்தும் கட்சி அணிகளை திரட்டி சென்னையில் 8.2.93 அன்று கோட்டை நோக்கி பேரணி நடத்தினோம். மக்கள் பிரச்சனைகள் மீது நாம் நடத்திய இந்த சுயேச்சையான பேரணிக்கு பத்திரிக்கைகள் முக்கியத்துவம் கொடுத்தன.

திருச்சி அரசியல் மாநாடு

37. 1993ம் ஆண்டில் இரண்டு நாட்கள் நமது அரசியல் கொள்கையை பிரச்சாரம் செய்வதற்காக அரசியல் மாநாடு நடத்தினோம். அது மிகச் சிறப்பான முறையில் நடந்தது என்று கூறினால் மிகையாகாது. . மாநிலம் முழுவதிலுமிருந்து நமது தோழர்கள் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். கணிசமான அளவில் குடும்பத்துடன் வந்தனர். பெண்களின் பங்கெடுப்பு கணிசமாக இருந்தது. வந்தவர்கள் சிரமம் பாராமல் இரண்டு நாட்களும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. திருச்சி மக்களிடமும் இம்மாநாடு நமது கட்சியைப் பற்றி நல்ல பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளது. திருச்சி மாவட்டக்குழு, இம்மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தியது. மாநாட்டு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக குன்றக்குடி அடிகளார் உள்ளிட்ட கட்சிக்கு அப்பாற்பட்ட பிரமுகர்களையும் அழைத்து நடத்திய மத நல்லிணக்க கருத்தரங்கம் நல்ல பிரதிபலிப்பை உண்டாக்கியது. இம்மாநாட்டின் செய்திகளும் பத்திரிகைகளில் குறிப்பிடத்தக்க அளவில் இடம் பெற்றது. மத்திய - மாநில அரசுகளின் கொள்கைகளைப் பற்றிய நமது விமர்சனத்தையும், மாற்றுக் கொள்கையையும் மக்களிடம் கொண்டு செல்ல இம்மாநாடு பயன்பட்டுள்ளது.

பிரச்சார பயணம்

38. பொதுவாக விரிவான பகுதி மக்களுக்கு, குறிப்பாக கிராமப் புற மக்களுக்கு நமது கொள்கைகளை எடுத்துக்கூற, குறிப்பாக மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளின் அபாயத்தை விளக்க, வகுப்புவாதம் நாட்டிற்கும், மக்களுக்கும் ஏற்படுத்தும் நாசகர விளைவுகளை எடுத்துக்காட்ட, மாநில அரசின் மக்கள் விரோத, ஜனநாயக விரோதக் கொள்கைகளை அம்பலப் படுத்த 1994 ஜனவரி 21 முதல் 31 வரை மாநிலத்தின் 5 முனைகளில் இருந்து வாகனப் பிரச்சாரப் பயணம் சென் னையை நோக்கி வந்தது. இது ஒரு சிரமமான பணியாக இருந்த போதிலும், மிகப் பயனுள்ள பணியாக இருந்தது. கூட்டங் களுக்கு வராத, நமது பத்திரிகைகளைப் படிக்காத மக்களிடம் நமது கொள்கையை ஓரளவு கொண்டு செல்வதற்கு இது பயன் பட்டுள்ளது. கட்சித் தோழர்களின் கடினமான உழைப்பினால் இந்தப் பயணம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. கட்சி அணி கள் முழுவதையும் விறுவிறுப்பாக செயல்பட வைக்க இந்தப் பிரச்சார இயக்கம் பயன்பட்டது. இந்தப்பிரச்சார இயக்கத்தை யொட்டி சென்னையில் நடந்த பேரணி பொதுக்கூட்டத்தில் தோழர் சுர்ஜித் கலந்து கொண்டார். பிரச்சார இயக்கம் மாநிலம் முழுவதும் உண்டாக்கிய பிரதிபலிப்பை, சென்னை பேரணியும், பொதுக்கூட்டமும் உருவாக்கவில்லை.

39. இதே காலத்தில் தமிழகத்தில் நடைபெற்ற சில கொடுமை களுக்கு எதிராக வலுவான மக்கள் இயக்கத்தை உருவாக்குவ திலும் நமது கட்சி முன்நின்றது.

குடவாசல் தோழர் தங்கய்யன் கொலை

40. மத்திய அரசுக்கெதிரான மறியல் போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர் தங்கய்யன் காவல் நிலையம் முன்னாலேயே அதிமுக ரவுடி ராஜேந்திரன் என்பவனால் கொலை செய்யப் பட்டதைத் தொடர்ந்து குற்றவாளிகளை கைது செய்து வழக்கு தொடுக்க வேண்டும் என்ற போராட்டத்தை தொடர்ந்து நடத்தி னோம்; நடத்தி வருகிறோம்.

41. குடவாசலில் தோழர் ஜீ.வி. காலவரையற்ற உண்ணாவிரதம், தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், சட்டமன்றத்திற்குள்ளே அம்பலப்படுத்தும் போராட்டம் என தொடர்ந்து இயக்கங்கள் நடத்தி வந்திருக்கிறோம். தோழர் ஜீ.வி. உண்ணாவிரதத்தை அவர் கைதாகும் வரை தொடர்ந்திருக்க வேண்டும். நீதிமன்றத் திலும் போராடி வருகிறோம். எனினும், இதுவரை அதிமுக அரசு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க முன்வர வில்லை.

கண்மணி படுகொலை

42. நாகை மாவட்டத்தில் கொரடாச்சேரி ஒன்றியக்குழு உறுப் பினராக இருந்த தோழர் கண்மணியை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் படுகொலை செய்துவிட்டார்கள். இதைக் கண்டித்து அனைத்துக்கட்சி கண்டன பொதுக்கூட்டம் நடந் துள்ளது. நமது குற்றச்சாட்டில் கண்டுள்ளவர்கள் மீது காவல் துறையினர் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர்.

காவல்நிலைய படுகொலை, கற்பழிப்பை எதிர்த்து

43. சிதம்பரம் காவல் நிலையத்தில் பத்மினியை கற்பழித்ததையும், அவரது கணவரை கொன்றதையும் எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சி தமிழகம் தழுவிய அளவில் வலுவான இயக் கத்தை நடத்தியது. வள்ளலார் மாவட்டக் குழுவும் மாநிலக் குழுவும் சேர்ந்து எடுத்த தொடர் முயற்சிகளின் விளைவாக வும், நீதிமன்ற நடவடிக்கை மூலமும், தமிழக அரசின் அடாவ டித்தனத்தை சற்று பின்னுக்குத் தள்ள முடிந்தது. பத்மனிக்கு நிவாரணமும், வேலையும் பெற முடிந்தது. சம்பந்தப்பட்ட போலீஸ்காரர்கள் மீது வழக்கு தொடர நிர்ப்பந்தம் உருவாக் கப்பட்டது. மேலும் வள்ளலார் மாவட்டத்தில் முத்தாண்டிக் குப்பம் காவல் நிலையத்தில் வசந்தா கற்பழிப்பு, படுகொலை, கம்மாவரம் காவல்நிலையப் படுகொலை ஆகிய பிரச்சனை களிலும் கட்சி தலையிட்டு இயக்கம் நடத்தியது. ராமேஸ்வரம், நாகை மாவட்டத்தில் மாயவரம் பாலாகுடி, காமராஜ் மாவட்டம் வலையப்பட்டி சென்னை மாவட்டத்தில் மைலாப் பூர் விளாத்திகுளம் போன்ற பகுதிகளில் காவல் நிலைய

மரணம், கற்பழிப்பு கொடுமைகளை எதிர்த்து இயக்கம் நடத்தி னோம்.

வாச்சாத்தி கொடுமைக்கெதிராக

44. தருமபுரி மாவட்டம் வாச்சாத்தி மலைப்பகுதியில் வாழும் மக்கள் மீது காட்டு இலாகா அதிகாரிகளும், போலீசாரும் மிருகத்தனமாக தாக்குதலைத் தொடுத்தனர். பெண்களை கற்பழித்தனர். இப்பிரச்சனையிலும் நமது கட்சி தலையிட்ட பிறகுதான் உண்மை வெளிவந்தது. காட்டிலாகா அதிகாரிகள், காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தோம். உடமைகள் அனைத் தையும் இழந்த மக்கள் மறுவாழ்வு பெறுவதற்குத் தேவையான துணிமணிகள், பண்டபாத்திரங்கள், உணவுப் பொருட்கள் ஆகியவைகளை மாநிலம் முழுவதும் பெரும் அளவில் வசூலித்து அந்த மக்களுக்கு அளித்தோம்.

45. இந்தப் பிரச்சனையில் நமது மாவட்டக்குழு தோழர்கள் உடனடியாக அங்கு செல்லாததும், நடவடிக்கை எடுக்காத தையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இதுபோன்ற நிலைமை இனி எங்கும் ஏற்படக்கூடாது. இதுபோன்ற பிரச்ச னையில் உடனே செயலில் இறங்க வேண்டும்.

46. வாச்சாத்தி மக்களுக்கு நியாயம் கிடைக்க தோழர் பி.சண்முகம் அரூரில் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்த தும், பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்டு சென்னையில் நடத் திய ஆர்ப்பாட்டமும், பத்திரிகைகள் உட்பட இதர பகுதி மக்க ளின் கவனத்தை ஈர்க்கவும் அரசைப் பின்னுக்குத் தள்ளவும் உதவியது.

சின்னாம்பதி கற்பழிப்பு

47. கோவை அருகே சின்னாம்பதி கிராமத்தில் மலைவாழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலையும், அந்த கிராம பெண்கள் கற்பழிக்கப்பட்டதையும் மறைக்க தமிழக அரசு பெருமுயற்சி செய்தது. நமது கட்சியும், மாதர் சங்கமும் இது விஷயத்தில் உறுதியாக தலையிட்டதன் விளைவாக பிரச்சனைகளை வெளிக்கொணரவும், முறையான நீதிவிசாரணை நடைபெற

வும் வழிவகுத்தது. தொடர்ந்து இப்பிரச்சனையில் தலையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உத்தரவாதம் செய்ய வேண்டி யுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிப்பும் நமது தலையீடும்

48. சிதம்பரனார் மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியான நாலு மூலைக்கிணறு என்ற கிராமத்தில் போலீசார் அத்துமீறி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். இதில் 2 குழந்தைகள் உட்பட 8 பேர் படுகாயமடைந்தனர். அத்தோடு காவல் துறையினர் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளையும், கடைகளையும் சூறையாடினர், பெருத்த பொருள் சேதம் ஏற் பட்டது.

49. காவல்துறை தாழ்த்தப்பட்ட மக்கள் மீது இப்படி அராஜகம் நடத்தியதைக் கண்டித்து சிதம்பரனார் மாவட்டக்குழு ஊர்வலம், கண்டன பொதுக்கூட்டம் என நடத்தியது. மாவட் டம் பூராவும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. சுவரொட் டிகள் வெளியிட்டது, பத்திரிகைகளுக்குச் செய்திகள் கொடுத் தது.

50. வீதியில் இறங்கி போராட்டம் நடத்தியது மட்டுமல்லாது, மாதர் சங்கம் மூலம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர கட்சி வழி காட்டியது. அந்த வழக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரண மாக தமிழக அரசு துப்பாக்கி சூட்டில் காயப்பட்டவர்களுக்கு தலா ரூ. 10 ஆயிரம் வீதம் ரூ. 80 ஆயிரம் நஷ்ட ஈடு வழங் கியது. மோசமாக பொருள் சேதம் அடைந்தவர்களுக்கு தலா ரூ. 2 ஆயிரம் வழங்கியது. வழக்கு நடந்து வருகிறது.

51. இப்பிரச்சனையில் நம் மாவட்டக்குழு தொடர்ந்து செயல் பட்டதால் நாலு மூலைக்கிணறு கிராமம் மட்டுல்ல, அதை யொட்டிய பல கிராமங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே நம் கட்சிக்கு செல்வாக்கு வளர்ந்துள்ளது. மற்ற கட்சியினர் அந்த கிராமத்துக்கு போக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

52. காலத்தே கட்சி தலையிட்டு உதவி செய்கிறபோது தாழ்த்தப் பட்ட மக்களிடம் நமக்கு எவ்வளவு செல்வாக்கை உருவாக்க

முடியும் என்பதை நாலுமூலைக்கிணறு கிராமத்தில் பார்க்க முடிந்தது.

பிரேமானந்தா சாமியாரை எதிர்த்து

53. புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரேமானந்தா சாமியார் ஆசிரமம் அமைத்து பெண்களை கற்பழிப்பது, படுகொலை செய்வது என்ற அக்கிரமத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வந்து அம்பலப்படுத்தியதும் நமது இயக்கம்தான்.

54. இப்படி தொடர்ந்து பல பிரச்சனைகளில் நாம் தனியாக தமிழகம் முழுவதும் போராடினோம் என்பது மட்டுமல்ல, இவற்றில் சில பிரச்சனைகளில் அரசைப் பின்னுக்குத் தள்ளவும் நம்மால் முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இடதுசாரி கட்சிகளின் கூட்டு இயக்கம்

55. மத்திய-மாநில அரசுகளின் மக்கள் விரோத கொள்கையை எதிர்த்து தமிழகத்தில் இடதுசாரி கட்சிகளின் கூட்டு இயக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் சிபிஐயுடனான கூட்டு இயக்கத்திற்கு நாம் தொடர்ந்து முன்முயற்சி எடுத்தோம்.

தஞ்சை பேரணி

56. நமது கட்சியின் அகில இந்திய தலைமையின் முன் முயற்சியினால் மேற்குவங்கம், கேரளா, ஆந்திரா போன்று பல மாநிலங்களில் இடதுசாரி கட்சிகளின் கூட்டு பேரணி நடந்தது. இதை ஒட்டி தமிழகத்தில் இப்பேரணியை நடத்த நாம் முன்முயற்சி எடுத்தோம். கோவை, சென்னை என்று நாம் பல ஆலோசனைகளை முன் வைத்து பிறகு சிபிஐயை இணைத்து செல்ல வேண்டுமென்ற அடிப்படையில் தஞ்சையில் பேரணி நடத்த திட்டமிட்டோம்.

57. 28.3.94 அன்று தஞ்சையில் நடைபெற்ற இரண்டு கட்சிகளின் பேரணி எதிர்பார்த்ததைவிட வலுவுள்ளதாக அமைந்தது. இரு அணிகளுக்கும் பெரிதும் நம்பிக்கையூட்டுவதாக அமைந்தது. இரண்டு கட்சிகளின் அணிகளும், ஆதரவாளர்களும் உற்சாகத்தோடு பங்கேற்றனர். பார்வர்ட் பிளாக் சார்பில் அதன் அணிகளைப் பேரணிக்கு திரட்டவில்லையென்றாலும் அக்

கட்சியின் அகில இந்திய தலைவரும், மாநிலத் தலைவரும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. மூன்று இடதுசாரி கட்சிகளின் அகில இந்தியத் தலைவர்கள் பங்கேற்ற இந்த பேரணி நல்ல பிரதிபலிப்பை உருவாக்கியதுடன், பத்திரிகை, தொலைக் காட்சி ஆகியவற்றில் பெரும் விளம்பரத்தையும் பெற்றது.

சட்டமறுப்பு இயக்கம்

58. மத்திய அரசின் நாசகரமான புதிய பொருளாதாரக் கொள்கை, அது கையொப்பமிட்டுள்ள டங்கல் ஒப்பந்தம் அனைத்துப் பகுதி மக்களையும் கடுமையாக பாதித்து வருவதோடு, நாட்டு சுதந்திரத்திற்கே ஆபத்து உருவாகி வருவதை எதிர்த்து நாடு தழுவிய அளவில் சட்டமறுப்பு இயக்கத்திற்கு இடதுசாரி கட்சிகள் அறைகூவல் விடுத்தன. இரண்டாவது சுதந்திரப்போர் என்று சொல்லுகின்ற அளவிற்கு அகில இந்திய அளவில் நடந்த இயக்கத்தை தமிழகத்தில் நடந்த நமது கட்சி முன்முயற்சி எடுத்து சிபிஐ தலைமையுடன் பேசினோம்.

59. சட்டமறுப்பு இயக்கத்தை விளக்கி பிரச்சார இயக்கம் நடத்த திட்டமிட்டோம். அதை சிபிஐ தலைமை ஏற்றுக்கொண்டாலும் பல மாவட்டங்களில்சிபிஐ தலைமை முன்வரவில்லை. சட்டமறுப்பு இயக்கத்தை ஆகஸ்ட் 16முதல் செப்டம்பர் 9 வரை தொடர்ச்சியாக மறியல் என்ற வடிவத்தில் நடத்த வேண்டும் என்று நாம் வலியுறுத்தியபோது ஒரு நாள் போதும் என்று சிபிஐ தலைமை கூறியது. பிறகு சிபிஐயின் அகில இந்திய தலைமையுடன் விவாதித்ததன் பேரில் தொடர்ச்சியாக நடத்த சிபிஐ தலைமை ஏற்றது.

60. மாநிலம் முழுவதும் நடந்த சட்டமறுப்பு இயக்கத்தில் திண்டுக்கல், மதுரை பகுதிகளில் மட்டும் பார்வர்டு பிளாக்கும் கலந்து கொண்டது.

61. அகில இந்திய அளவில் நடைபெற்ற இந்த இயக்கத்தில் தமிழகத்தில் நமது பங்கு பிரதானமானது. இரண்டு கட்சிகளின் சார்பிலும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். இதில் நமது கட்சியின் சார்பில் 92 ஆயிரம் பேரும், சிபிஐ சார்பில் 82 ஆயிரம் பேரும் கலந்து கொண்டனர்.

இதில் பெரும்பகுதி மாவட்டங்களில் நமது தோழர்கள் சிபிஐ யைவிட கூடுதலாக கலந்து கொண்டனர். சிபிஐ சார்பில் கலந்து கொண்ட 82 ஆயிரம் பேரில் சுமார் 50 ஆயிரம் பேர் நாகை மாவட்டத்தைச் சேர்ந்தோர் என்பது கவனிக்கத்தக்கது. எல்லா மாவட்டங்களிலும் அவர்களின் முன்முயற்சி இல்லை. சில மாவட்டங்களில் சிபிஐ மாவட்டத்தலைமை நமது கட்சி யுடன் இணையாமல் தனியாக மறியல் செய்தன.

இடதுசாரி கட்சிகளின் ஒற்றுமைக்காக நாம் எடுத்த முயற்சியும், சிபிஐயின் அணுகுமுறையும்

62. கடந்த மாநில மாநாடு தீர்மானித்த அடிப்படையில் சிபிஎம், சிபிஐ ஒற்றுமையை பலப்படுத்த நாம் தொடர்ந்து முயற்சி எடுத்து வந்திருக்கிறோம். தமிழக அரசியல் நிலை குறித்து சிபிஐ தலைவர்களுடன் தொடர்ந்து விவாதித்து வந்திருக் கிறோம். 1993ம் ஆண்டு இறுதியில் நமது கட்சியின் அகில இந்திய தலைமையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் தமிழ கத்தில் நமது கட்சியின் முயற்சியால் சிபிஎம் - சிபிஐ ஒருங் கிணைப்புக்குழு அமைக்கப்பட்டது. தஞ்சைப் பேரணி பற்றி யும், சட்டமறுப்பு இயக்கம் பற்றியும் ஒருங்கிணைப்புக்குழு விவாதித்து முடிவு செய்தது.

63. தஞ்சைப் பேரணி முடிந்ததை அடுத்து, மயிலாப்பூர் - பெருந் துறை தேர்தல்களுக்கான அரசியல் அறிவிப்பைத் தொடர்ந்து சிபிஐ - திமுக ஆதரவு பெற்றுபெருந்துறையில் போட்டியிடு வது என்ற நிலை எடுத்திருந்தனர். சிபிஐ தலைமை பெருந் துறையில் திமுக ஆதரவுடன் போட்டியிடப் போவதாகவும் அதற்கு நமது ஆதரவு தேவை என்று ஒரு கடிதத்தையும் நமக்கு கொடுத்தது.

64. கூட்டாக ஒரு அரசியல் நிலை எடுக்க சிபிஐ தயாராக இல்லாத நிலையில் திமுகவின் காங்கிரஸ் உறவு குறித்த ஊசலாட்டம் தொடரும் நிலையில், நாம் பெருந்துறை மயிலாப்பூர் இடைத் தேர்தல் குறித்த நமது சுயேச்சையான நிலையை எடுக்க வேண்டி வந்தது. அரசியல் தலைமைக்குழுவின் ஆலோசனை யையும் பெற்று, பெருந்துறையில் தனிமேடையில் சிபிஐயை

ஆதரிப்பது என்றும், மயிலையில் பொருத்தமான ஒரு சுயேச்சை வேட்பாளரை ஆதரிப்பது என்றும் நிலையெடுத்து நமது அரசியல் நிலையில் நின்று போராடினோம்.

65. இந்தத் தேர்தல் காலத்திலேயே சிபிஐ தலைவர் மாணிக்கம் நமது கட்சியை விமர்சித்து, சிபிஐக்கு சங்கடம் ஏற்படுத்துவதற்காகவே நாம் இப்படி ஒரு நிலை எடுத்திருப்பதாக பகிரங்கமாக அறிவித்தார். அன்றைய நிலையில் இடதுசாரி கட்சிகளின் ஒற்றுமை கருதி நாம் இதனை பெரிதாக ஆட்சேபிக்காமல் விட்டோம். தேர்தலுக்குப் பின்னர் அவர்கள் நம்மோடு கூட்டு இயக்கத்துக்கு வருவதற்கான தயக்கம் நீடித்தது. குடவாசல் தங்கையன் கொலை சம்பந்தமாக அதிமுகவைக் கண்டித்து கூட்டறிக்கை விடுவதற்கு கூட மதிமுக கையெழுத்திட்டால் தாங்கள் அக்கூட்டத்திற்கு வரமாட்டோம் என தயக்கம் காட்டினர். பின்னர் அவர்களின் மத்திய கவுன்சில் தலையீட்டின் பேரில் கூட்டியக்கத்திற்கு வந்தனர்.

66. இதற்குப்பின் அக்டோபர் மாதத்தில் சென்னையில் தோழர் சுர்ஜித் அவர்களும், பி.ஆர்.சி.யும் கலந்து கொண்டு நமது மாநிலக்குழுக் கூட்டத்தில் மத்திய - மாநில அரசுகளுக்கு எதிராக ஒரு ஐந்தம்ச கோரிக்கை உருவாக்கப்பட்டது. இந்த கோரிக்கையின் அடிப்படையில் சிபிஐ ஏற்றுக்கொண்டால் இரு கட்சிகளும் கூட்டாக அழைப்பு விடுத்து திமுக, மதிமுக, ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகளை அழைத்து கூட்டு இயக்கம் நடத்துவது, சிபிஐ ஏற்க மறுத்தால் நாம் முன்முயற்சி எடுத்து இந்தக் கட்சிகள் அனைத்தையும் அழைத்து கூட்டு இயக்கம் நடத்துவது என தீர்மானித்தோம்.

இதற்கிடையில் நமது அகில இந்திய தலைவர்கள் சிபிஐ அகில இந்திய தலைவர்களோடு பேசி தமிழகத்தில் மக்கள் பிரச்சனைகள் மீது இயக்கம் நடத்த சிபிஎம், சிபிஐ கூட்டாக மற்ற கட்சிகளுக்கு அழைப்புவிடலாம் என முடிவானது. இருப்பினும், மக்கள் கோரிக்கைகளுக்காக கூட்டாக மற்ற கட்சிகளை அழைப்பதற்கு மாநில சிபிஐ தலைமை ஏற்காதது மட்டுமின்றி - மதிமுக வந்தால் நாம் கூட்டிய கூட்டத்துக்கு வரமாட்டோம் என்று தெளிவாகவே அறிவித்தனர். அதுமட்டுமின்றி

நமது அழைப்பைப் பெற்றுக் கொண்ட பிறகு திமுகவுடன் சேர்ந்து மாநில அரசுக்கு எதிராக மட்டும் கோரிக்கைகள் அடங்கிய மறியலுக்கும் திட்டமிட்டனர். பாட்டாளி மக்கள் கட்சி, முஸ்லிம் லீக், திருநாவுக்கரசு கட்சி உள்ளிட்ட ஒரு திமுக அணி மாநில அரசுக்கெதிரான மறியலை அறிவித்தன. இந்தக் கோரிக்கைகளுக்கும், போராட்டத்திற்கும் காங்கிரஸ் ஆதரவு உண்டு என்றும் வாழப்பாடி ராமமூர்த்தி அறிவித்தார்.

67. இந்த இயக்கம் நடந்து முடிந்த பின்னரும் மீண்டும் சிபிஐ-யை அணுகினோம். அப்பொழுதும் மதிமுக வந்தால் தாங்கள் வர மாட்டோம் என்று கூறியது மட்டுமன்றி நாங்கள் திமுக அணி யில் இருக்கிறோம்; மதிமுக-வை நாங்கள் ஒரு கட்சி என அங்கீகரிக்கவில்லை; ஆகவே, நீங்கள் நடத்தும் கூட்டு இயக்கத் திற்கு நாங்கள் வர இயலாது என்றும், நீங்கள் வேண்டுமானால் மதிமுகவை விட்டுவிட்டு திமுக அணிக்கு வாருங்கள் என்று ஏறத்தாழ திமுக-வின் குரலையே எதிரொலித்தார்கள்.

68. தமிழகத்தில் உள்ள சிபிஐ தலைமையின் சந்தர்ப்பவாத அணுகுமுறையினால்தான் இரண்டு கட்சிகளின் ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இருப்பினும், இடதுசாரி கட்சிகளின் ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டிய கடமை நம் முன் உள்ளதால், சிபிஐ தலைமையோடு விவாதித்து கூட்டு இயக்கத் திற்கு கொண்டுவர தொடர்ந்து நாம் முயற்சிக்க வேண்டி யுள்ளது.

மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளோடு சேர்ந்து கூட்டு இயக்கம்

69. கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு மத்திய, மாநில அரசு களின் மக்கள்விரோதக் கொள்கைகளை எதிர்த்தும், வகுப்பு வாத சக்திகளை எதிர்த்தும் திமுக, சிபிஐ, ஜனதா தளம், பார் வர்ட் பிளாக் ஆகிய கட்சிகளுடன் இணைந்து கூட்டு இயக கங்கள் நடத்த முயற்சிகளை மேற்கொண்டோம்.

70. இக்காலத்தில் தமிழகத்தில் பல முக்கியமான அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. திமுகவில் ஏற்பட்ட பிளவு, சிவாஜிகணேசன் வெளியேறியதற்குப் பின்னர் ஜனதா தளப்

அநேகமாக செயல்பாடற்று முடங்கி கிடப்பது - அதிமுகவுக்கும், தமிழக காங்கிரஸ் கட்சிக்கும் தொடர்ந்து நடைபெறும் மோதல்கள், ஆளுநர் - முதல்வர் மோதல்கள், பாட்டாளி மக்கள் கட்சியில் பிளவு உள்ளிட்ட பல அரசியல் நிகழ்ச்சிப் போக்குகள் இக்காலத்தில் நடைபெற்றுள்ளன.

71. நமது கட்சியைப் பொறுத்தவரையில், மத்திய, மாநில அரசுகளின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்தும், வகுப்புவாத சக்திகளை எதிர்த்தும், இடதுசாரி கட்சிகள் மற்றும் மதச் சார்பற்ற ஜனநாயக கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டு இயக்கத்தை உருவாக்க தொடர்ச்சியாக முயற்சி எடுத்து வந்திருக்கிறோம்.

ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம்

72. ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை மீண்டும் உடையார் வசம் ஒப்படைக்க மாநில அரசு முடிவெடுத்தபோது, அதை எதிர்த்து மருத்துவக் கல்லூரி மாணவர்களும் மற்ற பகுதி மாணவர்களும் போராட்டத்தில் இறங்கினர். இவர்களின் போராட்டத்தை ஆதரித்து நமது முன் முயற்சியினால் திமுக, சிபிஐ, ஜனதா தளம், பார்வர்ட் பிளாக் ஆகிய கட்சிகளை இணைத்து 1992 ஆகஸ்ட் மாதத்தில் ஆதரவு இயக்கம் நடத்தினோம்.

73. மாணவர்கள் போராட்டத்தை ஆதரித்து விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடத்தி ஐந்து கட்சிகளின் சார்பில் 1992 ஆகஸ்ட் மாதத்தில் மாநில அளவிலான மறியல் போராட்டம் நடத்தினோம். இப்படிப்பட்ட ஆதரவு இயக்கத்தால் மருத்துவக் கல்லூரி மாணவர்களோடு பேசி சில பிரச்சனைகளை தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது.

1992 ஜூன் 16 வேலைநிறுத்தம்

74. மத்திய அரசை எதிர்த்து, நரசிம்மராவை ராஜினாமா செய்யக் கோரி நடைபெற்ற அகில இந்திய தொழிற்சங்க அமைப்புக்களின் வேலைநிறுத்தத்தை ஆதரித்து தமிழகத்தில் திமுக, சிபிஎம், சிபிஐ, ஜனதாதளம், பார்வர்ட் பிளாக் சார்பாக அறிக்கை

விடுத்தோம். பிரச்சார கூட்டங்களும் நடத்தினோம். வேலை நிறுத்தம் வெற்றிபெற இது உதவியது.

மத்திய, மாநில அரசுகளின் மக்கள்விரோதக் கொள்கைகளை எதிர்த்து இயக்கம்

75. 1992, நவம்பர் மாதத்தில் திமுக, சிபிஎம், சிபிஐ, ஜனதாதளம், பார்வர்ட் பிளாக் ஆகிய கட்சிகள் இணைந்து மத்திய அரசின் புதிய பொருளாதார கொள்கை மற்றும் டங்கல் திட்டத்திற்கு எதிராகவும், மாநில அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம், மறியல் என்ற இரண்டு கட்ட இயக்கம் நடத்தினோம். நவம்பர் 10ம்தேதி அன்று ஆர்ப்பாட்டமும், 25ம்தேதி அன்று மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன்பு மறியலும் நடந்தது. மறியலுக்கு முன்பே மாநில அரசு ஐந்து கட்சி தொண்டர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்தபோதிலும் மறியல் சக்தியாக நடந்தது.

76. 1992ம் ஆண்டு டிசம்பர் 6ம்தேதி அன்று பிஜேபி தலைமையிலான வகுப்புவாத சக்திகள் பாபர் மசூதியை இடித்ததைக் கண்டித்து, டிசம்பர் 10ம்தேதி அன்று அகில இந்திய அளவிலான பந்த் தமிழகத்தில் வெற்றிபெறச் செய்ய திமுக, சிபிஎம், சிபிஐ, ஜனதாதளம், பார்வர்ட் பிளாக் கூட்டறிக்கை விடுத்தோம்.

77. இந்து வகுப்புவாதத்தின் வெறியாட்டத்தைக் கண்டித்து மக்கள் ஒற்றுமையை காக்க திமுக, சிபிஎம், சிபிஐ, ஜனதா தளம், பார்வர்ட் பிளாக் ஆகிய கட்சிகளின் சார்பில் மாநிலந்தழுவிய அளவில் மனித சங்கிலி போராட்டத்திற்கு 'அறைகூவல் விடுத்தோம். திமுக தலைமை இந்த இயக்கத்தில் போதுமான ஆர்வம் காட்டாததால் மனித சங்கிலி இயக்கம் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றிகரமாக நடக்கவில்லை.

திமுகவின் ஊசலாட்டம்

78. இந்தக் காலத்திலேயே அதிமுகவுக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கும் மோதல்கள் ஏற்படத் துவங்கின. ஆளுநர் - முதல்வர் மோதலாகவும், சட்டசபைக்கு உள்ளேயும் - வெளியேயும் காங

கிரஸ் - அதிமுக மோதல்களாகவும் இவை வெடித்தன.இப்படி அதிமுகவுக்கும் காங்கிரசுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் களை தனது கட்சியின் குறுகிய அரசியல் லாபத்திற்கு பயன் படுத்திக்கொள்ள திமுக தலைமை முயற்சித்தது. ஆளுநர் - முதல்வர் மோதலில் ஆளுநருக்கு ஆதரவாக நிலையெடுப்பது, '356ஐப் பயன்படுத்தி தமிழக அரசைக் கலையுங்கள் என்று நான் கோரமாட்டேன். ஆனால், அப்படி செய்தால் எதிர்க் கவும் மாட்டேன்' என்று அறிக்கை விடுவது போன்ற நிலை களில் திமுகவின் காங்கிரஸ் குறித்த ஊசலாட்டம் வெளிப்படத் துவங்கியது. மதப்பழமைவாதத்திற்கு எதிராக ஒவ்வொரு மாநில தலைநகர்களிலும் தேசிய முன்னணி மற்றும் இடது சாரித் தலைவர்கள் கலந்து கொள்ளும் பெரும் பேரணிகள் நடந்த சூழலில், தமிழகத் தலைநகரில் அப்படி ஒரு பேரணி நடத்துவதற்கு நாம் தொடர்ச்சியாக நிர்ப்பந்தித்தும், திமுக தலைமை வரவில்லை என்பதும் இந்த ஊசலாட்டத்தின் வெளிப்பாடே. இருப்பினும், அவர்கள் வரவில்லையென் றாலும் நாம் மற்றவர்களை இணைத்துக்கொண்டு அப்பேர ணியை நடத்தியிருக்க வேண்டும் என்று மாநிலக்குழு கருதியது.

79. இதன் தொடர்ச்சியாக நடைபெற்ற ராணிப்பேட்டை - பழனி இடைத்தேர்தல்களில் திமுகவின் இந்த ஊசலாட்டம் மேலும் தெளிவாகத் தெரிந்தது.ராணிப்பேட்டையில் காங்கிரஸ் வேட் பாளர் திடீரென்று போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்தது, பழனி நாடாளுமன்றத் தேர்தலில் திமுகவின் தேர்தல் பணி பலகீனமாக நடைபெற்றது, பகிரங்கமாக திருநாவுக்கரசு ராணிப்பேட்டையில் திமுக, பழனியில் காங்கி ரஸ் என்று பேசியது ஆகியவை நமக்கு ஏற்கெனவே இருந்த அச்சத்தை உறுதி செய்தது. இதனைத் தொடர்ந்து வாக்கு எண் ணிக்கை நடைபெறும் போதே பாண்டிச்சேரியில் கூடிய நமது மாநில செயற்குழு திமுக - காங்கிரசின் உள்ளார்ந்த உடன் பாட்டைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டது. இதுகுறித்து திமுகவுடன் விவாதிக்கத் தயார் என்ற கடிதத்தையும் திமுக தலைமைக்கு எழுதியது. ஆனால் திமுக தலைவர் கருணாநிதி பேச்சுவார்த்தை தேவையில்லை என்றும், மார்க்சிஸ்ட்களோடு இனி உறவு இல்லை என்றும் பகிரங்கமாக அறிவித்தார்.

திமுகவில் பிளவு

80. இதனையொட்டி ஓரிரு மாதங்களில் திமுகவில் மேல் இருந்து கீழ் வரை செங்குத்தான பிளவு ஏற்பட்டது. வை.கோபால்சாமி தலைமையிலான திமுகவில் குறிப்பிடத்தக்க பகுதி வெளியேறி மதிமுக என்று புதிய கட்சி உருவாக்கினர். திமுக பிளவு பற்றிய நமது நிலையை ஒசூரில் கூடிய மாநிலக்குழு கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டது.

'திமுக, காங்கிரசுடன் உறவு கொள்ள எல்.டி.டி.இ. ஆதரவாளராக கருதப்பட்ட வை.கோ. ஒரு தடையாக உள்ளார் என்பதும், கட்சியில் உள்கட்சி ஜனநாயகம் இல்லை என்பதும், நீண்டகாலமாக கட்சிக்குள் புகைந்து கொண்டிருந்த உட்பூசல் - அதன் விளைவாக உருவான கோஷ்டிகள் - இவையாவும் திமுக பிளவுக்குக் காரணங்களாக இருந்தன' என்பது நமது நிர்ணயிப்பு.

81. இரு கட்சிகளின் பலாபலத்தைப் பொறுத்தவரை ஒன்றுபட்ட திமுகவின் மூன்றில் ஒரு பகுதி ஊழியர்கள் மதிமுகவுக்கு சென்றுவிட்டனர் என்றும், திமுக இளைஞர்கள் கணிசமான பகுதியினர் வை.கோவிற்குப் பின்னால் திரண்டிருந்தனர் என்பதும் நமது நிர்ணயிப்பு. அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிரகாஷ் காரட் கலந்து கொண்ட ஹோசூர் மாநிலக் குழுக் கூட்டத்தில் 'நாம் இரண்டில் எந்த ஒரு கட்சியுடனும் உடனடியாக அரசியல் உறவுக்கு செல்ல வேண்டியதில்லை' என்றும், 'இச்சூழலில் நமது கட்சி தனது சொந்த இயக்கங்களைத் தீவிரப்படுத்துவது; சிபிஐயுடன் கூட்டு இயக்கங்களுக்கு முக்கியத்துவம் தருவது; மக்களைப் பாதிக்கும் பிரச்சனைகளின் மீது போராட வருபவர்களை வைத்து, வலுமிக்க கூட்டு இயக்கங்களுக்கு முயற்சிப்பது' என்றும் முடிவெடுத்தோம்.

மயிலை பெருந்துறை தேர்தல்

82. திமுக, மதிமுகவின் இரண்டு கட்சிகளுடனும் அன்றிருந்த அரசியல் சூழலில் எந்த ஒன்றோடும் அரசியல் உறவு கொள்ள வேண்டாம் என்ற ஹோசூர் மாநிலக்குழு முடிவிற்கிணங்க மயிலை - பெருந்துறை இடைத்தேர்தலில் மயிலையில் பொருத்த

மான சுயேச்சை வேட்பாளரை நிறுத்துவதென்றும், இடதுசாரி கட்சிகளின் ஒற்றுமையைக் காக்க பெருந்துறையில் நமது சொந்த மேடையில் இருந்து சிபிஐ வேட்பாளரை ஆதரிப்பது எனவும் முடிவெடுத்தோம்.

83. அடுத்து நடந்த மாநிலக்குழுவில் மயிலை - பெருந்துறை இடைத்தேர்தலில் நாம் கடைப்பிடித்த அரசியல் அணுகுமுறை சரியானது என்று பரிசீலித்தோம். மயிலை நமக்கு பலகீனமான தொகுதி என்பதால்தான் நமக்கு குறைவான வாக்கு கிடைத்தது என்பதையும் மாநிலக்குழு பரிசீலித்தது.

84. 1994 ஆகஸ்ட் மாதத்தில் நடந்த சட்டமறுப்பு இயக்கத்தில் தோழர் தங்கய்யன் படுகொலையைக் கண்டித்து கூட்டு இயக் கத்திற்கு மதசார்பற்ற ஜனநாயக கட்சிகளுக்கு அழைப்பு விடுத் தோம். மதிமுகவிற்கு அழைப்பு விடுத்ததால் திமுக வரவில்லை. மதிமுகவும், ஜனதாதளமும் வந்தன. மதிமுக, ஜனதாதளம், சிபிஎம் கூட்டறிக்கை விடுத்தோம்.

85. 1994 அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் சென்னையில் நடந்த கட்சியின் மாநிலக்குழுவில் தமிழக அரசியல் நிலை குறித்து விவாதித்தோம். இக்கூட்டத்தில் நமது கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சுர்ஜித்தும் கலந்து கொண்டார்.

86. திமுகவில் ஏற்பட்ட பிளவு, மதிமுக பற்றிய மதிப்பீடு, சிபிஐயின் அணுகுமுறை, மக்கள் பிரச்சனைகள் மீது இடது சாரி கட்சிகளின் மற்றும் மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளை இணைத்து நடத்த வேண்டிய கூட்டு இயக்கம் பற்றி விவாதித்து மாநிலக்குழு கீழ்க்கண்டவாறு முடிவெடுத்தது.

87. 'மக்கள் பிரச்சனைகள் மீது இயக்கம் நடத்த திமுக, மதிமுக, சிபிஐ, ஜனதாதளம், பார்வர்ட் பிளாக் ஆகிய கட்சிகளுக்கு அழைப்புவிடுவது. வருகின்ற கட்சிகளை வைத்து இயக்கம் நடத்துவது'.

88. மாநிலக்குழு கூட்டத்தில் மாநிலக்குழு உறுப்பினர்கள் விவாதத்திற்கு பிறகு தமிழகத்தில் நமது கட்சி கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை பற்றி தோழர் சுர்ஜித் தனது தொகுப்புரையில் கீழ்க்கண்டவாறு விளக்கினார்.

89. 'இன்றுள்ள வேறுபாடுகளைக் காட்டி மதிமுகவை நிராகரிக் கக்கூடாது. நம்நிலையை எல்லா பிரச்சனைகளிலும் மற்ற கட்சிகள் எடுக்க வேண்டுமென்று நாம் நிர்ப்பந்திக்க முடியாது. ஒட்டுமொத்தமாக மதிமுகவுடனான நமது உறவு நமக்கு முன் னேற உதவும்'.

90. மதிமுக பின்னால் கணிசமான இளைஞர்கள் உள்ளனர். மற்ற கட்சிகளில் இருந்தும் இளைஞர்கள் இக்கட்சியில் இணைந்துள் ளனர். மதிமுக வளரும் சக்தி என்ற அடிப்படையில் மதிமுக வுடன் கூட்டு இயக்கத்திற்கு செல்வது என்ற அணுகுமுறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

91. 'திமுக, சிபிஐ, மதிமுக உள்ளிட்ட விரிவான அணிகட்ட நாம் முயல வேண்டும். அறைகூவல் விட வேண்டும். பூர்ஷ்வா கட்சி கள் வரும் என்று உத்தரவாதமில்லை. திமுக வராமல் போக லாம். மக்கள் இதைப் பார்த்து புரிந்து கொள்வார்கள். திமுக அணியினரும் இத்தகைய நிலையில் கூட்டுப் போராட்டத்திற்கு வருவார்கள்'.

92. 'அதுமட்டுமல்ல, தேர்தல் நேரத்தில் நிலைமைகள் எவ்வாறு இருக்கும் என்று சொல்லமுடியாது. அடுத்த சில மாதங்களில் நடைபெறவுள்ள 10 மாநில தேர்தல்களின் முடிவைப் பொறுத்து பல மாற்றங்கள் ஏற்படும்'.

93. 'இத்தகைய அணி உருவாகாமல் போனால், மூன்றாம் அணி உருவானால் அதற்கு பொறுப்பு நாம் இல்ல. திமுக மற்றும் சிபிஐயின் அணுகுமுறையே இதற்குக் காரணம் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள். நமது இத்தகைய அணுகுமுறை சிபிஐயையும் சிந்திக்க வைக்கும்.

94. மாநிலக்குழு எடுத்த முடிவுப்படியும் மேலும் தோழர் சுர்ஜித் தொகுப்புரையின் அடிப்படையிலும் நமது கட்சியின் சார்பில் திமுக, மதிமுக, ஜனதாதளம், சிபிஐ, பார்வர்ட் பிளாக் தலைவர் களை நேரில் சந்தித்து மக்கள் பிரச்சனைகள் மீது கூட்டு இயக் கம் நடத்துவதுபற்றி விவாதித்தோம். பிறகு ஆலோசனை கூட் டத்திற்கு இக்கட்சிகளுக்கு அழைப்புவிடுத்தோம்.

95. மதிமுக மட்டுமே நமது அழைப்பை ஏற்று ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டது. முக்கியமான ஐந்து கோரிக்கைகள் மீது கூட்டு இயக்கத்திற்கு திட்டமிட்டோம். முதற் கட்டமாக மாவட்ட தலைநகரங்களில் இரண்டு கட்சிகளின் சார்பில் கோரிக்கைகளை விளக்கக்கூடிய பெருந்திரளான கூட்டங்களை நடத்துவதென முடிவெடுத்தோம்.

மார்க்சிஸ்ட் கட்சி மதிமுக கூட்டு இயக்கம்

96. மாவட்டத் தலைநகர்களில் இரு கட்சிகளும் இந்த கோரிக்கைகளுக்காக நடத்திடும் பொதுக்கூட்டங்கள் பெரும் மக்கள் திரள் கலந்து கொள்ளும் கூட்டங்களாக நடைபெறுகின்றன. சென்னை, கோவை, மதுரை, நாகை, திருச்சி, திண்டுக்கல், ஈரோடு, தூத்துக்குடி, சேலம் ஆகிய மையங்களில் இதுவரை இப்படிப்பட்ட கூட்டங்கள் நடைபெற்று உள்ளன. இக்கூட்டங்களில் சம அந்தஸ்துடன் இரண்டு கட்சிகளும் பங்கேற்க அனைத்து வகைகளிலும் உத்தரவாதம் செய்ய நாம் எடுத்த முயற்சி பயனளித்துள்ளது. பொதுவான கோரிக்கைகளில் நின்று பேசுவதற்கான முயற்சி வெற்றி பெற்றுள்ளது என்றே கூறலாம்.

97. இந்த கூட்டு இயக்கங்களில் திமுகவுக்கும், சிபிஐக்கும் நாம் விடுத்த அழைப்பை சுட்டிக்காட்டி அவர்கள் ஏற்க மறுத்ததை விமர்சித்து நாம் பேசி வருகிறோம். இக்கூட்டங்கள் இரு கட்சி அணிகள் மத்தியில் மட்டுமின்றி பொதுமக்கள் மத்தியிலும் நல்ல பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, நாகை, திண்டுக்கல் ஆகிய நகரங்களில் நடந்த கூட்டங்கள், பெரும் மாநாடுகள் போல் அமைந்தது குறிப்பிடத்தக்கது. இந்த இயக்கங்களை நன்கு திட்டமிட்டு பெரும் சக்தியானதாக மாற்றுவதன் மூலமும், சிபிஐயின் நிலை குறித்த பகிரங்க விமர்சனங்களின் மூலமாகவும் சிபிஐயை வென்றெடுக்கும் முயற்சி தொடர வேண்டும்.

98. இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இலங்கை அரசுக்கும் எல்டிடியினருக்கும் பேச்சுவார்த்தை நடக்கும் சூழலில், எல்டிடிஇ பற்றிய நிலையிலும், தமிழீழம் பற்றிய நிலையிலும் சமீபகாலத்தில் மதிமுக அணுகுமுறையில்மாற்றம் காணமுடி

கிறது. எல்டிடிஇ மாநில சுயாட்சியை ஏற்றுக்கொண்டால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்ற வை.கோ. அறிக்கையும் பொதுவான எல்டிடிஇயின் ஆதரவாளர்கள் என்ற தோற்றத்தை மட்டுப்படுத்த செய்யும் முயற்சிகளிலும் இதைக் காணலாம். எனினும், முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டு இயக்கம் செல்லும்போது நமது நிலைகள் அனைத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது - அதே நேரத்தில் மாறுபாடுள்ள பிரச்சனைகளில் நமது கருத்துக்களை பகிரங்கமாக கூறத் தயங்கக்கூடாது என்கிற நமது நிலையில் இருந்து பிரச்சனைக்கு பிரச்சனை முடிவெடுத்து செயல்பட வேண்டியுள்ளது.

99. திமுகவைப் பொறுத்தவரை, ஆரம்பத்தில் அதிமுக அரசு தான் பிரதான எதிரி என்று கூறி, மத்திய அரசை விமர்சிக்காத நிலை எடுத்தது - மேலும் அதிமுக அரசைக்கூட அதன் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்ப்பதற்கு பதிலாக பிராமண எதிர்ப்பு என்ற பார்வையில் அதன் விமர்சனம் இருந்தது. திமுகவின் இந்த நிலைபாட்டை விமர்சனம் செய்து கொண்டே, அக்கட்சியை மக்கள் பிரச்சனை மீதான இயக்கத்திற்கு கொண்டு வந்தோம்.

100. அதிமுக - இ.காங்கிரஸ் - இரு கட்சிகளுக்கும் மோதல் ஏற்பட்டபோது, இந்தச் சூழ்நிலையில் திமுக காங்கிரசுடன் மென்மையான அணுகுமுறையைக் கடைப்பிடித்தது. மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையைப் பற்றி ஓரளவுக்கு பேசினாலும் எதிர்ப்பு இயக்கம் நடத்த ஆர்வம் காட்டாமல் இருந்தது. இந்த வளர்ச்சியின் விளைவுதான் பழனி - ராணிப்பேட்டை தேர்தலில் திமுக - காங்கிரஸ் ரகசிய உடன்பாடு. இதையும் நாம் விமர்சித்தோம்.

101. சமீபத்தில் ஆந்திரா - கர்நாடக மாநிலங்களில் காங்கிரஸ் தோற்ற பிறகு தற்போது மு.கருணாநிதி மத்திய அரசை விமர்சித்து எழுதியும், பேசியும் வருகிறார். ஆனால் இயக்கம் ஏதும் நடத்துவதில்லை. தேசிய முன்னணியின் ஒரு பகுதியாக தாங்கள் இன்னும் இருப்பதாக அவர் அறிவித்துள்ளார். நிலை

மையில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப முடிவெடுப்பதற்காக காங் கிரசுக்கான கதவை திமுக தலைவர் திறந்தே வைத்துள்ளார்.

102. திமுகவின் ஊசலாட்டத்தை, தவறான அணுகுமுறையை நாம் சுட்டிக்காட்டுவதால் திமுக தலைமை நம்மீது ஆத்திரமாக உள்ளது. நம்மை, தனிமைப்படுத்த முயற்சிக்கிறது. இருப்பினும் இக்கட்சிக்கு வேண்டுகோள் ('டுத்து கூட்டு இயக்கத்திற்கு கொண்டுவர நாம் முயற்சிக்க வேண்டியுள்ளது.

அதிமுக

103. அதிமுக அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக மத்திய அரசு கடைப்பிடித்து வரும் அதே பொருளாதாரக் கொள்கையை மாநிலத்திலும் அமுலாக்கி வருகிறது.

104. மாநிலத்தில் என்றைக்கும் இல்லாத அளவிற்கு ஊழல் மலிந்து விட்டது. முதலமைச்சர் உட்பட ஆளும் கட்சியில், கீழிருந்து மேல் மட்டம் வரை ஊழல். மாநிலத்தில் கொலை, கொள்ளை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. காவல்நிலைய மரணம், கற்பழிப்பு தொடர்கதையாகிவிட்டது.

105. தொழிலாளர் விரோதப் போக்கு, கல்வியை தனியார் மயமாக்குவது, தொடர்ந்து வரிகளை உயர்த்துவது போன்ற கொள்கையை மாநில அரசு கடைப்பிடித்து வருகிறது. 'மனித உரிமைகள் மீறப்படுகிறது' என மனித உரிமை கமிஷனே சுட்டிக்காட்டியுள்ளது.

106. ஆளும் கட்சியின் மேற்கண்ட நடவடிக்கையினால் மக்கள் மத்தியில் ஆளும் அரசு மீது அதிருப்தி உருவாகி வருகிறது. இது பழனி - ராணிப்பேட்டை தேர்தலிலும், மயிலாப்பூர் - பெருந் துறை இடைத்தேர்தலிலும் ஆளும் கட்சிக்கு ஓட்டு குறைந் திருப்பதில் இருந்து பார்க்க முடிகிறது. குறைந்து வரும் செல் வாக்கை சரிசெய்ய பல நலத்திட்டங்களை மாநில அரசு ஆடம் பரமாக அறிவித்து வருகிறது. இக்கட்சிக்கு இன்னும் கிராமப் புறத்து மக்கள் செல்வாக்கு உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதிமுக தலைமை அவ்வப்போது வகுப்பு வாத சக்தியோடு சமரச கண்ணோட்டத்தையும் கடைப்பிடிக் கிறது. இது அயோத்தி பிரச்சனையில் வெளிப்பட்டது. மேலும்,

திராவிடக் கட்சி என்ற அடிப்படையில் மொழிப்பிரச்சனை, கச்சத்தீவு, காவேரி போன்ற பிரச்சனைகளில் இனவாத நிலை எடுத்து தனது செல்வாக்கை தக்கவைக்க முயற்சிக்கிறது.

107. ஆந்திரா, கர்நாடகா தேர்தலில் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு தெலுங்குதேசத் தலைவர் ராமாராவ் வரும் நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரசை தோற்கடிக்க அதிமுகவையும் தேசிய முன்னணி மற்றும் இடதுசாரி கட்சிகளுடன் இணைக்க முயற்சி எடுப்பேன் என அறிவித்தார். இதுபற்றி அதிமுக தலைமையும் பரிசீலிக்க இருப்பதாக கூறி இருக்கிறது. ராமாராவ் வெளியிட்ட கருத்தில் மார்க்சிஸ்ட் கட்சிக்கு உடன்பாடில்லை, அதிமுகவுடன் உடன்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என நமது கட்சியின் சார்பில் நாம் அறிக்கை வெளியிட்டோம்.

108. சமீபத்தில் அதிமுக அமைச்சர் சின்னசாமி தமிழகத்தில் காங்கிரஸ் - அதிமுக உறவு மீண்டும் ஏற்படும் என பேசினார். அதிமுக எந்த கட்சியுடன் தேர்தல் உடன்பாடு வைத்துக் கொள்ளும் என அறிவிக்கும் உரிமை தனக்கு மட்டுமே உண்டு என்று கூறி, அமைச்சர் சின்னசாமி பேச்சைக் கண்டித்து முதல்வர் அறிக்கைவிட்டார்.ஆனால் ஜெயலலிதா காங்கிரசுடன் மீண்டும் உறவு ஏற்படாது என்று கூறவில்லை. எதிர்காலத்தில் அதிமுக, தேசிய முன்னணி அல்லது காங்கிரஸ் என்ற இரண்டு கட்சிகளின் உறவுக்கு அதிமுக வாய்ப்பை திறந்தே வைத்து இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

109. திமுகவுடன் கூட்டு இயக்கத்திற்கு முயற்சித்த அதேகாலத்தில் நமது கட்சி திமுக மற்றும் திராவிடக் கட்சிகளின் இனவாதத் திருகல்களை எதிர்த்தும் போராடி வந்திருக்கிறது. திமுகழகத்தின் இனவாத திருகல்களை எதிர்த்துப் போராடிக் கொண்டே அவர்களை நாம் காங்கிரஸ் - அதிமுக அரசின் மக்கள்விரோத கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்திலும் இணைக்க முடிந்தது. இக்காலத்தில் அப்படி எழுந்த சில பிரச்சனைகளில் நாம் சரியான நிலை எடுத்தோம். இட ஒதுக்கீடு பிரச்சனை, காவேரி பிரச்சனை, தொலைக்காட்சியில் இந்தி திணிப்பு ஆகியவைகளை இவ்வகையில் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இட ஒதுக்கீடு பிரச்சனை:

110: மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்குப் பின்னர் தமிழகத்தில் பெருமளவு முன்னுக்கு வந்த இந்த பிரச்சனை, 69% இட ஒதுக்கீட்டுக்கு எதிரான உச்சநீதிமன்ற தீர்ப்பையொட்டி விஸ்வரூபமெடுத்தது. திராவிட இயக்க கட்சிகளும், சிபிஐயும் இடஒதுக்கீட்டு அளவை அந்தந்த மாநிலமே தீர்மானிக்கும் உரிமை வேண்டும் என்று போராட்டங்களில் இறங்கின.

111. இந்தப் பிரச்சனையில் நமது கட்சி தமிழகத்தில் நீண்ட காலமாக இருக்கின்ற 69% இட ஒதுக்கீடு தொடர வேண்டும்; அதேநேரத்தில், இட ஒதுக்கீடு அளவைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு அளிக்கக்கூடாது என்றும், பிற்படுத்தப்பட்ட மக்களிடையே மிகவும் பின்தங்கியுள்ளவர்களுக்கு இட ஒதுக்கீட்டின் பலன் கிடைக்கச் செய்ய கிரீமி லேயர் (Creamy Layer) கோட்பாட்டை அமுலாக்க வேண்டும் என்றும் நம் கட்சி வலியுறுத்தியது.

112. மண்டல் பரிந்துரையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களின் நலன் காக்க 'நிலச்சீர்திருத்தமே' அடிப்படை அம்சம் என்று சுட்டிக்காட்டியிருப்பதைப் பற்றி கவலைப்படாத இக்கட்சிகள் 'சமூக நீதி' என்பதை 'இட ஒதுக்கீடு' என்பதோடு சுருக்கி உழைப்பாளி மக்களின் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் பணியில் ஈடுபடுவதை நமது பத்திரிகைகள், கூட்டங்கள் மூலம் அம்பலப்படுத்தினோம்.

காவிரி நதி நீர் பிரச்சனை:

113. காவிரி நதி நீர் பிரச்சனையில் நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை கர்நாடக அரசு ஏற்க மறுத்த நிலையில், இரண்டு மாநில அரசுகளையும் அழைத்துப் பேசி சுமூகத் தீர்வு காண மத்திய அரசு எந்த முயற்சியும் செய்யாததை அடுத்து - இரு மாநிலங்களிலும் வலுவாக பிராந்திய வெறி கிளப்பப்பட்டது. இரு மாநிலத்திலும் இனக்கலவரங்கள் மூண்டன. நூற்றுக்கணக்கானோர் தாக்கப்பட்டனர். பெரும் பொருட்சேதம் ஏற்படுத்தப்பட்டது.

114. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் குறிப்பாக, திமுக வும், அதிமுகவும் இந்த இனவெறித் தூண்டுதலில் ஒன்றுக் கொன்று போட்டியிட்டன. முதலமைச்சர் பிரச்சனை தீரும் வரை உண்ணாவிரதம் என்ற நிலைக்குச் சென்றார். 'வாழப் பாடி ராமமூர்த்தி' தனது பதவியை ராஜினாமா செய்தார். காங் கிரஸ் கட்சி கர்நாடகத்திலும் தமிழகத்திலும் இரண்டு நிலை எடுத்து இரட்டை வேடம் போட்டது.

115. இந்தச் சூழலில் நிதானமான நிலையெடுத்து இரண்டு பகுதி மக்கள் மோதும் பிரச்சனையாக இதை ஆக்கக்கூடாது என்றும், இடைக்கால ஒப்பந்தத்தை அமுலாக்கச் செய்ய மத்திய அரசு, இரு மாநில அரசுகளையும் அழைத்துப்பேசி சுமூகத்தீர்வுகாண வேண்டும் என்றும் நிலையெடுத்து செயல்பட்டது நமது கட்சி ஒன்றுதான் என்பதைப் பெருமையுடன் கூறமுடியும்.

116. இதேபோல் தொலைக்காட்சியில் தமிழ்மொழிக்கான நேர ஒதுக்கீடு குறைக்கப்பட்டதையொட்டி தமிழகத்தில் எழுப்பப் பட்ட மொழி வெறியையும் நாம் சந்தித்தோம். ஒருபுறம் தமி ழுக்கு உரிய நேரம் ஒதுக்க வேண்டும் என குரல் கொடுத்துக் கொண்டே - இதர மொழிகள் மீதும் காட்டப்படும் துவேஷத் தைக் கண்டித்தோம். இதேபோல் மார்வாடிகள் தமிழகத்தில் தொழில் நடத்தக்கூடாது என்ற கோஷத்தின் அடிப்படையில் நெடுமாறன் மற்றும் சிலர் நடத்திய போராட்டத்தின்போது - இந்தத் தவறான நிலைபாட்டைக் கண்டித்து அறிக்கை விட்டது சிபிஐ(எம்) மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைக்காட்சியில் இந்தி திணிப்பு

117. தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிக்கான நேரத்தை குறைத்து இந்தி நிகழ்ச்சிக்கான நேரத்தை அதிகப்படுத்திய போது இதை நாம் கண்டித்தோம். மேலும் தமிழ் நிகழ்ச்சி களுக்கு கூடுதல் நேரம் ஒதுக்க வேண்டுமெனவும் இரண்டா வது அலைவரிசையை மாநிலம் முழுவதும் ஒளிபரப்ப ஏற் பாடு செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தினோம்.

118. தமிழகத்தில் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று வலியுறுத்துவதோடு நாடாளுமன்றத்திலும் தமிழில் பேச

வாய்ப்பளிக்க வேண்டும் என்றும், அதை மற்ற மொழிகளில் ஒரே நேரத்தில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தினோம். மொழிப்பிரச்சனையில் சரியான நிலை எடுத்தது மட்டுமல்ல, நமது கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர். ஏ.நல்லசிவன் அவர்கள் எடுத்த முயற்சியினால் தமிழகத்தில் தமிழில் தந்தி அனுப்பும் திட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

இ.காங்கிரஸ்

119. காங்கிரஸ் கட்சியும், அதிமுகவும் லட்சிய உறவு என்று சொல்லிக்கொண்டு தேர்தலில் ஓரணியாக போட்டியிட்டு வென்றார்கள். ஆனால் இந்த உறவு ஓராண்டு வரைதான் நீடித்தது. பிறகு வஞ்சனையே உருவான காங்கிரஸ் கட்சி அதிமுகவுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியது. அதன் ஒரு பகுதியாக காங்கிரஸ் கட்சி அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, மத்திய அரசின் உதவியோடு, சட்டமன்றத்தைக் கலைக்காமலேயே தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியை நிறுவ குறுக்கு வழியில் முயன்றது. ஆனால் அந்த முயற்சியில் காங்கிரசுக்கு தோல்விதான் கிடைத்தது. இதனால் காங்கிரசுக்கும், அதிமுகவுக்கும் முரண்பாடுகள் மேலும் வளர்ந்தது.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி மூன்று கோஷ்டிகளாக செயல்பட்டு வருகிறது. அதிமுக, இ.காங்கிரஸ் உறவு முறிந்த பிறகு வாழப்பாடி ராமமூர்த்தி கோஷ்டி அதிமுக அரசை கடுமையாக சாடி வந்தது. பழனி - ராணிப்பேட்டை இடைத் தேர்தலிலும் பிறகு நடந்த மயிலை - பெருந்துறை தேர்தலிலும் காங்கிரஸ் தனித்து போட்டியிட்டது. மயிலை - பெருந்துறையில் டெபாசிட் இழந்தது.

120. இட ஒதுக்கீடு பிரச்சனையில் திமுகவும் மற்ற கட்சிகளும் நடத்திய மறியல் போராட்டத்திற்கு தார்மீக ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் தலைமை அறிவித்தது. அதிமுக அரசுக்கு எதிராக அனைத்து எதிர்கட்சிகளையும் இணைத்து போராட்டம் நடத்தப்போவதாக வாழப்பாடி அறிவித்தார். தமிழகத்தில் எதிர்காலத்தில் வரும் தேர்தலில் அமைச்சரவையில் கூட்டாக

இடம்பெற எந்த கட்சி ஏற்றுக்கொள்கிறதோ அக்கட்சியுடன் தான் கூட்டு என வாழப்பாடி அறிவித்தார்.

121. ஆந்திரா, கர்நாடகா தேர்தல் முடிவுக்குப் பிறகு அர்ஜுன் சிங் நரசிம்மராவை எதிர்த்து கடுமையாக பிரச்சாரம் செய்தபோது வாழப்பாடி இவரை ஆதரித்தார். இந்தப் பின்னணியில் வாழப்பாடியை நீக்கிவிட்டு குமரி அனந்தனை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக மேலிடத்தலைமை நியமித்துள்ளது. வாழப்பாடி தொடர்ந்து தனி கோஷ்டியாக செயல்பட்டு வருகிறார்.

122. குமரி அனந்தன் பொறுப்பேற்ற பிறகு நிருபரிடத்தில் பேசுகின்றபொழுது தமிழகத்தில் காங்கிரஸ் எந்த கட்சியுடன் கூட்டு சேரும் என்பதை மேலிடம் தான் முடிவு செய்யுமென்றார். சமீபத்தில் ஹைதராபாத்திற்கு மாநில முதலமைச்சர் சென்றிருந்தபோது அதிமுகவையும் தேசிய முன்னணியில் இணைக்க முயற்சிப்பேன் என ஜெயலலிதா முன்னிலையில் தெலுங்குதேச தலைவர் பத்திரிகையாளரிடத்தில் கூறினார். இதற்குப் பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை அதிமுக ஊழலை எதிர்ப்பதாக அறிவித்தது. தற்போது தமிழகத்தில் அதிமுகவிற்கும் காங்கிரசுக்கும் உறவு ஏற்பட வாய்ப்பு இல்லாததுபோல் தோன்றினாலும் எதிர்காலத்தில் உறவு உருவாகாது என்று கூற முடியாது.

ஜனதாதளம்

123. தமிழகத்தில் ஜனதாதளம் மேலும் பலகீனமாகியுள்ளது. சிவாஜிகணேசன் ஜனதா தளத்தில் இருந்து ராஜினாமா செய்துவிட்டார். வடிவேல் தலைமை ஏற்றிருக்கிறார். செங்காளியப்பன், ராஜசேகரன் மற்றும் சிலர் காங்கிரசில் சேர்ந்துள்ளனர்.

124. தேசிய முன்னணி, இடதுசாரி கட்சிகள் அகில இந்திய அளவில் நடத்திய இயக்கங்களை தமிழகத்தில் அமுலாக்கிய போது அதில் ஜனதாதளம் பங்கேற்று வந்தது. சமீபகாலத்தில் ஜனதா தளம், திமுக, சிபிஐ ஆகிய கட்சிகளுடன் கூட்டு இயக்கத்தில் பங்கேற்று வருகிறது.

பாட்டாளி மக்கள் கட்சி

125. பா.ம.க. கடந்த மூன்று ஆண்டுகளில் பலவீனப்பட்டுள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளையும் தாக்கி பிரச்சாரம் செய்து வந்த பா.ம.க. தற்போது கொள்கை அடிப்படையில் அல்லாது ஏதாவது சில அரசியல் கட்சிகளுடன் சேர்ந்துதான் தேர்தலில் போட்டியிடும் என்ற அளவிற்கு சென்றுள்ளது. கடந்த பழனி - ராணிப்பேட்டை இடைத்தேர்தலில் காங்கிரசை ஆதரிக்க விரும்புவதாக அறிவித்தது. ராணிப்பேட்டை தொகுதியில் காங்கிரசை பொறுத்தவரையில் வேறு கருத்தில் இருந்ததால் பிறகு தனித்து போட்டியிட்டது. சமீபகாலத்தில் இட ஒதுக்கீடு பிரச்சனையில் திமுக, ஜனதாதளம், சிபிஐ ஆகிய கட்சிகளு டன் இணைந்து கூட்டு இயக்கத்தில் பங்கேற்றது.

126. பா.ம.க.வில் இன்று பெரும்பகுதியினர் வன்னியர் வகுப் பைச் சார்ந்தவர்கள் தான். தாழ்த்தப்பட்ட மக்களை வென் றெடுக்க அது எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. இருப்பினும் ஒரு சில தென்மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டவர்கள், முஸ்லிம் சிறுபான்மையினர் இக்கட்சியில் உள்ளனர். பா.ம.க.வில் இருந்து பண்ருட்டி ராமச்சந்திரனும், நெல்லிக்குப்பம் கிருஷ்ண மூர்த்தியும் விலகிவிட்டனர். இதனால் பா.ம.க.விற்கு பெரும் பாதிப்பு இல்லையென்றாலும், இந்த இருவரின் ஆதரவா ளர்கள் பா.ம.க.வில் இருந்து விலகிவிட்டனர்.

127. ஏற்கெனவே பா.ம.க. சென்னையில் நடத்திய வாழ்வுரிமை மாநாட்டில் எழுப்பிய தீவிரவாத, பிரிவினைவாத கோஷங் களும், துவக்க காலத்தில் இக்கட்சி கடைப்பிடித்த போராட்ட வடிவங்களும் மக்கள் மத்தியில் இக்கட்சியின் மீது அதிருப் தியை உருவாக்கியது. இப்படிப்பட்ட பிரிவினைவாத கொள்கை மீது அந்தக் கட்சியின் அணிகளுக்கும் பிடிமானம் இல்லை. இந்நிலையில் இக்கட்சியின் அணிகள் சோர்வுற் றுள்ளனர்.

128. 1994ம் ஆண்டு இறுதியில் பா.ம.க. தலைவர் ராமதாஸ் கைதானபோது அக்கட்சி நடத்திய மறியல் போராட்டம் மிகவும் பலகீனமாக நடந்தது.

129. பா.ம.க. எழுப்பி வந்த பிரிவினை கோஷத்தை தற்போது அதிகமாக பேசுவதில்லை என்றாலும், அக்கொள்கையை அக் கட்சித் தலைமை கைவிடவில்லை. மக்கள் பிரச்சனை களுக்காக பல பகுதிகளில் இயக்கங்கள் நடத்துகிறார்கள்.

130. வன்னியர் சங்கமாக துவங்கி, பிறகு அரசியல் கட்சியாக உருவெடுத்து தனித்து தேர்தலில் போட்டியிட்டது. இனி தனித்து போட்டியிடுவதில்லை. ஏதாவது ஒரு கட்சியுடன் சேர்ந்துதான் போட்டியிடுவது என அறிவித்தது. கொள்கை நிலைப்பாட்டிலிருந்து தொகுதி உடன்பாடு என்பதற்கு பதிலாக, பா.ம.க. சந்தர்ப்பவாத முடிவிற்கு தற்போது சென் றுள்ளது. சில மாவட்டங்களில் ஸ்தல அளவில் ஏற்றுக் கொண்ட மக்கள் பிரச்சனைகளில் இக்கட்சியோடு நமது கட்சி கூட்டு இயக்கம் நடத்தி வருகிறது. எதிர்காலத்தில் இக்கட்சியின் அணுகுமுறையை நாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

தலித் அமைப்புகளின் நடவடிக்கைகள்

131. ஆண்டாண்டு காலமாக நிலவுகின்ற ஜாதிய கொடுமைக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் சமீபகாலமாக ஏற்பட் டுள்ள விழிப்புணர்ச்சி வரவேற்க வேண்டிய அம்சம். இந்த விழிப்புணர்ச்சியை தங்களது அரசியல் மற்றும் தேர்தல் கால ஆதாயத்திற்காக பயன்படுத்த ஜாதிய தலைவர்கள் முயற்சிக் கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களை ஜாதிய ரீதியில் திரட்டி ஜன நாயக இயக்கத்தில் இருந்தும், இடதுசாரி இயக்கத்தில் இருந்தும் பிரித்தெடுக்க பல தலித் அமைப்புகள் முயற்சிக்கின்றன. இது அனைத்து ஜாதிகளையும் சார்ந்த உழைக்கும் மக்களின் ஒற்று மையை உருவாக்க வேண்டுமென்ற நமது கட்சியின் கோஷத்தை சீர்குலைப்பதில் போய் முடியும். இப்பிரச்சனை யில் எப்படிப்பட்ட அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டு மென்று 15வது அகில இந்திய மாநாட்டு நகல் தீர்மானம் கீழ்க் கண்டவாறு கூறுகிறது:

132. 'சமூக நீதி என்ற கோரிக்கையை ஆதரிக்கும் அதேநேரத்தில் இந்தப் பிரிவினரின் அடக்குமுறைக்கு அடிப்படைக் காரண மாகவுள்ள அனைத்துப் பிரச்சனைகளையும், நிலமற்றோருக்கு நிலம் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான

கூலி போன்ற வர்க்க பிரச்சனைகளையும் கையில் எடுத்துக் கொண்டு ஜாதீய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் தளபதியாக நமது கட்சி உருவாக வேண்டும். சமூக நீதி என்ற கருத்தானது வேலைகளில் ஒதுக்கீடு மற்றும் ஜாதீய அடிப் படையில் வாக்கு வங்கிகளை திரட்டுவது என்று குறுகிவிடக் கூடாது. எனினும் இட ஒதுக்கீடு என்ற பெயரில் ஜாதிய அறை கூவல் எந்தஅளவிற்கு செல்லும் என்பதை உத்தரபிரதேசத்தில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஜாதி என்ற பெயரில் செயல்பட்டு வருகின்ற கட்சிகள் தலித் துகள் மற்றும் இதர .பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் நலன்கள் குறித்துக் கவலைப்படுவதில்லை. அவர்களது முக்கிய நோக்கமெல்லாம் இவர்களைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியில் நீடித்திருப்பதே ஆகும். இதர பிற்படுத்தப்பட்ட வகுப் பினருக்கு 27 சதவீத ஒதுக்கீடு என்ற முடிவை மார்க்சிஸ்ட் கட்சி ஆதரித்து வந்துள்ளது. அதேநேரத்தில் இப்பிரிவினரின் வறுமை மற்றும் பிற்பட்ட நிலை ஆகிய உண்மையான பிரச் சனைகளை நிலச்சீர்திருத்தங்களின் மூலமாக மட்டுமே தீர்த்து வைக்க முடியும் என்று மண்டல் தனது அறிக்கையில் கூறி இருந்ததை கட்சி சுட்டிக்காட்டியது. இட ஒதுக்கீட்டுக்காக குரல் கொடுக்கும் கட்சிகள் எதுவுமே இந்த கோரிக்கையை எழுப்ப வில்லை. ஜாதிய அறைகூவலைப் பயன்படுத்துவது என்பது பிளவு எண்ணங்கொண்டதாக, செக்டேரியன் போக்குள்ள தாக மாறிவிட்டது. கட்சியானது இந்த அபாயத்திற்கு எதிராக மக்களை எச்சரித்து, தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமையை, உழைக்கும் மக்களின் அனைத்து பிரிவுகளையும் - சாதிகளை யும் சேர்ந்தவர்களின் ஒற்றுமையை, முதலாளித்துவ நிலப் பிரபுத்துவ அமைப்பிற்கு எதிராக அணிதிரட்ட முன்னணி யில் நிற்க வேண்டும். சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் ஜனநாயகபூர்வமான தன்மையை அங்கீ கரித்து, அதை சுயேச்சையான வர்க்க அடிப்படையிலான போராட்டங்களுடன் ஒன்றிணைப்பது என்ற கட்சியின் தனித் துவமான நிலைபாட்டை தீவிரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்'.

133. மத்தியக்குழு 15வது காங்கிரஸ் - நகல் தீர்மானத்தில் சுட்டிக் காட்டியுள்ளபடி, தமிழகத்தில் நமது கட்சி தாழ்த்தப்பட்ட மக்கள் சந்தித்து வரும் ஜாதிக்கொடுமைகளுக்கு எதிராகவும், அவர்களின் கூலி, நிலம் போன்ற வர்க்க கோரிக்கைகளுக்காகவும் போராட முன்முயற்சி எடுக்க வேண்டும். மத்தியக்குழு வழி காட்டுதலின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களை திரட்ட நமது கட்சி முயற்சிக்க வேண்டும். நாகை, தஞ்சை போன்ற மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் ஜாதிய ஒடுக்குமுறை மற்றும் கூலி, நிலம் போன்ற பிரச்சனைகளை இணைத்த நம் இயக்கத்தினால்தான் இன்று அந்த இரண்டு மாவட்டங்களிலும் கணிசமான தாழ்த்தப்பட்ட மக்கள் நமது கட்சியில் திரண்டுள்ளனர்.

134. தாழ்த்தப்பட்ட மக்களை வர்க்க அமைப்புகளில் திரட்டவும், அவர்களை கட்சிக்குள் கொண்டுவரவும் அவர்களில் தகுதியானவர்களுக்கு கட்சியில் உரிய பொறுப்புக்கள் கொடுப்பதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நக்சலைட் இயக்கம்

135. இந்திய மக்கள் முன்னணி என்ற பெயரில் செயல்பட்ட நக்சலைட் குழுவினர் இப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.எல்) என்ற பெயரில் சில மாவட்டங்களில் அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகின்றனர். இவர்களின் அடிப்படையான கொள்கைகள் சிபிஎம் எதிர்ப்பு, மேற்குவங்க அரசு எதிர்ப்பு நிலைதான். பீகாரில் நமது விவசாயிகள் இயக்கத்துடன் மோதி வருகின்றனர். இவர்களுடைய இத்தகைய நிலைபாட்டினால்தான் இடதுசாரி அணியில் சேர்க்க வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப் பட்டது. அவர்கள் தலித் குழுக்களுடன் தொடர்பு கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஊடுருவ முயற்சிக்கின்றனர். அவர்களை நமக்கு எதிராகத் திருப்ப முயற்சிக்கின்றனர். இதுபற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஜாதிய அமைப்புகள்

136. தமிழகத்தில் ஜாதிய அமைப்புகள் மிக தீவிரமாக செயல்பட ஆரம்பித்துள்ளன. நாடார்கள், செட்டியார்கள், வன்னியர்கள்,

முக்குலத்தோர், கொங்கு வேளாளர், யாதவ் என பல ஜாதி களைச் சேர்ந்தோர் புதிய கோரிக்கைகளை வைத்து ஊர்வலம், ஆர்ப்பாட்டம், மாநாடுகள் என நடத்தி வருகிறார்கள். இவர் களிடையே ஜாதி வெறி மூர்க்கத்தனமாகத் தூண்டப்படுகிறது. எந்தக்கட்சியும் விதிவிலக்கில்லாமல் இந்த ஜாதிய அமைப்பு களுக்கு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு தரு கின்றன. இவைகளை ஓட்டு வங்கிகளாகப் பார்க்கின்றன.

137. மத்தியில் உள்ள காங்கிரஸ் கட்சி அமைச்சர்களும், தமிழகத் தில் உள்ள அதிமுக அமைச்சர்களும் இப்படிப்பட்ட ஜாதீய மாநாடுகளில் கலந்து கொள்கிறார்கள். ஜாதிய அமைப்பு களுக்கு உற்சாகம் கொடுக்கிறார்கள்.

138. மக்களின் ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கங்களுக்கு இது போன்ற ஜாதிய அமைப்புகள் தடையாக இருக்கின்றன என் பதை நாம் கவனிக்க வேண்டும்.

139. இதுவரை மேல்ஜாதிக்காரர்கள் என்று சொன்னவர்கள் தங் களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும், ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர் என இருந்த வர்கள் இப்போது தங்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டி யலில் சேர்க்க வேண்டும் என்றும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று சொல்கிறவர்கள் இப்போது தங்களை தாழ்த்தப்பட்ட வர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துப் போராடுகிறார்கள். இதற்கு அரசியல் கட்சிகளும், ஆளுங்கட்சிகளும், ஜாதியத் தலைவர்களும் தூபம் போடு கிறார்கள்.

140. இத்தகைய சூழ்நிலைகளில் மக்களுக்கு இடையே ஜாதீய மோதல்கள் உருவாகின்றன. உயிரிழப்புக்களும், பொருட்சேத மும் ஏற்பட்டுள்ளன. கட்சி அணிகள் இதுபோன்ற சமயத்தில் உடனடியாகத் தலையிட்டு, ஜாதி மோதலைத் தடுத்து, மக்கள் ஒற்றுமைக்கு வழிகாண முயல வேண்டும்.

141. கோடானுகோடி மக்க்ளின் வேலையில்லா கொடுமைக்கும், படிக்க வாய்ப்பில்லா நிலைமைக்கும் எதிராக, அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக போராடுவதற்கு பதிலாக மக்கள்

இப்படி ஜாதிய அடிப்படையில் பிரிக்கப்படுவதை எதிர்த்தும், அரசியல் ரீதியாக பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளச் செய்யவும், நம்முடைய பிரச்சாரம் தமிழகத்தில் பலமாக அமைய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்புகளை, மற்ற உயர்ஜாதிய அமைப்புகளோடு சமமாக வைத்து பார்க்கக் கூடாது.

வகுப்புவாத சக்திகள்

142. தமிழகத்தில் பிஜேபி தலைமையிலான வகுப்புவாத சக்திகள் தங்களை வளர்த்துக்கொள்ள திட்டமிட்டு வேலை செய்து வருகின்றன. பிஜேபியின் வழிகாட்டுதலோடு, ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி போன்ற அமைப்புகளில் முழுநேர ஊழியர்கள் நியமனம் செய்யப்பட்டு வாலிபர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்து வருகிறார்கள். தமிழகத்தில் இவர்களின் வேலைகளை குறைத்து மதிப்பிடக்கூடாது. வினாயகர் சதுர்த்தி, கோவில் திருவிழாக்கள் போன்ற மத சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் தலையிட்டு, இந்துக்களின் மத உணர்வை பயன்படுத்தி, மத மோதல்களை உருவாக்கி அதன் மூலம் தங்களைப் பலப்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

143. திருப்பூர், கோவை, குமரி போன்ற பகுதிகளில் சில பிரச்சனைகள் மீது பந்த் நடத்தும் அளவிற்கு பிஜேபி தலைமையிலான வகுப்புவாத சக்திகள் வளர்ந்துள்ளன. இவர்களை நாம் சரியாக விமர்சனம் செய்வதால் நம்மை சில பகுதிகளில் தாக்குகிறார்கள். சமீபத்தில் திருப்பூரில் நமது தோழர்களை பிஜேபியை சார்ந்தவர்கள் தாக்கியது அனைவரும் அறிந்ததே!

144. திண்டுக்கல், திருப்பரங்குன்றம் போன்ற பகுதிகளில் கிடைக்கிற வாய்ப்பை பயன்படுத்தி வகுப்புவாதத்தை கிளப்ப இந்து வகுப்புவாத சக்திகள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றன. இந்து முன்னணி தலைவர் ராஜகோபாலன் படுகொலையான பிறகு திண்டுக்கல் உட்பட மாநிலத்தில் பல இடங்களில் வகுப்பு கலவரத்தை உருவாக்க முயன்றார்கள்.

145. திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபத்தை ஒட்டி அம்மலை மீது முஸ்லிம் தர்காவிற்கு அருகில் விளக்கேற்றப்போவதாக

அறிவித்து மோதலை உருவாக்க பிஜேபி தலைமையிலான இந்து வகுப்புவாத சக்திகள் முயற்சித்தன. நமது கட்சியின் சரியான தலையீட்டினால் அனைத்து கட்சிகளையும் இணைத்து கார்த்திகை தீபத்தை ஒட்டி மதமோதல் உருவாகாமல் தடுத்து நிறுத்த முடிந்தது.

146. பிரச்சனை உருவாகும்பொழுது தலையிடுவதோடு, சாதாரண காலத்தில் பிஜேபி தலைமையிலான வகுப்புவாத சக்திகள் செய்யும் சீர்குலைவு முயற்சிக்கு எதிராக விழிப்புடன் இருந்து தத்துவார்த்த அரசியல் போராட்டத்தை நடத்துவதில் நாம் இன்னும் கவனமாக இருக்க வேண்டும்.

147. இந்து வகுப்புவாதத்தை எதிர்த்து போராடக்கூடிய அதே நேரத்தில் முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளையும் எதிர்த்து போராட வேண்டும்.

முஸ்லிம் லீக்

148. லீக் தமிழகத்தில் இரண்டு குழுக்களாக செயல்பட்டு வருகின்றன. சமது தலைமையிலான குழு காங்கிரசை ஆதரித்து வருகிறது. லத்தீப் தலைமையிலான குழு திமுகவை ஆதரித்து கூட்டு இயக்கத்தில் கலந்து கொள்கிறது. இக்குழு, புதிதாக துவங்கப்பட்ட சுலைமான் சேட் தலைமையிலான கட்சியில் உள்ளது.

திராவிடர் கழகம்

149. இக்கட்சி தமிழகத்தில், தொடர்ந்து இனவெறி, மொழிவெறி கிளப்பி வருகிறது. பிரர்மண எதிர்ப்பு, ஜாதிய வெறியூட்டும்படி பிரச்சாரம் செய்து வருகிறது. சுயலாபத்திற்காக அதிமுக அரசின் நடவடிக்கைகளை ஆதரித்து வருகிறது.

தன்னார்வக் குழுக்கள்

150. தமிழகத்தில் பல மாவட்டங்களில் தன்னார்வக் குழுக்கள் இயங்குகின்றன. பல பெயர்களில் இயங்குகின்றன. வெளிநாடுகளிலிருந்து பணம் பெற்று செயல்படுகின்றன. பெரும்பாலும் இந்தத் தன்னார்வக் குழுக்கள் கிராம புறங்களைத் தத்து எடுத்துக் கொண்டு அங்கு அந்த மக்களுக்கு பொருள் உதவி செய்கின்றன. சிறு தொழில்கள் துவங்க உதவுகின்றன. அரசாங்கம் வழங்கும் உதவிகளைப் பெற்றுத் தருகின்றன.

151. சில இடங்களில் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை முன்வைத்து மக்களைத் திரட்டி போராடவும் செய்கின்றன. இப்படி இயங்கும் பல தன்னார்வக் குழுக்கள் இடதுசாரி இயக்கத்திற்கு, குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்திற்கு எதிராக செயல்படுகின்றன. சிபிஎம் தலைமையில் மக்கள் அணி திரளாமல் இருக்க இக்குழு சதி வேலைகளும் செய்கின்றன.

152. ஒரு சில இடங்களில் இப்படிப்பட்ட தன்னார்வக் குழுக்கள் இடதுசாரி சக்திகளோடு, குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோடு நெருக்கமாக இருக்க முயற்சிகள் செய்கின்றன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் நடத்தும் இயக்கங்களில் அவர்களின் ஊழியர்களை அனுப்பி பங்கு பெறச் செய்கின்றன. இடதுசாரி கொள்கையின் அடிப்படையில் செயல்படுவதாகச் சொல்லுகின்றனர்.

153. இந்தச் சூழ்நிலையில் கட்சி அணிகள் மிக நிதானமாக இப்படிப்பட்ட தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகளைப் பரிசீலனை செய்ய வேண்டும், இனம் கண்டு செயல்பட வேண்டும். நமக்கு எதிராக செயல்படும் தன்னார்வக் குழுக்களின் முயற்சிகளை முறியடிக்கும் வகையில் நமது திட்டமிட்ட பிரச்சாரமும் செயலும் அமைய வேண்டும்.

154. நமக்கு அனுசரணையாக செயல்படும் தன்னார்வக் குழுக்களைப் பயன்படுத்த மாநில, மாவட்ட கட்சிக் கமிட்டிகளுடன் கலந்து பேசி முடிவுகள் எடுத்திட வேண்டும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்

155. தமிழகத்தில் நமது கட்சி தேசிய, மாநில அளவிலான பிரச்சனைகளின் மீது இயக்கம் நடத்தும் அதே நேரத்தில் தொழிலாளி வர்க்க கட்சி என்ற அடிப்படையில் நமது சர்வதேச கடமையையும் நிறைவேற்றியுள்ளது.

கியூபா ஆதரவு இயக்கம்

156. சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசத்திற்கு பின்னடைவு ஏற்பட்ட பின் மீதமுள்ள சோஷலிச நாடுகளையும் அழிப்பது அமெரிக்காவின்

குறியாக இருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவுக்கு அருகாமையில் 140 கிலோ மீட்டர் தூரத்தில் கியூபா ஒரு சோஷலிச நாடாக இருப்பதை அதனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, அதன் மீது பொருளாதார தடை உட்பட பலவிதமான தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வந்தது. ஆனால் உலக மக்களின் ஆதரவுடன் சோஷலிச கியூபா தன்னை பாதுகாத்து வருகிறது. சோவியத் நாட்டிலிருந்து உதவி கிடைக்காத நிலை ஏற்பட்டதனால், அவர்களுக்கு உணவுப் பிரச்சனை உட்பட பெரும் நெருக்கடி ஏற்பட்டது. 1992 ஜனவரியில் நடந்த நமது 14வது கட்சிக் காங்கிரசிலேயே கியூபாவுக்கு 10 லட்சம் டன் உணவு தானியத்தை இந்திய மக்களின் சார்பில் அனுப்பி வைக்க வேண்டும் என்று நாம் முடிவு செய்து அறிவித்தோம். நமது மாநிலத்திலிருந்து ஒரே ரகமான உணவு தானியம் வாங்குவதற்காக ஐந்து லட்ச ரூபாய் தர வேண்டும் என்று மத்தியக்குழு கோரியது. அதற்கு மேலாகவே வசூலித்து அனுப்பியிருக்கிறோம். கணிசமான அளவில் மருந்துகளும் அனுப்பிவைத்தோம். மருந்துகள் அனுப்புவதில் மருத்துவ பிரதிநிதிகள் பங்கு குறிப்பிடத்தக்கது.

157. கடந்த கட்சி மாநாட்டிற்கு பிறகு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சோஷலிசத்தை பாதுகாக்க நாம் ஆற்றிய மிகப்பெரிய சர்வ தேசிய பணி இதுவாகும். இதனை அமெரிக்க எதிர்ப்பு - கியூபா ஆதரவு இயக்கமாகவே நடத்தினோம். சமுதாயத்தின் பல் வேறு தரப்பினரை இதற்காக அணுகினோம். அரசியல் கட்சிகள், கலைஞர்கள், ஓவியர்கள், கவிஞர்கள், வர்த்தகர்கள், பத்திரிகையாளர்கள் போன்ற அனைவரும் ஒத்துழைப்பும் உதவியும் அளித்தனர். திமுக, இ.காங்கிரஸ், ஜனதாதளம் ஆகிய கட்சிகள் நிதி அளித்தன. சிபிஐ நிதியளிப்புக் கூட்டத்தில் பங்கு கொண்டது. இந்த இயக்கத்தையொட்டி ஆயிரக்கணக்கான துண்டு பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் வெளியிட்டோம். இது ஒரு மாநில ரீதியான இயக்கமாக நடைபெற்றது. அரிசி - நிதி வசூல் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது. நமது கட்சி அணிகளில் பெரும்பாலோர் உற்சாகமாக இந்த இயக்கத்தில் பங்கு கொண்டனர். இதற்காக அமைக்கப்பட்ட விரிவான கமிட்டிக்கு 'பிரண்ட்லைன்' ஆசிரியர் ராம்

கன்வீனராக இருந்து சிறப்பாக செயல்பட்டார். மாநில செயற் குழுவின் சார்பில் இப்பணிகளுக்கு தோழர் பி.ஆர்.பரமேஸ் வரன் பொறுப்பாக இருந்தார். கடந்தகாலத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பில் கட்சிக்கு அப்பாற்பட்டோரை ஈர்ப்பதில் பெரும் சிரமம் இருந்ததை நாம் அறிவோம். ஆனால், கியூபா பிரச்ச னையில் இதர பகுதி மக்கள் மத்தியிலும், இதர இயக்கங்கள் மத்தியிலும் முழுமையான ஒத்துழைப்பு இருந்தது நல்ல அனுப வமாகும்.

சூப்பர் 301 எதிர்ப்புக் கூட்டு இயக்கம்

158. அமெரிக்க ஏகாதிபத்தியம் அதனுடைய வர்த்தகச் சட்டத்தின் 301வது பிரிவுக்குள் நமது வர்த்தகத்தை உட்படுத்தச் செய்த முயற்சியை எதிர்த்து இயக்கம் நடத்த நமது மத்தியக் கமிட்டி அறைகூவல் விடுத்தது. சிபிஐ, ஜனதா தளம், திமுக ஆகிய கட்சி களுடன் பேசி கூட்டாக இயக்கம் நடத்த மாநில மையம் முயற்சி எடுத்து பேசப்பட்டது. 28.04.92 அன்று சென்னையில் நாம், சிபிஐ, ஜனதா தளம் ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து அமெரிக்க தூதரகம் முன் நடத்திய ஆர்ப்பாட்டம் அடையாள பூர்வமாக அமைந்ததே தவிர பெருந்திரளாக இல்லை. இந்த மூன்று கட்சிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் நின்று சேர்ந்து நடத் தியது நல்ல அம்சமே. எனினும், மக்களைத் திரட்ட முடிய வில்லை என்பது வருத்தத்திற்குரியது. சிபிஐயும், ஜனதாதளமும் நம்மைவிட பலவீனமான கட்சிகள். நாம் தான் ஓரளவுக்கு மக்களைத் திரட்டியிருக்க முடியும். சென்னையில் சில ஆயிரம் பேர்களைத் திரட்டி ஊர்வலம் நடத்தும் சக்தி நமக்கு உண்டு. அமெரிக்க தூதரகத்திற்கு முன்னால் நாம் தனியாக நடத்திய ஆர்ப்பாட்டங்களில் ஆயிரத்திற்கு அதிகமானோர் 2 ஆண் டுக்கு முன் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

159. இப்படி கடந்த மூன்றாண்டு காலமாக தொடர்ந்து வேக வேகமாக மாறிவரும் அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளில் நாம் தொடர்ச்சியாக தலையிட்டு, பொதுவாக சரியான நிலை எடுத்து முன்னேறி வருகிறோம். இந்த நிர்ணயிப்புகளுக்கும், போராட்டங்களுக்கும் அரசியல் தலைமைக்குழுவுடன் நாம்

நெருக்கமாக நின்று வழிகாட்டுதல் பெற்று செயல்பட்டு வந்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.

160. தமிழகத்தில் நாம் சந்தித்த இத்தகு பிரச்சனைகளுடன் சேர்த்து - சர்வதேச அரசியல் நிலையில் நமது கடமைகளை நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து இயக்கங்களை நாம் நடத்தி வந்தோம்.

161. கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாட்டில் நமது கட்சி பின் பற்றிய அரசியல் கொள்கைகள், நடைமுறைகளின் முக்கிய அம்சங்கள் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பல பிரச்சனைகளில் உதாரணமாக, இட ஒதுக்கீடு, காவேரி பிரச்சனை, மொழிப் பிரச்சனை, இலங்கைப் பிரச்சனை போன்றவைகளில் மற்ற அனைத்துக் கட்சிகளின் நிலைபாட்டி லிருந்து மாறுபட்ட அரசியல் நிலையை - தொழிலாளி வர்க்க நிலையை பின்பற்றியுள்ளோம். இதனால் கட்சியின் அரசியல் அந்தஸ்து உயர்ந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் மத்திய அரசின் தேசவிரோத கொள்கையை எதிர்த்தும், அதிமுக அர சின் மக்கள்விரோதக் கொள்கையை எதிர்த்தும் இடைவிடா மல் போராடியுள்ளோம்.

162. அனைத்திந்திய அளவில் அறைகூவல் விடுக்கப்பட்ட மூன்று பொது வேலைநிறுத்தங்களையும் ரெயில் மறியல் போராட்டத்தையும் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடத்தியுள் ளோம்.

163. 1994ல் நடத்தப்பட்ட சட்டமறுப்பு இயக்கத்தில் சிபிஐ(எம்), சிபிஐ கூட்டாக ஒன்றேமுக்கால் லட்சம் பேர்கள் சட்டத்தை மீறி சிறை சென்றனர். மாநில அரசின் ஊழல்களையும், மக்கள் விரோதக் கொள்கைகளையும் எதிர்த்து மாநிலத்தின் 5 முனை களில் இருந்து சென்னையை நோக்கி வாகனப் பிரச்சார இயக்கம் நடத்தினோம். இதையொட்டி 2 லட்சம் பிரசுரங்கள் விற்பனை செய்துள்ளோம்.

164. கட்சியின் அரசியல் கொள்கையை பிரச்சாரம் செய்ய திருச்சியில் அரசியல் மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தியுள் ளோம். **1992** ஜனவரியில் கட்சியின் **14**வது காங்கிரசை மிகச்

சிறப்பாக நடத்தினோம். இறுதிநாள் பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கு கொண்டனர்.

165. தீக்கதிர் பத்திரிகை 10,662 பிரதிகள் சென்னை, மதுரை இரு பதிப்புகள் விற்பனையாகிறது. செம்மலர் இலக்கிய மாத இதழ் 15,000 பிரதிகள் விற்பனையாகின்றன. மார்க்சிஸ்ட் தத்துவ மாத இதழ் 7,600 பிரதிகள் விற்பனையாகின்றன.

166. இப்படி பொதுவான செல்வாக்கும் - தலையீடும் கூடியிருந் தாலும்கூட,

★ நாம் நடத்தும் இயக்கங்கள் ஒருபகுதி மக்களையே சென்றடை கிறது;

★ முன்னைவிட நமது பொதுக்கூட்டங்களில் மக்கள் வருகை முன் னேற்றம் என்றாலும், இன்னும் பெருமளவு மக்கள் திரளை ஈர்க்கக்கூடியதாக இவைகள் அமைந்திட வேண்டும்.

★ அதிகரித்து வரும் அரசியல் ஸ்தாபன பொறுப்புகளையும் - தேவைகளையும் கணக்கில் கொண்டு நமது சுயேச்சையான இயக்கத்தை மேலும் பன்மடங்கு வளர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எதிர்கால அரசியல் கடமைகள்

167. மத்திய அரசின் நாசகரமான பொருளாதார கொள்கையை எதிர்த்தும், வகுப்புவாத சக்திகளை எதிர்த்தும், மாநில அதிமுக அரசின் மக்கள்விரோத கொள்கையை எதிர்த்தும் தமிழகத்தில் வலுவான மக்கள் இயக்கத்தை உருவாக்க வேண்டும்.

168. மேற்கண்ட அரசியல் கடமைகளை நிறைவேற்ற-

- நமது கட்சியின் அனைத்து மட்ட அமைப்புகளும், கிளை யில் இருந்து மாநிலக்குழு வரையில், சுயேட்சையான இயக் கங்களுக்கு திட்டமிட வேண்டும்.

- தமிழகத்தில் இடதுசாரி கட்சிகளின் ஒற்றுமையை பலப் படுத்தி இடதுசாரி கட்சிகளின் கூட்டு இயக்கங்களுக்கு முயற் சிக்க வேண்டும்.

- மாநிலத்தில் இடதுசாரி கட்சிகள் மற்றும் திமுக, மதிமுக, ஜனதாதளம் போன்ற மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளுக்கு அழைப்பு விடுத்து கூட்டு இயக்கத்திற்கு முயற்சிக்க வேண்டும். வருகின்ற கட்சிகளோடு சேர்ந்து மக்கள் பிரச்சனைகள் மீது வலுவான மக்கள் இயக்கத்தை உருவாக்க வேண்டும்.

புதுவை யூனியன் பிரதேச அரசியல் நிலைமை

169 பொதுவாக தமிழகத்தில் ஏற்படும் அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப புதுவையிலும் பிரதிபலிப்புகள் இருக்கும். சில நேரங் களில் மாறுபட்ட அரசியல் சூழ்நிலைமைகளும் உருவாகும். 1967க்குப் பிறகு தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வர இயலவில்லை. திராவிட கட்சிகளோடு மாறிமாறி உறவு கொண்டு இளைய பங்காளியாக இருந்து வருகிறது. ஆனால், புதுவையில் திமுக, அதிமுக கட்சிகளுடன் மாறி மாறி உறவு கொண்டு அந்த இரண்டு கட்சிகளுக்கும் உள்ள மோதலை பயன்படுத்தி தன்னைப் பலப்படுத்திக் கொண்டு ஆட்சியில் நீடித்து வருகிறது.

170. மத்திய அரசு அமுலாக்கக் கூடிய அதே கொள்கையை புதுவை காங்கிரஸ் அரசும் அமுலாக்கி வருகிறது. மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் நீடிப்பதனால் மத்திய அரசின் வரி உயர்வு, விலை உயர்வு மாநிலத்தில் அப்ப டியே அமுலாகி வருகிறது. புதுவை அரசு பட்ஜெட் மூலம் பால் விலை, பஸ் கட்டணம், மின் கட்டணம், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றை உயர்த்தியுள்ளது

171. புதுவை அரசின் அனைத்து துறைகளிலும் ஊழல் மலிந் துள்ளது. சட்டம் - ஒழுங்கு பாதிக்கப்பட்டு, கொலை, கொள்ளை களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன.

172. மத்திய அரசு கடைப்பிடித்துவரும் நாசகரமான அதே பொரு ளாதார கொள்கையை புதுவை அரசும் அமுலாக்கி வருவதால்

சமூக நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்த தொகைகள் வெட்டப்பட்டு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை என்பது பாதிப்புக்குள்ளாகி உள்ளது.

173. மத்திய அரசின் நாசகரமான பொருளாதார கொள்கையை எதிர்த்தும், மாநில அரசின் பொருளாதார மற்றும் மக்கள் விரோத கொள்கையை எதிர்த்தும் வகுப்புவாத சக்தியை எதிர்த்தும் தமிழகத்தைப் போலவே திமுக, சிபிஐ, ஜனதா தளம் ஆகிய கட்சிகளுடன் இணைந்து இயக்கங்கள் நடத்தினோம். திமுக எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும், அது புதுவை அரசை எதிர்த்து இயக்கம் நடத்த போதுமான ஆர்வம் காட்டுவ தில்லை. நம்முடைய முன்முயற்சியால் அகில இந்திய அளவி லான மேலும் தமிழகத்தில் முடிவாகும் இயக்கங்கள் புதுவை யிலும் நடத்தப்பட்டன.

174. திமுகவில் பிளவு ஏற்பட்டு இக்கட்சியின் மாநில அமைப்பா ளராக இருந்த டிஇராமச்சந்திரன் அதிமுகவில் சேர்ந்துவிட் டார். திமுக பிளவுபட்டு, மதிமுக உருவானபோது புதுவையில் முக்கிய தலைவர்கள் மதிமுகவிற்குச் செல்லவில்லை. திமுக வின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் மதிமுக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் உள்ளதுபோல் மதிமுக அவ்வளவு வலுவாக புதுவையில் இல்லை.

175. சிபிஐ கடந்த காலங்களைவிட சமீப காலத்தில் நம்முடன் கூட்டு இயக்கம் நடத்துவதில் ஒத்துழைத்து வருகிறது. புதுவை யிலும் சிபிஐ(எம்), சிபிஐ ஒருங்கிணைப்புக்குழு உருவாக் கப்பட்டுள்ளது.

176. கடந்த மூன்று ஆண்டுகளில் புதுவையில் நமது கட்சியின் சார்பில் மத்திய - மாநில அரசுகளின் மக்கள் விரோத கொள் கையை எதிர்த்து பல சுயேச்சையான இயக்கங்கள் நடந்துள் ளன. மாநில அரசின் வீட்டுவரி உயர்வை கண்டித்தும், கூட்டு றவு பண்ணையில் ஊழலை அம்பலப்படுத்தியும் நமது கட்சி எடுத்த முன்முயற்சிக்கு நல்ல வரவேற்பு இருந்தது. பிறகு அப் பிரச்சனைகள் மீது கூட்டு இயக்கத்திற்கும் நமது கட்சி முன் முயற்சி எடுத்தது. நமது கட்சியின் சுயேச்சையான இயக்கத்

திற்கும், கூட்டு இயக்கத்திற்கும் நாம் எடுக்கும் முன்முயற்சியால் மக்கள் மத்தியில் நமது கட்சிக்கு மரியாதை உயர்ந்துள்ளது.

177. புதுவையில் காங்கிரஸ் ஆளும் கட்சியாக இருப்பதால் திமுக, காங்கிரஸ் அரசை எதிர்க்கவேண்டிய கட்டாயம் உள்ளது. அதிமுகவிற்கும், காங்கிரசுக்கும் தமிழகத்தில் இருந்த உறவு முறிந்த பிறகு புதுவையிலும் காங்கிரஸ் அரசுக்கு அளித்த ஆதரவை அதிமுக விலக்கிக் கொண்டது. தற்பொழுது காங்கிரஸ் அரசினை எதிர்ப்பதில் புதுவை அதிமுக முனைப்புக்காட்டி வருகிறது.

178. புதுவையில் நமது கட்சியின் முன்முயற்சியில் திமுக, சிபிஐ, ஜனதா தளம் ஆகிய கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி பல பிரச்சனைகளில் கூட்டு இய்க்கம் நடத்தி சில பிரச்சனைகளில் அரசை பின்னுக்குத் தள்ள முடிந்துள்ளது. இம்முயற்சியை புதுவையில் தொடர வேண்டியுள்ளது. சமீப காலத்தில் கூட்டு இயக்கத்திற்கு திமுக போதுமான அக்கறை காட்டவில்லை.

179. இடதுசாரிக் கட்சிகளின் ஒற்றுமையைப் பலப்படுத்த முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. மக்கள் பிரச்சனைகளில் நமது கட்சி எடுக்கும் முன்முயற்சி, அதற்கு மக்களிடத்தில் கிடைக்கும் மரியாதை இதை உணர்ந்து சிபிஐ தலைமை, கடந்த மாநாட்டிற்கு முன்பு இருந்ததைவிட இப்போது கடந்த மூன்றாண்டுகளில் நம்முடன் கூட்டு இயக்கத்திற்கு வருகிறார்கள். இருப்பினும் சில நேரங்களில் முரண்பாடுகளும் வருவதுண்டு. இரண்டு கட்சிகளுக்கும் உள்ள உறவை மேலும் பலப்படுத்த வேண்டியுள்ளது.

180. புதுவை சிறிய பிரதேசமாகையினால் நமது கட்சியின் சுயேச்சையான இயக்கத்திற்கு நல்ல விளம்பரமும், வரவேற்பும் கிடைக்கிறது. இருப்பினும், இது கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளின் வளர்ச்சியில் போதுமான அளவிற்கு பிரதிபலிக்கவில்லை. வரும் காலத்தில் நமது சுயேச்சையான இயக்கத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதோடு, புதுவை மக்கள் பிரச்சனைகள் மீது இடதுசாரி கட்சிகளின் கூட்டு இயக்கத்திற்கு முயற்சிக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகளின் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து புதுவையில் இடது

சாரிக் கட்சிகள் மற்றும் மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளின் கூட்டு இயக்கத்திற்கு நாம் முன்முயற்சி எடுக்க வேண்டியுள்ளது.

181. புதுவை யூனியன் பிரதேசத்தில் உள்ள நமது கட்சி காரைக்கால் உள்ளிட்ட புதுவை மாவட்டக்குழு என்ற அடிப்படையில் தமிழ் மாநிலக்குழு வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வருகிறது. புதுவை யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த மாஹி ஒரு ஏரியா கமிட்டியாக கேரளா கட்சியின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வருகிறது.

தொழிற்சங்க அரங்கம்

182. மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகவும் - மாநில அரசின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளின் விளைவாகவும் தமிழகத்தில் - தொழிலாளி வர்க்கமும், மத்திய தர வர்க்கமும் கடுமையான தாக்குதல்களை சந்தித்த காலமிது. அரசுகள் மற்றும் நிர்வாகங்களின் தாக்குதல்களுக்கு எதிராக பெற்ற உரிமைகளைப் பேணிக்காக்கும் போராட்டங்களை கடந்த மூன்றாண்டு காலத்தில் தொடர்ச்சியாக நடத்தியுள்ளோம். 14வது அகில இந்திய மாநாடு மற்றும் தஞ்சை மாநில மாநாடு சுட்டிக்காட்டிய கடமைகளை நிறைவேற்றவும் ஓரளவு முயற்சிகள் நடைபெற்றுள்ளன.

183. புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக பொது வேலை நிறுத்தம்ஆண்டுக்கொன்றாக மூன்று வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. ஒவ்வொரு முறையும் அதற்கு முந்தைய வேலை நிறுத்தத்தை விட கூடுதலான தொழிலாளர்களையும் - ஊழியர்களையும் பங்கேற்க செய்ய முடிந்துள்ளது என்பதும், 1994 செப்டம்பர் 29 வேலை நிறுத்தத்தில் மாநில அதிமுக அரசே பஸ்களை நிறுத்தியதுடன், அதிமுக தொழிற்சங்கமும் பங்கேற்கும் நிலை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. அரசியல் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள் இதற்கொரு காரணம் எனினும் புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக

தொழிலாளி வர்க்கத்திடம் அதிகரித்து வரும் கோபமே இதற்குப் பிரதான காரணம்.

184. பொருளாதாரக் கொள்கைகள் மேலும் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து எதிர்காலத்தில் வலுமிக்க தொடர் இயக்கங்களை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இத்தகு நிலைக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் செயல்பாட்டிலும் - ஸ்தாபன ஏற்பாடு களிலும் உரிய முன்னேற்றம் காண வேண்டியுள்ளது. பொது வான நாடு தழுவிய வேலை நிறுத்தங்களை தமிழகத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றுவதுடன் இதனுடைய பாதிப்பு களை எதிர்த்த ஆலைமட்ட போராட்டங்களும் வலுவடைந்து வருகின்றன. சென்னை பி அண்ட் சி ஆலை, ஸ்டாண்டர்ட் மோட்டார், மெட்டல் பாக்ஸ், ஸ்ரீராம் பைபர்ஸ், புகளூர் சர்க் கரை ஆலை, புதுக்கோட்டை கூட்டுறவு பஞ்சாலை, காங்கேயம் வேலன் டெக்ஸ்டைல்ஸ் உள்ளிட்ட பல குறிப்பிடத்தக்க ஆலை மட்ட போராட்டங்கள் மாநிலம் முழுவதும் நடைபெற் றுள்ளன. புகளூர் போராட்டத்தில் போலீஸ் துப்பாக்கி சூட் டிற்கு 3 தொழிலாளர்கள் பலியானார்கள்.

185. அணிதிரட்டப்படாத பகுதி தொழிலாளர்கள் மத்தியில் நமது செயல்பாடு தேவைக்கேற்ப இல்லையெனினும் முன்னைக் காட்டிலும் அதிகரித்துள்ளது. புதிய பொருளாதாரக் கொள் கைக்கு எதிராக இந்தப் பகுதி தொழிலாளர்கள் 1 1/2 லட்சம் பேர் 1993 ஜூலை 14அன்று நடைபெற்ற வேலை நிறுத்தத் தில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. மின் அரங்கத்தில் காண்ட் ராக்ட் தொழிலாளர்களைத் திரட்டி நடத்தி வரும் போராட்டம், போக்குவரத்து துறையில் நடைபெற்ற போராட்டங்கள், பீடித் தொழிலாளர்கள் போராட்டங்கள் என பற்பல பகுதிகளில் இக்காலத்தில் நமதுதலையீடு முன்னைவிடக் கூடுதலாக இருந் துள்ளது. இதன் விளைவாக நமது தலைமையில் உள்ள தொழிற் சங்க அமைப்பில் செல்வாக்கு அதிகரித்துள்ளது. உறுப்பினர் எண்ணிக்கையில் 20 சதவீதம் உயர்வு, அரங்கப் பத்திரி கைகள் விற்பனை அதிகரிப்பு, தொடர்ச்சியாக இயங்கும் மாநில மையம் என்று குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் உண்டு.

186. 'தொழிற்சங்க அரங்கின் நமது கடமைகள்' என்ற ஆவணம் சுட்டிக்காட்டும் முன்னுரிமைக் கடமைகளை அமுலாக்க ஓரளவு முயற்சிகள் நடைபெற்றுள்ளன. கியூபா மக்களுக்கான நிதி திரட்டும் பணியில் நமது சங்கங்களின் செயல்பாடு, மராட்டிய மாநிலத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 82,218 ரூபாய் நிதி உதவி ஆகியவை இக்காலத்தில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க பணிகளாகும். இதர பகுதி மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவாக நமது இயக்க தொழிலாளர்களைத் திரட்டி இயக்கங்கள் நடத்துவது பலவீனமாகவே தொடர்கிறது. இதேபோல் உழைக்கும் பெண்களைத் திரட்டுவதிலும், ஓரளவு முயற்சிகள் நடைபெற்றிருந்தாலும் அவை போதாது. இவ்வியக்கத்தை வலுப்படுத்துவதுடன் மாநில மையம் ஒன்று உருவாக்கி தொடர்ச்சியான செயல்பாட்டை உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

187. காண்ட்ராக்ட், கேஷுவல், பயிற்சியாளர் ஆகியோரைத் திரட்டுவதில் மின் அரங்கம், ரயில்வே, நெய்வேலி, திருச்சி பிஎச்இஎல் ஆகிய பகுதிகளில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதுடன், இதர பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டும். அடிப்படைத் தொழில்களில் கவனம் செலுத்துவது, அணிதிரட்டப்படாத தொழிலாளர்களை திரட்டுவது ஆகியவற்றில் எடுத்த முயற்சிகளைத் தொடர்ந்து வலுப்படுத்தி விஸ்தரிக்க வேண்டியுள்ளது.

188. வேலையின்மைக்கெதிராக இக்காலத்தில் இவ்வரங்கில் எந்த முயற்சியும் நடத்தப்படவில்லை என்பது பெரும் பலகீனம் ஆகும். இதேபோல் இன்று முக்கியமான பிரச்சனைகளில் ஒன்றாக முன்வந்துள்ள குழந்தைத் தொழிலாளர் பிரச்சனையில் நமது கவனம் திருப்பப்பட வேண்டும். குழந்தை உழைப்பு ஒழிக்கப்பட போராடும்போதே, அவர்கள் ஊதியம், கல்வி, வேலைநிலை போன்றவற்றை முன்னிறுத்தி இயக்கங்கள் நடத்த வேண்டியுள்ளது.

189. விவசாய இயக்கத்திற்கு ஆதரவாக நிதி திரட்டும் மிக முக்கியமான கடமையை கடந்த மூன்றாண்டுகளிலும் நிறைவேற்றி

யுள்ளோம். 1992ல் ரூ. 55,545, 1993ல் ரூ. 62,066, 1994ல் ரூ. 81,052, 1995ல் ரூ. 59,875 என நிதி வழங்கப்பட்டுள்ளது.

190. தொழிலாளர்களுக்கு அரசியலூட்டும் பணி, தொழிலாளர்கள் மத்தியில் இருந்த கட்சி உறுப்பினர்களை பெருமளவு சேர்க்கும் பணி ஆகியவற்றில் உள்ள பலவீனங்களை கடந்த மாநில மாநாடு சுட்டிக்காட்டியுள்ளது. இவ்வகையில் ஒரு சில முயற்சிகள் நடைபெற்றிருப்பினும், பொதுவாக பலவீனமான நிலை தொடர்வதாகவே இருக்கிறது. வரும் காலத்திலாவது இதில் ஒரு முறிப்பு காண திட்டமிட்டு முயற்சிகள் தேவைப்படுகிறது. மாநில, மாவட்ட கட்சிகளின் முன்னுரிமைக்கடமைகளில் ஒன்றாக இது ஆக்கப்பட வேண்டியுள்ளது.

191. இது ஒருபுறம் இருக்க தொழிற்சங்க செயல்பாட்டில் உள்ள பிரச்சனைகளை கவனித்து - ஒழுங்குபடுத்த வேண்டிய சில அம்சங்கள் குறிப்பிடத்தக்கவை. அவையாவை:

பெரும்பான்மையான சங்கங்கள் சிறிய எண்ணிக்கையுடன் செயல்படுகின்றன. விரிவுக்கான திட்டம் இல்லை. சட்ட விதிப்படி செயல்படுவது, ஜனநாயக முறைப்படி செயல்படுவது ஆகியவற்றிற்கான பயிற்சி தேவைப்படுகிறது. நம்மால் பிரச்சனையை கிளப்பத்தான் முடியும், தீர்க்க முடியாது என பரவலாக தொழிலாளர்கள் நினைக்கின்றனர். உற்பத்தி, உற்பத்தித் திறன், வேலைப்பளு போன்றவற்றில் நம்முடைய அணுகுமுறை பற்றி தெளிவு வேண்டும். இந்த பிரச்சனைகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் கருத்துக்களை முறையாகக் கேட்டும் மேல் கமிட்டிகளை கலந்தும் முடிவு செய்ய வேண்டும். நவீன தொழில்நுட்ப முறைகளை பயில வேண்டும். எல்லா பிரிவுகளைப் பற்றியும் ஞானம் பெற முயற்சிக்க வேண்டும்.

192. ஊதிய மாற்றம், போனஸ் போன்ற கோரிக்கைகளின் போது பொதுக்குழு உறுப்பினர்கள் வருகிறார்கள். இதர நாட்களில் கூட்டத்திற்கு வருவதில்லை என்கிற போக்கு உள்ளது. இங்கும் கூட நிர்வாகக்கமிட்டி, பேரவை போன்றவற்றை நடத்தும் முறையில் மாற்றம் தேவைப்படுகிறது. சிறுபான்மையின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுத்து பேச அனு

மதிப்பது அவசியமாகும். சாதாரண உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை கூற அவகாசம் கொடுப்பதும், அவர்களை ஊக்கப்படுத்துவதும் தேவை. ஒப்பந்தம் அல்லது நகல் ஒப் பந்தம் பேரவையில் வைத்து அனுமதி பெற்று கையெழுத்திட வேண்டும்.

★ டிப்பார்ட்மெண்ட் கமிட்டிகளை உருவாக்கி அவற்றைச் செயல் பட வைப்பதின் மூலம் அன்றாட வேலைகளில் சாதாரண உறுப்பினர்களை ஈடுபட வைக்கமுடியும். நம் சங்கத்தில் இதர தொழிலாளர்கள் பிரச்சனைகளை எடுப்பது, அவர்களுடன் நட்புடன் பழகுவது நம்முடைய உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த உதவும்.

★ பெண் தொழிலாளர்கள் பணியாற்றும் சங்கங்களில்எல்லாம் துணைக்குழுக்கள் அமைத்து செயல்படவும், சங்கப் பொறுப்பு களுக்கு பெண்களை கொண்டு வரவும் கவனம் செலுத்த வேண்டும்.

★ பொருளாதார கோரிக்கை தவிர கலை, இலக்கியம், விளை யாட்டு, மொழி, அரசியல் போன்ற பிரச்சனைகளில் தொழி லாளர்களிடையே உள்ள ஆர்வத்தை புரிந்து செயல்பட வேண்டும். அவர்கள் வாழும் இடத்தில் உள்ள பிரச்சனைகள், குழந்தை கல்வி போன்றவற்றிற்கும் உதவ நாம் முயல வேண்டும்.

★ அதிதீவரவாதப் போக்கு, முரட்டுத்தனமான அணுகுமுறை நம்மை உறுப்பினரிடம் இருந்து தனிமைப்படுத்திவிடுகிறது. விமர்சனத்தை தாங்கிக் கொள்ளாத போக்கு பரவலாக பார்க்க முடிகிறது. இவைகளை மாற்ற போராட வேண்டியுள்ளது.

★ சங்க நிதி சம்பந்தமாக கையாடல் போன்ற புகார்கள் இல்லை என்றாலும் வரவு - செலவு கணக்குகள் எல்லா சங்கங்களிலும் ஒழுங்காக இருப்பதாக கூறமுடியாது. உள் தணிக்கை முறை உருவாக்க வேண்டியுள்ளது. வரவு - செலவுகளில் தேவையற்ற விவாதங்களை தவிர்க்க ஒழுங்கான முறையை கடைப்பிடிப்ப தும் நிர்வாகக் கமிட்டி பேரவைகளில் வைத்து பரிசீலிப்பதும் கண்டிப்பாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

★ தவறான செயல்பாடுகள் பற்றி தெரியவருமானால் அவசர உணர்வோடு தலையிட்டு சரிசெய்வதில் கவனம் செலுத்த வேண்டும். தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலும் எச்சரிக்கையுடனும், ஜனநாயக பூர்வமாகவும் இருக்க வேண்டும்.

விவசாய அரங்கம்

193. விவசாய அரங்கத்தில் நமது செயல்பாடு எவ்வளவு பலவீன மாக உள்ளது - அதில் உருவாக்கப்பட வேண்டிய மாற்றம் எத்த கைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை 14வது அகில இந் திய மாநாடு அழுத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளது. தஞ்சையில் நடந்த நமது மாநில மாநாடும் இவ்வரங்கில் நமக்கிருக்கின்ற பலவீனம் தமிழகத்தின் வர்க்க பலாபலனை மாற்றுவதற்கு பெரும் தடையாக இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக் காலத்தில் இவ்வரங்க செயல்பாட்டில் முன்னேற்றம் காண மாநில அளவில் ஒரளவு கடுமையான முயற்சி எடுக்கப்பட்டி ருந்தும் கூட முன்னேற்றம் பெரிதாக இல்லை என்பது கவலை யுடன் பரிசீலிக்க வேண்டியதாகும்.

194. இக்காலத்தில் இவ்வரங்கில் விவசாயத் தொழிலாளர் களுக்கான பத்தம்ச கோரிக்கை மீது மாநில மாநாடு 55 வட்ட சிறப்பு மாநாடுகள், 12 மாவட்டங்களில் விளக்கப் பிரச்சார பயணம், மாவட்ட தலைநகர்களில் பேரணி என்று தொடர்ந்து முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மாநிலந்தழுவிய மறியலும் நடைபெற்று 4491 பெண்கள் உட்பட 19000 பேர் சிறை சென்றுள்ளனர். இத்துடன் பெண்கள் பிரச்சனைக்கான சிறப்பு மாநாடுகள், சில மாவட்டங்களில் கூலி உயர்வுக்கான வேலை நிறுத்தங்கள் என்று தொடர்ந்து முயற்சிகள் எடுக்கப் பட்டுள்ளன.

195. எனினும் நமது சக்திக்கும்- வாய்ப்புக்கும் ஒப்பிட்டால் முயற் சியும், பலனும் மிகக் குறைவே.

196. பல மாவட்டங்களில் இத்தகைய முயற்சியே செய்யவில்லை என்பதும், பலமுறை மாநில மையத்திலிருந்து வலியுறுத்தப் பட்டும் நடை பெறவில்லை என்பதும் இப்பகுதி மக்களை திரட்டுவதில் நமக்குள்ள உணர்வுநிலைக் குறைபாட்டையே காட்டுகிறது.

197. தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்கள் எண்ணிக்கை கடந்த பத்தாண்டு காலத்தில் 30 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்று அரசு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அதாவது ஏழை சிறு விவசாயிகள் தங்களின் துண்டு - துக்காணி நிலங் களில் லாபகரமாக விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிற நிலத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றே இதன் பொருள்.

198. அது மட்டுமின்றி 1991 கணக்குப்படி தமிழ்நாட்டில் விவ சாயத் தொழிலாளர்கள் எண்ணிக்கை 78 லட்சத்து 50 ஆயிரம் என விவரங்கள் தெரிவிக்கின்றன. இதில் தென்னாற்காடு (2), நாகை காயிதே மில்லத், தஞ்சை, திருச்சி, மதுரை, சேலம், செங்கை, கோவை. பெரியார் ஆகிய மாவட்டங்களில் ஏறத் தாழ 63 சதவீதம் விவசாயத் தொழிலாளர்கள் குவிந்துள்ளனர். வட ஆற்காடு - அம்பேத்கார், தர்மபுரி, திருவண்ணாமலை - சம்புவராயர், திண்டுக்கல், நெல்லை - கட்டபொம்மன் மாவட் டங்களில் தமிழக விவசாயத் தொழிலாளர்களில் சுமார் 25 சத வீதம் பேர் உள்ளனர்.

199. இன்னும் நுணுகி ஆராய்ந்தால் இந்த மாவட்டங்களிலும் பாசன உத்தரவாதமான சில தாலுகாக்களில் இவர்கள் குவிந் துள்ளதைக் காணமுடியும்.

200. இந்த விவசாயத் தொழிலாளர்களில் 45% தாழ்த்தப்பட்ட மக்கள், 55% பல்வேறு பிற்படுத்தப்பட்ட வகுப்புக்களை சார்ந்த வர்கள் என்றும் விவரங்கள் தெரிவிக்கின்றன.

201. ஆக, இப்பகுதி மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வென்றெடுக்காமல் தமிழகத்தில் பலாபலன் மாற்றம் என்பது சிந்தித்துப் பார்க்கவே முடியாத ஒன்று. கிராமப்புறங் களில் அதிமுக - காங்கிரஸ் இயக்கங்களின் தளமாக இன்ன

மும் இயங்குகின்றன பெரும்பகுதி மக்கள் இப்பிரிவைச் சார்ந்தவர்கள். தலித் இயக்கம், பல்வேறு தீவிரவாத இயக்கங்கள், அம்பேத்கார் அமைப்பு போன்ற பலதும் முனைந்து பிரச்சனைகளை திசை திருப்புவதும், பிரதானமாக இப்பகுதிகளில் நிலைமை இப்படியிருந்தும், நாம் இத்துறையில் எடுத்துள்ள முயற்சி ஒப்பு நோக்குகையில் கடந்த காலங்களைவிட முன்னேற்றம். எனினும், தேவைக்கும் நடந்த முயற்சிக்கும் இடையில் பெரும் இடைவெளி இருப்பது உணரப்பட வேண்டும்.

202. விவசாயத் தொழிலாளர்கள் குவிந்துள்ள தாலுகா பகுதிகளை இனங்கண்டு ஊழியர் உத்தரவாதம் செய்து, விசேஷ கவனம் செலுத்துவது என்பது அடுத்த கட்டத்தில் கட்சியின் முன்னுள்ள முன்னுரிமைக் கடமையாக்கப்பட வேண்டும்.

விவசாயிகள் மத்தியில்

203 இக்காலத்தில் காவிரி நீர் பாசனப் பிரச்சனை, இலவச மின்சாரம், உரமானியம் ரத்து போன்ற சிக்கலான கொள்கை ரீதியான பிரச்சனைகளில் சரியான நிலையெடுத்து, நமது அணிகள் மத்தியில் விளக்குவதில் மாநில மையம் உரிய நேரத்தில் உரிய முறையில் தலையிட்டது.

204. விவசாயிகள் மத்தியில் இக்காலத்தில் வெள்ள நிவாரணம், வறட்சி நிவாரணம், விளைபொருள் விலை, நிலவரி உயர்வு எதிர்ப்பு, உரவிலை ஏற்றம், உரப்பதுக்கலுக்கு எதிரான இயக்கம் ஆகியவைகளை தொடர்ந்து நடத்தியுள்ளோம். தனியாகவும், சிபிஐ சங்கத்துடன் சேர்ந்தும் இதர விவசாயிகள் இயக்கத்தை இணைத்துக் கொண்டும் இப்போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

205. மாநில அளவில் உருவாக்கப்பட்டுள்ள மலைவாழ் மக்கள் சங்கம் இன்று அநேகமாக அனைத்து மலைகளிலும் மக்களைத் திரட்டிப் போராடும் அமைப்பாக செயல்படுகிறது. உழவன் உரிமை விற்பனையில் முன்னேற்றம், பிரசுரங்கள் வெளியிடுதல், மாநில- மாவட்ட பயிற்சி முகாம்கள் என சில முயற்சிகளும் நடைபெற்றுள்ளன.

206. விவசாயம் முதலாளித்துவ மயமாக்கப்படுவதைத் தொடர்ந்து பகுதிவாரியான விவசாயிகள் தனிச்சங்கங்கள் காண்பதற் குள்ள உந்துதலை கணக்கில் கொண்டு கரும்பு விவசாயிகள் சங்கம், பட்டு விவசாயிகள் சங்கம், பண்ணைத் தொழிலா ளர்கள் சங்கம், மரம் ஏறும் தொழிலாளர்கள் சங்கம் என்று சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த சங்கங்கள் எல்லாம் இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருப்பினும் தொடர்ந்து முயற்சித்தால் கிராமப்புற இயக்கத்திற்கு வலுவூட்டுவதாய் நிச்ச யம் அமையும்.

207. இறால் பண்ணை, தேயிலை விலை வீழ்ச்சி உள்ளிட்ட புதிய பொருளாதாரக் கொள்கைகளின் பாதிப்புகளுக்கு எதிராக நமது தலையீடு ஓரளவு பயன்தரும் இயக்கமாக நடந்தது.

208. இப்படித் தொடர்ச்சியாக முயற்சிகள் இருப்பினும் உறுப் பினர் எண்ணிக்கை உயர்வில் இது பிரதிபலிக்கவில்லை. தமிழ்நாட்டு கிராமப்புறங்களில் ஒரு பிரதிபலிப்பை உருவாக் கும் இயக்கமாக மாற வெகுதூரம் செல்ல வேண்டியவர்களாக இன்னும் இருக்கிறோம்.

பிரச்சனைகள் பற்றி ஆய்வு

209. மாநில அளவில் விவசாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் இன் றைய சூழலுக்கு ஏற்ற முன்னுரிமை கொடுக்க வேண்டிய பிரச் சனைகள் குறித்து ஓர் ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்பது கடந்த மாநில மாநாட்டின் கட்டளைகளில் ஒன்று.

210. அத்தகைய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கட்சியின் உப குழு தயாரித்த இந்த ஆய்வறிக்கை திருவாரூரில் நடைபெற்ற விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாயத்தொழிலாளர் சங்க மாநிலக்குழுக்களால் அங்கீகரிக்கப்பட்டது. இதையொட்டி மாவட்டங்களில் ஸ்தூலமான நிலைகள் பற்றி பரிசீலிக்க ஒரு கேள்வித்தாள் மாநில மையத்தால் தயாரிக்கப்பட்டு மாவட்டங் களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

211. இத்தகைய ஆய்வுகள் தொடர்ந்து நடத்தும் அதே வேளையில், இதுவரை வந்துள்ள நிர்ணயிப்பை ஒட்டி பிரதான கோஷங்கள் வரையறுக்கப்பட்டு இயக்கங்களுக்கு திட்டமிட வேண்டியுள்ளது.

ஸ்தாபனத்துறையில் ஏற்பட்டுள்ள பிரதான பலவீனங்கள்

212. மாவட்டத்திற்கு இரண்டு அல்லது மூன்று ஊழியர்கள் பிரதானமாக இவ்வரங்கத்திற்கு என ஒதுக்கப்பட்டு, தொடர்ச்சியாக செயல்படும் மாவட்ட மையம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை. அதேபோல் மாவட்டங்களில் விவசாயி - விவசாயத் தொழிலாளர் இயக்கம் பிரதானமாக உள்ள தாலுகாக்களில் ஒரு முழுநேர ஊழியராவது இவ்வரங்கத்திற்கென பிரதானமாக ஒதுக்கப்படுவது என்பது நடைபெறவே இல்லை.

213. இதேபோல் குறிப்பிட்ட தாலுகாக்களும், கிராமப்புற கட்சிக் கிளைகளும் விவசாய அரங்கத்தை பிரதான அரங்கம் என்று கருதி தொடர் செயல்பாட்டில் ஈடுபட வேண்டுமென்ற மிக முக்கியமான கடமை பெருமளவில் நிறைவேற்றப்படுவதில்லை.

214. மற்ற அரசியல் கருத்துக்களையும் ஈர்க்கும் அளவு ஜனநாயக ரீதியான செயல்பாடு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்பதில் முன்னேற்றம் இல்லை. இதன் விளைவாக கட்சி வட்டத்திற்குள் செயல்படும் மார்க்சிஸ்ட் கட்சியின் விவசாய சங்கம் என்ற தோற்றமே இன்னும் நிலவுகிறது. இவைகளில் ஒரு முறிப்பு கொண்டு வரும் அளவு மாநில, மாவட்ட மைய செயல்பாடுகளிலும் மாறுதல் காண வேண்டியுள்ளது.

வாலிபர் அரங்கம்

215. திராவிட இயக்கக் கட்சிகளின் பின்னால் தமிழகத்தில் பெரும்பகுதியினர் உள்ள சூழலில், சீரழிவு கலை - கலாச்சாரம் உள்ளிட்ட தொடர்தாக்குதல்கள் அதோடு பெருமளவு வேலையின்மை போன்ற கொடுமைகள் தொடரும் சூழலில், தமிழகத்து இளைஞர்களை அமைப்பு ரீதியாக திரட்டுவதும் - அவர்களை அரசியல்படுத்துவதும் நம் முன்னுள்ள பிரதான கடமைகளில் ஒன்றாகும்.

216. இக்காலத்தில் நமது தொடர்ந்த செயல்பாடுகள் காரணமாக சுமார் 2லட்சம் உறுப்பினர்கள் அதிகமாகியுள்ளனர். தமிழகத்தில் இன்று நமது வாலிபர் சங்கம் 5 லட்சம் என்று உறுப்பினர் இலக்கை எட்டியுள்ளது - தாண்டிக் கொண்டிருக்கிறது என்பது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களில் குறிப்பிடத்தக்கதாகும். எனினும், கடும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளதையும் காணமுடியும். உறுப்பினர் சேர்ப்பில் சரிபாதிக்கு மேல் (2.84,000) கோவை, சென்னை, மதுரை, செங்கை, சேலம், கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களுக்குள்ளேயே உள்ளது. அதேபோல் தமிழ்நாட்டு நகர்ப்புறங்களில் - குறிப்பாக மாவட்டத் தலைநகர்களில் நமது வாலிபர் இயக்க செயல்பாடு ஓரிரு நகரங்களைத் தவிர மிகவும் பலவீனமாய் இருப்பதுகவலைக்குரியதாகும். வரும் காலங்களில் அனைத்து மாவட்டத் தலைநகர்களிலும் வாலிபர் இயக்கம் உருவாக்குவது, விஸ்தரிப்பது முன்னுரிமைக் கடமையாக்கப்பட வேண்டும்.

217. பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளில் இறங்கும் இயக்கமாக நமது வாலிபர் இயக்கம் மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது. விளையாட்டு விழாக்கள், ரத்ததான முகாம்கள், உள்ளிட்ட பலவிதமான நடவடிக்கைகள் நமது வாலிபர் இயக்கத்திற்கு நல்ல தோற்றத்தை அளித்துள்ளது. இளைஞர் முழக்கம் கடன் இல்லாமல் நடத்தப்படுவதும் விற்பனை எண்ணிக்கையை தொடர்ந்து உயர்த்தி வருவதும் நல்ல அம்சமாகும்.

218. பஸ் கட்டண உயர்வை எதிர்த்து டிஒய்எப்ஐ சார்பில் நடத்தப்பட்ட சிறப்பான மறியலும், போலீஸ் தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்து உறுதியாக போராடியதும் இக்காலத்தில் நடைபெற்ற நல்ல பிரதிபலிப்பை உண்டாக்கிய இயக்கமாகும். சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற மாநில மாநாடு பல்லாயிரக் கணக்கான வாலிபர்களை அணிதிரட்டியதாக - பெருமளவு விளம்பரத்துடன் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

219. கலைத்துறையில் நமது செயல்பாட்டில் அபிவிருத்தி காண்பது, உறுப்பினரானவர்களை இயக்கத்தில் பங்கெடுப்பதை அதிகப்படுத்துவது, வாலிபர்களுக்கு அரசியல் உணர்வூட்டும் நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்துவது ஆகியவைகள் எதிர்காலக் கடமைகளில் முன்னுரிமை பெற வேண்டும். இந்திய மாணவர் சங்கத்திற்கு உதவி செய்து அதன் வளர்ச்சிக்கும் துணை நிற்கும் பணி தொடர்கிறது. இது வலுப்படுத்தப்பட வேண்டும். ஏராளமான வாலிபர்களைக் கட்சிக்கு கொண்டு வரும் வாய்ப்பை முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

220. இன்று பல மாவட்டங்களில் கட்சி மற்றும் இதர அரங்க ஊழியர்களில் கணிசமான பகுதியினர் வாலிபர் அரங்கத்தின் மூலம் வென்றெடுக்கப்பட்டவர்கள் என்பது இவ்வரங்கில் நமது கவனம் செலுத்த வேண்டிய முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

கட்சியின் வழிகாட்டுதல்

221. பல மாவட்டங்களில் மாவட்ட செயற்குழு, மாவட்டக்குழு கூட்டங்களில் வாலிபர் அரங்கம் குறித்து எழுத்துபூர்வமான அறிக்கை வைத்து விவாதிக்கப்படுவதில்லை. வளர்ச்சியில் ஏற்படுகிற பிரச்சனைகளை சமாளிப்பதற்கும், வாய்ப்பைப் பயன்படுத்தி மேலும் முன்னேறுவதற்கும் வாலிபர் அரங்க செயல்பாடுகள் குறித்து கட்சிக் கமிட்டிகளில் விவாதித்து வழிகாட்ட வேண்டும். முடிவுகளை கட்சியின் கீழ் கமிட்டிகளுக்கு ரிப்போர்ட் செய்து அவற்றை அமுல்படுத்த தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்.

222. வாலிபர் அரங்கத்தை கட்சியின் அங்கம் போல் பாவிக்கும் தன்மை பல மையங்களில் உள்ளது. இத்தன்மை மாற்றப்பட வேண்டும். வெகுஜன அமைப்பு என்கிற தன்மையோடு, வாலிபர் அரங்கம் வழிநடத்தப்பட வேண்டும்.

223. வாலிபர் அரங்கில் பணியாற்றுகிற தோழர்களில் சிலர், சில சமயங்களில் கட்சியின் வழிகாட்டுதலைப் பெறாமலேயே முடிவெடுக்கிற தன்மையும் அவ்வப்போது வெளிப்படுகிறது. சுயேட்சையான செயல்பாடு என்பதைத் தவறாக புரிந்து கொள்வதில் இருந்து இது ஏற்படுகிறது. இத்தகைய போக்குகளை சுட்டிக்காட்டி முறைப்படுத்த வேண்டும்.

கட்சியைக் கட்டும் பணி

224. வாலிபர் அரங்கத்தில் இருந்துதான் கட்சிக்கு அதிகமான தோழர்களை வென்றெடுக்க முடியும். இக்காலத்தில் கட்சி உறுப்பினர் அதிகரிப்பதில் வாலிபர் அரங்கத்தின் பங்கு கூடுதலாக உள்ளது. வாலிபர் அரங்கத்தின் மூலம் பல புதிய பகுதிகளுக்கும் கட்சி விரிவடைந்துள்ளது. ஆனால் வாலிபர் சங்க வளர்ச்சிக்கு ஏற்ப வாலிபர் அரங்கில் கட்சியின் வளர்ச்சி இல்லை. பல மாவட்டங்களில் வாலிபர் சங்கத்தில் கிளை அளவில் பல ஆண்டுகள் செயல்பட்டு வரும் முன்னணி ஊழியர்களைக் கூட கட்சி உறுப்பினர் ஆக்காத நிலை உள்ளது. இதனால் அவர்கள் செயலற்றுபோகும் நிலை ஏற்படுகிறது.

225. வாலிபர் அரங்க பிராக்ஷன்களில் கட்சியைக் கட்டும் பணி குறித்து விவாதித்து திட்டமிட வேண்டும். கட்சிக் கமிட்டிகளின் மூலம் பிராக்ஷன் முடிவுகள் அமுலாக்கப்பட வேண்டும். இடைக்கமிட்டி மட்டங்களில் வாலிபர் அரங்கத்தில் கிளை அளவில் பணியாற்றும் முன்னணி ஊழியர்களுக்கான கட்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். வாலிபர் அரங்க முன்னணி ஊழியர்களை அரசியல்படுத்துவது, கட்சி உறுப்பினர்களாக்குவது ஆகிய பணிகளை கட்சியின் இடைக் கமிட்டிகள் மூலமே செய்திட முடியும். வாலிபர் அரங்கத்தைக் கட்டுவது, கட்சியைப் பலப்படுத்துவது என்பது பிரதானமானது என்பதை கவனத்தில் கொண்டு, இப்பணியைத் திட்டமிட்டு செய்திட வேண்டும்.

மாதர் அரங்கம்

226. சமுதாயத்தில் சரிபாதியான பெண்களை அமைப்பு ரீதியாக திரட்டுவதும் - அவர்களை அரசியல்படுத்தி புரட்சிகரப் போராட்டத்தின் பகுதியாக ஆக்குவதும் நம்முன்னுள்ள பிரதான கடமை என்பதனை கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இக்காலத்தில் இவ்வரங்க செயல்பாட்டில் ஓரளவு முன்னேற்றம் உண்டு.

227. தொழிற்சங்கம், விவசாய சங்கம், வாலிபர் சங்கம், மாணவர் சங்கம் உள்ளிட்ட அனைத்து வெகுஜன ஸ்தாபனங்களும் பெண்களைத் திரட்டுவதிலும் அவர்களது பிரச்சனைகளுக்குப் போராடுவதையும் முக்கிய கடமையாக மாற்ற வேண்டியுள்ளது. இக்காலத்தில் இவ்வகையில் சிறிதளவு முன்னேற்றம் உண்டு என்பதும், ஆனாலும் இன்னும் நாம் நெடுந்தூரம் செல்ல வேண்டியுள்ளது.

228. எனினும், இந்திய ஜனநாயக மாதர் சங்கம் பெண்களைத் திரட்டுவதில் பெரும்பங்கு வகிக்க வேண்டியுள்ளதை நாம் அறிவோம். இவ்வகையில் இக்காலத்தில் தொடர்ந்து செயல்பட்டு, தமிழகத்தில் பெரும்பகுதியான மாவட்டங்களில் சுயேச்சையாக செயல்படும் மாதர் அமைப்பு என்ற தோற்றத்தை உருவாக்கியுள்ளோம்.

229. சிதம்பரம் காவல் நிலையக் கற்பழிப்பு, கொலை, வாச்சாத்தி மக்கள் மீது நடைபெற்ற கொடூரத் தாக்குதல் - சின்னாம்பதி மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் - கற்பழிப்புகள் ஆகியவை உள்ளிட்ட பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக நாம் நடத்திய இயக்கங்கள் ஆகியவை மூலம் நமது மாதர் அமைப்பின் மீது பொது மக்கள் மத்தியில் நம்பிக்கை உருவாகியுள்ளது.

230. சமீபத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரேமானந்தா சாமியார் நடத்திய ஆசிரமத்தில் நடைபெற்ற திரைமறைவு

மோசடிகளையும், பெண்களை பலாத்காரப்படுத்தி கற்பழித்தல் உள்ளிட்ட கொடுமைகளையும் அம்பலப்படுத்தி நடவடிக்கை எடுக்கச் செய்வதில் நமது மாதர் அமைப்பு முன்னணியில் நின்றது. இந்தப் பிரச்சனையில் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக நமது அமைப்பைத்தான் அணுக வேண்டும் என்று கருதும் அளவு நமது தொடர் இயக்கங்கள் நம்பிக்கை ஊட்டியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

231. பல சிரமங்களுக்கு மத்தியில் நமது மாதர் அமைப்பு இன்று கலை, கலாச்சாரம், அரசியல், சமூக பிரச்சனைகளில் தலையிட்டு, தொடர்ந்து செயல்படும் அமைப்பாக உருவாகி வருகிறது. கட்சி உறுப்பினர்களில் பெண்கள் எண்ணிக்கை உயர்ந்திருப்பதும், திறமையான ஊழியர்கள், பிரச்சாரகர்கள் உருவாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்க சாதனைகளே.

232. இக்காலத்தில் கோவையில் நாம் நடத்திய அகில இந்திய மாநாடு பெரும் பிரதிபலிப்பை உருவாக்குவதாக அமைந்தது. பல்லாயிரக்கணக்கான பெண்கள் திரட்டப்பட்டதும், மாநாட்டுப் பணிகள் சிறப்பாக நிறைவேறியதும், அவை ஏற்படுத்திய பிரதிபலிப்பும் - உற்சாகமும் நாம் மேலும் முன்னேற உதவியுள்ளது.

233. எனினும் வளர்ச்சி சீரானதல்ல. மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. சிலமாவட்டங்களில் இன்னும் மிகவும் பலவீனமான இயக்கமாக இருக்கிறது என்பதுடன் - செய்யும் முயற்சிகளுக்கும் உறுப்பினர் சேர்ப்புக்கும் பெரும் இடைவெளி உள்ளதாகவே உள்ளது. சேர்க்கப்பட்ட பெண்களை இயக்கங்களில் பங்கேற்க செய்வதிலும் பெரும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

கட்சியும், மாதர் இயக்கமும்

234. கட்சியின் கவனத்துக்கு கொண்டு வர வேண்டிய மாதர் சங்க பிரச்சனைகளை ஃபிராக்ஷனில் தொகுத்து பி. சி. யில் விவாதம் நடத்தப்பட்டது. இந்த விவாதத்திற்கு பிறகு எடுக்கப்பட்ட முடிவுகளை அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது விமர்சனத்துக்குரியது.

அ) கட்சிக்குள்ளே பல மட்டங்களில் பெண்கள் பற்றிய நிலப் பிரபுத்துவ, ஆண் ஆதிக்க கருத்துக்கள் நிலவுகின்றன. இதைக் கண்டறிந்து அவ்வப்பொழுது சரி செய்ய வேண் டும். கட்சி வகுப்புகளில் பெண்ணடிமைத்தனம் பற்றிய வகுப்பு சராசரியாக இணைக்கப்பட வேண்டும் என்ற முக்கியமான முடிவை நடைமுறைபடுத்த வேண்டியுள்ளது. பெண்களுக்குரிய விசேஷ சிரமங்களைக்கணக்கில் கொண்டு அவர்களை பயிற்றுவித்து வளர்ப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆ) மற்ற கட்சி/ வெகுஜன ஸ்தாபனங்களும் பெண்கள் பிரச்ச னைகள் என்று ஒதுங்காமல், அந்த போராட்டத்தில் பங் கேற்க வேண்டும் என்ற வழிகாட்டுதல் சில மாவட்டங்களில் நல்ல விளைவுகளை உருவாக்கியுள்ளது.

இ) கட்சி / மாதர் சங்கம் உறவுகள் பற்றி பரிசீலித்து, அதன் வெகுஜன தன்மையைப் பாதுகாக்க ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டதில் முன்னேற்றம் இருக்கிறது. குறிப்பாக,

- கட்சித் தலைவர்கள் நேரடியாக மாவட்டக்குழுவில் பங்கேற் பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பது அனேகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

- கட்சி அலுவலகத்தில் மாதர் சங்க, மாவட்டக்குழுவை நடத்து வது தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மாணவர் அரங்கம்

235. மத்திய - மாநில அரசுகள் கடைப்பிடித்து வரும் கல்விக் கொள்கை கல்வித் துறையில் கடுமையான நெருக்கடியை உரு வாக்கியுள்ளது. இந்த நெருக்கடி மிகுந்த கடந்த மூன்று ஆண்டு களில் மாணவர் அரங்கில் மாணவர் சங்கப் பணி பற்றியும், கட்சியைக் கட்டும் பணி பற்றியும் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

கல்விச் சூழல்

236. ஆரம்ப கல்வி முதல் தொழிற்கல்வி, உயர் கல்வி வரை கல்வி தனியார் மயமாக்கப்பட்டு வருகிறது. 'இலவசக் கல்வி என்பது ஆரம்பக்கல்வி வரைதான். அதற்கு மேல் இலவசக் கல்வி என்பது ஜீவாதார உரிமை அல்ல. தனியாரும் கல்வித் துறையில் நுழையலாம்; தொழிற்கல்வி உட்பட, சுயநிதிக் கல்வி நிலையங்கள் துவக்கலாம். அப்படி இயங்கும் கல்விக் கூடங்களில் கட்டண சீட்டுகளுக்கு கட்டாய நன்கொடை வசூல் செய்யலாம்' என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து, இலவச சீட்டு, கட்டண சீட்டுக்கள் என இக்கட்டணம் வசூலிக்க வழிகாட்டும் நெறிமுறைகளையும் அளித்தது. இருப்பினும் சுயநிதிக் கல்வி நிலையங்களில் தாறுமாறாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே கல்வி என்ற நிலை தமிழ கத்தில் உருவாகிவிட்டது. இந்நிலையை எதிர்த்து மாணவர்கள் இயக்கம் மட்டுமல்ல அனைத்து ஜனநாயக இயக்கங்களும் போராட வேண்டியுள்ளது.

237. மாணவர்களில் பெரும்பகுதியினர் எந்த அரசியல் கட்சி யையும் நேரடியாக சாராதவர்களாக உள்ளனர். அதே நேரத் தில் திமுக, அதிமுக, மதிமுக ஆகிய திராவிட கட்சிகளுக்கு கணிசமான மாணவர்கள் மத்தியில் பிடிமானம் உள்ளது. இக் கட்சியை சார்ந்த மாணவர் அமைப்புகளும், பி. ஜே. பி தலைமையிலான ஏ.பி.வி.பி. என்ற மாணவர் அமைப்பும், சில நக்சலைட் குழுக்களும் சி. பி. ஐ. தலைமையிலான மாணவர் அமைப்பும், தலித் மாணவர் அமைப்புகளும் மாணவர்களை திரட்ட முயற்சித்து வருகின்றன. பல அமைப்புகள் இருந்தாலும்

இன்றும் மாநில அளவில் அமைப்பு ரீதியாக செயல்பட்டு வருவது இந்திய மாணவர் சங்கம் என்ற நமது அமைப்புதான்.

238. ராமச்சந்திரா மருத்துவக்கல்லூரியை தனியாரிடம் ஒப்படைக்கக் கூடாது என்பதற்கு நடைபெற்ற போராட்டம். கல்விக் கட்டண உயர்வு, கல்லூரிகளில் இடங்கள் அதிகப்படுத்துவது போன்ற பிரச்சனைகளில் நடைபெற்ற மாநில அளவிலான இரண்டு வேலைநிறுத்தங்கள்; மருத்துவக்கல்லூரி இலவச சீட்டுக்கு அதிகப் பணம் கேட்ட கல்லூரி நிர்வாகத்திற்கு எதிரான போராட்டம் ஆகியவை இவ்வரங்கில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க போராட்டங்கள்.

239. எனினும் இன்று இவ்வரங்கம் மிகவும் பலவீனமாக இருப்பது கவலையுடன் பரிசீலிக்க வேண்டிய ஒன்றாகும். தமிழக மாணவர்களில் கணிசமான பகுதியினர் சென்னை நகரில் மட்டுமே உள்ளனர். இது தவிர, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகியவை பெரும்பகுதி மாணவர்களை உள்ளடக்கிய நகரங்கள் ஆகும்.

240. ஆனால் இத்தகைய கேந்திரத் தளங்களில் எதிலும் நாம் வலுமிக்க அமைப்பாக இன்று இல்லை. இந்தப் பகுதிகளில் உரிய ஊழியர்கள் தீர்மானிக்கப்பட்டு, தொடர்ச்சியான திட்டத்துடன் தலையிட்டாலன்றி இவ்வரங்க செயல்பாட்டில் முன்னேற்றம் காண முடியாது.

241. சம்பந்தப்பட்ட மாவட்ட குழுக்கள் மட்டுமின்றி மாநிலக்குழுவும் தொடர்ந்து கவனித்து இவ்வரங்கில் ஒரு முனைப்பு ஏற்படுத்த வேண்டியுள்ளது.

கட்சியைக் கட்டும் பணியும் கட்சியின் வழிகாட்டுதலும்

242. பல மாவட்டங்களில் மாணவர் அரங்கத்தில் உள்ள தேக்கம் ஏன் என்பது பற்றியோ, அல்லது அந்த அரங்கத்தில் வேலை செய்யும் தோழர்கள் மத்தியில் இணக்கமின்மையினாலோ, நிதி பற்றாக்குறையினாலோ வேலை முடங்கி நிற்பது பற்றியோ, மாவட்ட மையத்திற்கும் இந்த அரங்கத்தின் பொறுப்பான செயற்குழு உறுப்பினர்களுக்கும் தெரியாமல் இருக்கும்.

நிலை உள்ளது. மாணவர் சங்கத்தில் வேலை செய்யும் தோழர்கள் அனுபவமின்மை காரணமாக கட்சியின் கவனத்திற்கு கொண்டுவராத போக்கும் உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலைமையில் மாணவர் சங்க வேலையும், கட்சியைக் கட்டும் பணியும் சரிவர நடப்பதில்லை. நீண்டகால ஸ்தாபன அனுபவமில்லாத தோழர்கள் இந்த அரங்கத்தில் வேலை செய்கிறார்கள் என்பதை மனதில் வைத்து, மாவட்டக்குழுக்கள் இவ்வரங்கத்திற்கு அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

243. மாணவர் அரங்கத் தோழர்களின் வேலை மாணவர் அரங்கத்திற்கு பயன்படும் என்று மாவட்டக்குழுக்கள் உத்தரவாதம் தந்திட வேண்டியுள்ளது. மாணவர் அரங்க முழு நேர ஊழியர்களையும் வேறு வேலைக்கு பயன்படுத்தக்கூடிய நிலையை தவிர்க்க வேண்டும்.

244. கடந்த மூன்று ஆண்டுகளில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் தேக்கம் உள்ளது. பொதுவாக மாநிலத்தில் 29% கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ள நிலையில், மாணவர் அரங்கத்தில் தேக்கம் நிலவுகிறது. மாணவர் இயக்கத்தில் பங்கேற்கும்முன்னணி ஊழியர்களைக் கட்சிக்குள் கொண்டுவந்து கல்வி நிலைய அளவில் கட்சிக் கிளைகள் அமைக்க வேண்டியுள்ளது. கட்சிக் கிளைகள் உள்ள இடத்தில் அக்கிளைகளை முறையாக செயல்படுத்தி அக்கிளைகள் மாணவர் சங்கத்தில் கட்சியைக் கட்டும் வேலைகளுக்கு திட்டமிட்டு பணியாற்றினால்தான் பழைய மாணவர்கள் வெளியேறுகின்றபொழுது, புதிய மாணவர்கள் இயக்கத்தில் சேரக்கூடிய ஒரு தொடர்ச்சி ஏற்படும்.

245. மேலும் சில மாவட்டங்களில் பிரதேசத்தில் கட்சி உறுப்பினராக, கட்சிக் கிளைச் செயலாளராக, வாலிபர் சங்கத்தில் பொறுப்பாளர்களாக இருக்கும் மாணவர் தோழர்கள், கல்லூரிகளில் மாணவர் சங்கத்தில் பணியாற்றாத நிலையும் உள்ளது.

246. இப்படிப்பட்ட அம்சங்களை கட்சி மாவட்ட செயற்குழு, மாவட்டக்குழுக்கள் விவாதித்து வழிகாட்ட வேண்டியுள்ளது.

கலை இலக்கிய அரங்கம்

247. சமுதாயத்தில் கருத்துக்களை உருவாக்குவதில் கலாச்சாரம் - குறிப்பாக கலை, இலக்கியத்துறை முக்கியமான பங்கினை வகிக்கிறது. அதிலும் தமிழகத்தில் அரசியல் உலகமும், கலை - இலக்கிய உலகமும் பின்னிப் பிணைந்து வந்திருக்கின்றன என்கிற வலாற்று உண்மையைக் கணக்கிற்கொண்டால் இந் தத் துறைக்கு கட்சி தர வேண்டிய முக்கியத்துவத்தை உணர லாம். பிற துறைகளைப் போல, இதிலும் ஆளும் வர்க்கங்களின் ஆதிக்கமே நீடிக்கிறது. எனினும், பிற துறைகளைப் போலவே இதிலும் - அந்த ஆதிக்கத்திற்கு மத்தியிலும் - முற்போக்கு படைப்புகள் கிளம்புகின்றன. நிதி ஆதிக்கத்தோடு, சித்தாந்த ஆதிக்கமும் சேர்ந்து வருகிற சில துறைகளில் கலை - இலக்கிய மும் ஒன்று. அதிலும் இங்கே அது பல்வேறு புதுப்புது வடி வங்கள் எடுக்கின்றன. பச்சையான பிற்போக்குவாதச் சிந்த னையில் இருந்து, புரியாத் தன்மையுள்ள அதி நவீனவாதச் சிந்தனைவரை அதில் அடக்கம். இவற்றை அடையாளம் காட்டிக் கொண்டும், இவற்றிற்கு எதிராக ஒரு கருத்துப் போராட்டத்தை நடத்திக் கொண்டும் முற்போக்கு கலை - இலக்கியங்களை வெளிக்கொண்டு வர வேண்டியுள்ளது.

248. கட்சியின் கலை - இலக்கியவாதிகளால் வழி நடத்தப்படுகிற அமைப்பாக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உள்ள போதிலும், இதர அரசியல் சிந்தனையுள்ளோரும் இந்த அமைப்பில் செயல்படுகின்றனர். அதன் மாநிலக்குழுவில் கூட உள்ளனர். வெளிவட்டார கலை - இலக்கிய அறிஞர்கள் சிலரும் இதன்பால் ஈர்க்கப்பட்டுள்ளனர். அரசியல் வேறுபா டுகள் இருந்தாலும் கலை - இலக்கியத்துறையில் ஒன்றுபட்ட சிந் தனை உடையோர் ஒரே அமைப்பில் இயங்க முடியும் என்ப தனை இது நிரூபிக்கிறது. இந்த வெகுஜனத் தன்மையை பரா மரித்து விரிவுபடுத்த வேண்டியுள்ளது.

249. மக்களை ஈர்க்கும் கலைக்குழுக்கள் உருவாகியுள்ள, ஆயிரக் கணக்கில் மக்கள் பங்கு கொள்ளும் கலை - இலக்கிய இரவுகள்,

சிறந்த திரைப்படங்களுக்கு பரிசளிக்க ஏற்பாடுகள், சிறுகதை, கவிதை, நாவல் என அனைத்துத்துறைகளிலும் படைப்பாளி களை உருவாக்கியிருப்பது வளர்ப்பது ஆகியவை இத்துறை யில் இக்காலத்தில் நாம் பெற்றுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற் றங்கள் ஆகும். நமது செயல்பாடு புதிய புதிய நண்பர்களைப் பெற்றுத் தந்துள்ளது என்பது ஏற்பட்டுள்ள பிரதிபலிப்புக்கு சான்றாகும்.

250. இதேபோல மொழிப்பிரச்சனையை ஒட்டி தமிழகத்தில் கிளப்பப்பட்ட மொழி வெறிக்கு மத்தியில் சரியான மொழிக் கொள்கை ஒன்றை உருவாக்கி பிரகடனப்படுத்த 'தமிழ் வளர்ச் சிப் பண்பாட்டு பாதுகாப்பு மாநாடு' நடத்தப்பட்டதும் குறிப் பிடத்தக்க சாதனை ஆகும்.

251. எனினும் நேரடியாக கட்சி மேடையில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கான கலைக்குழுக்கள் உருவாவதும் - தொடர்ந்து செயல்படுத்துவதும் பெருமளவு வளர்க்கப்பட வேண்டி யுள்ளது.

252. வகுப்புவாதத்திற்கும், மதப்பழமைவாதத்திற்கும் எதிராக கலை -இலக்கிய சிருஷ்டிகள் உருவான அளவுக்கு புதிய பொரு ளாதாரக் கொள்கைகளுக்கும் - அதன் பாதிப்புகளுக்கும் எதி ராக சக்திமிக்க படைப்புகள் உருவானதாக கூற முடியாது.

253 முக்கியமான இவ்வரங்கத்தைப் பேணி பாதுகாத்து வளர்ப் பதில் பல மாவட்டங்களில் மேலும் முனைப்பு காட்ட வேண்டி யுள்ளது. நீலகிரி, பெரியார் மாவட்டங்களில் இன்னும் அமைப் புக் குழுக்களே உள்ளன. சென்னை, குமரி, கோவை, மதுரை மாநகர், நாகை - காயிதேமில்லத் போன்ற மாவட்டங்களில் கட்சியின் வலுவிற்கு ஏற்ற அளவு கலை - இலக்கிய அரங்கத் தில் செயல்பாடு வலுவாக இருக்கிறது என்று கூற முடியாது. குறிப்பாக தலைநகரில் நமது கலை - இலக்கிய இயக்கத்தை திட்டமிட்டுக் கட்டுவது மாநிலம் முழுமைக்கும் உத்வேகத்தை அளிக்கும்.

தீக்கதிர்

254. தற்போது தீக்கதிர் நாளிதழ் மதுரை பதிப்பு 6723, சென்னை பதிப்பு 3939 ஆக இரண்டு பதிப்புகளும் சேர்ந்து 10, 662 பிரதிகள் விற்பனை ஆகிறது. கடந்த கட்சி மாநாட்டிற்குப்பின் விற்பனையில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1993ம் ஆண்டு நவம்பர் 7ல் சென்னை பதிப்பை துவக்கி னோம். அதைத் தொடர்ந்தே விற்பனையில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

255. இன்று மாறி வரும் அரசியல், பொருளாதார சூழ்நிலைகளை ஆய்வு செய்து நமது கட்சி எடுக்கும் நிலைமைகளையும் பொது வான நாட்டு நடப்புகளையும் நமது கட்சி அணிகளுக்கு எடுத் துச் செல்ல தீக்கதிர் பயன்பட்டு வருகிறது. தீக்கதிர் வாங்கு பவர்களில் பெரும்பகுதியினர் கட்சி உறுப்பினர்கள், ஆதரவா ளர்கள்தான். பிற கட்சிகளைச் சேர்ந்தவர்கள், வர்த்தகர்கள் என சிறு பகுதியினர் தீக்கதிர் வாங்குகின்றனர். அனைத்து முத லாளித்துவ கட்சிகளுக்கும் தங்களுக்கென்று தனித்தனியே பத்திரிகைகள் இல்லை; என்றாலும் அவர்களின் தேவையை முதலாளித்துவ பத்திரிகைகள் முழுமையாக பூர்த்தி செய் கின்றன. நமது கட்சி அரசியல் இயக்க செய்திகளுக்கு முதலா ளித்துவ பத்திரிகைகள் முன்னைவிட கூடுதல் முக்கியத்துவம் கொடுத்தாலும் நமது தீக்கதிர்தான் நமது அரசியல் தேவையை முழுமையாக பூர்த்தி செய்து வருகிறது. கட்சி வளர்ச்சிக்கும், வெகுஜன அரங்க வளர்ச்சிக்கும், கட்சி உறுப்பினர்களின் அரசியல் வளர்ச்சிக்கும் பயன்படும் தீக்கதிர் விற்பனை போது மான அளவிற்கு அதிகரிக்கவில்லை.

தீக்கதிர் விற்பனை

256. 1993 அக்டோபர் மாதத்தில் தீக்கதிர் விற்பனை 7772. சென்னை, செங்கை, வள்ளலார், விழுப்புரம் - ராமசாமி படை யாச்சி, புதுவை, வட ஆற்காடு - அம்பேத்கர், சம்புவராயர், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் 1993 அக்டோபரில் விற் பனை 1969 பிரதிகள். சென்னைப் பதிப்பு துவங்கிய பிறகு

இந்த மாவட்டங்களில் விற்பனை (1995 ஜனவரி) 3939 ஆக உயர்ந்துள்ளது. அதிகரித்துள்ள விற்பனை 1970 பிரதிகள். மதுரையில் 1993 அக்டோபரில் விற்பனையான பிரதிகள் 5803. தற்போது அதிகரித்துள்ள விற்பனை 6723. விற்பனையில் 920 பிரதிகள் அதிகரித்துள்ளது. கோவை, பெரியார், நாகை, நெல்லை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ஓரளவிற்கு விற்பனை அதிகரித்துள்ளது. பல மாவட்டங்களில் கட்சியின் பலத்திற்கு ஏற்ப தீக்கதிர் விற்பனை இல்லை.

257. சென்னைப் பதிப்பு துவங்கிய பிறகு 1970 பிரதிகள் விற்பனை அதிகரித்திருக்கிறது. இதிலும் சென்னை நகரத்தில் 1994 ஜனவரியில் 3136 பிரதிகள் விற்பனையானது. 1995 ஜனவரியில் விற்பனை 2287. ஓராண்டில் சென்னை நகரத்தில் 849 பிரதிகள் விற்பனை குறைந்துள்ளது. சென்னைப் பதிப்பு துவக்கிய பிறகு பொதுவாக சென்னையில் விற்பனை அதிகரித்திருந்தாலும், சென்னை நகரத்தை மையமாக வைத்துதான் சென்னைப் பதிப்பே துவங்கப்பட்டது என்பதால் சென்னை நகரத்தில் விற்பனையை அதிகரிக்க நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

258. தீக்கதிர் விற்பனை இயக்கம் ஆண்டுக்கொருமுறை நடத்துகிறோம். இவ்வியக்கத்தின்போது கூடுதலாக விற்பனை ஆகிறது. ஆனால் விற்பனை இயக்கம் முடிந்தவுடன் பழைய விற்பனையே தொடருகிறது. விற்பனை இயக்கத்தினால் சந்தாதாரர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதில்லை.

259. கட்சியின் மாவட்டக்குழுக்களில் தீக்கதிர் விற்பனையை முக்கியமான அஜண்டாவாக விவாதித்து, இதற்கென்று பிரத்தியேகமாக ஒரு முழு நேர ஊழியரை ஏற்பாடு செய்துள்ள சில மாவட்டங்களில் விற்பனை அதிகரித்துள்ளது. தீக்கதிர் விற்பனை குறித்து கவனம் செலுத்துகின்ற இடைக்கமிட்டிகள், நகரகுழுக்களிலும் விற்பனை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு கட்சி அமைப்பும் தீக்கதிர் விற்பனையை அதிகரிக்க திட்டமிட்டு நிறைவேற்றிட வேண்டும். இதைப் பிரதானமான அரசியல் கடமையாக ஏற்க வேண்டும்.

தீக்கதிர் உள்ளடக்கம்

260. அவ்வப்பொழுது தீக்கதிர் உள்ளடக்கம், விநியோகம் குறித்து தீக்கதிர் சப் - கமிட்டியில் விவாதிப்பதோடு கடந்த மூன்று ஆண்டுகளில் பலமுறை மாநிலக்குழுவிலும் விவாதித்து தீக்கதிருக்கு வழிகாட்டியுள்ளோம். உள்ளடக்கத்திலும், வடிவமைப்பிலும் கடந்த மூன்று ஆண்டுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உள்ளடக்கம் குறித்து மாநிலக்குழு விவாதித்து கீழ்க்கண்ட வழிகாட்டுதல் அளிக்கப்பட்டது.

★ தீக்கதிர் நமது கட்சியின் அரசியல் தினசரி.

★ தீக்கதிர் வாசகர் வட்டம் என்பது நமது கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள்தான். பத்தாண்டு சந்தா கட்டியுள்ளதால் ஒரு சிறு பகுதியினர் கட்சிக்கு வெளியே உள்ளவர்கள் வாங்குகிறார்கள்.

★ கட்சி பத்திரிகை ஒரு கட்சி அமைப்பாளன் என்ற லெனின் வார்த்தைகளுக்கேற்ப தீக்கதிரின் உள்ளடக்கம் கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளை விரிவாக்க கட்சி உறுப்பினர்களுக்கு பயன்பட வேண்டும்.

★ தீக்கதிர் தவிர வேறு பத்திரிகைகள் வாங்க முடியாத தோழர்களுக்கு நாட்டு நடப்புகளை பற்றி தெரிந்து கொள்ள உதவிகரமான செய்திகளையும் தர வேண்டும்.

★ சில செய்திகளை அப்படியே கொடுக்காமல் நமது கட்சி கண்ணோட்டத்தோடு கொடுக்க வேண்டும்.

★ முதலாளித்துவகட்சிகள் சம்பந்தப்பட்ட செய்திகளை முதலாளித்துவ பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கின்றன. நமது கட்சி சம்பந்தப்பட்ட, நமது கட்சி அரசியல் சம்பந்தப்பட்ட செய்திகளுக்கு முதலாளித்துவ பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுக்காது. எனவே, நமது கட்சி பத்திரிகையில் நமது கட்சி சம்பந்தப்பட்ட செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

★ மாநிலச் செயற்குழு, அரசியல் தலைமைக்குழு அறிக்கை களுக்கு முக்கியத்துவம் கொடுத்து முதல் பக்கத்தில் வெளியிட வேண்டும்.

★ எல்லா நாட்களிலும் நமது கட்சித் தலைவர்களின் பொதுக் கூட்டப் பேச்சுகளை முதல் பக்கத்தில் பிரசுரிக்க வேண்டிய தில்லை. ஆனால் முக்கியமான அரசியல் நிகழ்ச்சிகளில் பேசும் பேச்சுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முதல் பக்கத்தில் பிர சுரிக்க வேண்டும்.

★ தீக்கதிர் வாசகர் வட்டம் கட்சியின் அரசியல் செல்வாக்கிற்கு உட்பட்ட பகுதி என்றாலும், பலவிதமான புதிய பகுதிகள் தீக் கதிரில் வர வேண்டுமென்ற எதிர்பார்ப்பு வாசகர்கள் மத்தி யில் உள்ளது.

★ முதலாளித்துவ பத்திரிக்கைகளோடு தீக்கதிர் போட்டி போட முடியாது என்றாலும் பல புதிய பகுதிகள் தீக்கதிரில் இடம் பெற வேண்டும்.

★ கலை, இலக்கியம், கலாச்சாரம், சினிமா, விளையாட்டு, குழந்தை கள் பகுதி, மாதர், மாணவர், வாலிபர், தொழிலாளர், விவசா யிகள், அறிவியல் போன்ற பல பகுதிகளை கிழமை வாரியாக வெளியிடலாம்.

★ ஒவ்வொரு பகுதியின் உள்ளடக்கத்திலும் நமது அரசியல் கண் ணோட்டம் இருத்தல் வேண்டும்.

★ வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனப் பகுதி இடம் பெற வேண்டும்.

★ வாசகர் விமர்சன கடிதங்களில் ஆரோக்கியமான கடிதங்களின் கருத்துக்களை வெளியிட்டு விளக்கமளிக்கலாம்.

★ தினமணி பத்திரிகையைப் போல் நமது கட்சிக்கு மாறுபட்ட கருத்துக்களை கொண்ட கட்டுரைகளை வெளியிட முடியாது. நமது கருத்தோடு ஏற்புடைய கட்டுரைகளை கட்சிக்கு அப்பாற் பட்டவர்களிடத்தில் இருந்து பெற்று வெளியிடலாம்.

★ தீக்கதிருக்கு கட்டுரை எழுதி அனுப்பும் தோழர்கள் கட்டுரை அரைப்பக்கத்திற்கு மிகாமல் தயாரித்து அனுப்ப வேண்டும்.

தவிர்க்க முடியாமல் போனால் இரண்டு பகுதிகளாக வெளியிடும் அளவிற்கு அனுப்பலாம். மூன்று அல்லது நான்கு பகுதிகளாக வெளிவரும் நீண்ட கட்டுரையை பெரும்பகுதி வாசகர்கள் படிப்பதில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

★ முக்கியமான ஆங்கில கட்டுரைகளை மொழி பெயர்த்து வெளியிடுவது.

★ ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பக்கத்திலும் வெளிவர வேண்டிய விஷயங்களை தீர்மானித்து (பேஜ் பாலிசி) அமுலாக்கலாம்.

★ உள்ளடக்கம் சம்பந்தமாக முடிவு செய்து உடனடியாக புதிய பகுதிகளை அமுலாக்க இயலாது. படிப்படியாக அமுலாக்க திட்டமிட வேண்டும்.

விநியோகம்

261. விநியோகம் குறித்து தொடர்ந்து மாநிலக்குழுவில் பரிசீலித்து வருகிறோம். மாநிலக்குழுவில் வரும் கருத்துக்கள், மாவட்டங்களில் இருந்து வரும் கடிதங்கள், ஏஜெண்டுகளிடமிருந்து வரும் கடிதங்கள் இதனடிப்படையில் விநியோகம் குறித்து இரண்டு பதிப்பு தீக்கதிர் நிர்வாகமும் நடவடிக்கை எடுக்கின்றன. விநியோகத்தில் முன்னேற்றம் இருப்பினும் விநியோகத்தை ஒழுங்குபடுத்த கூடுதல் கவனம் தேவைப்படுகிறது.

பத்திரிகை காகித விலை உயர்வு

262. காகித விலை உயர்வினால் தீக்கதிரின் பக்கத்தை நான்காகக் குறைத்தோம். வாசகர்களின் கருத்துக்களுக்கு இணங்க மாநிலக் குழுவில் விவாதித்து தீக்கதிர் பக்கங்களை மீண்டும் ஆறாக உயர்த்தி விலையை ரூ. 1.75லிருந்து ரூ. 2 ஆக உயர்த்தினோம். இந்த விலை உயர்வும் நட்டத்தை முழுமையாக ஈடுகட்டாது. காகித உயர்வை ஒட்டி செம்மலர் விலை 0. 50 காசும், மார்க்சிஸ்ட் விலை 0.50 காசும் விலை உயர்வு செய்தோம்.

ஜாப் ஒர்க்

263. மதுரை பதிப்பில் ஜாப் ஒர்க் செய்வதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் தீக்கதிருக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட முடிந்

துள்ளது. மதுரை பதிப்பில் மேலும் ஜாப் ஒர்க்கை விரிவுபடுத்தி மேலும் வருமானத்தை அதிகப்படுத்த வாய்ப்புள்ளது. மதுரையில் ஜாப் ஒர்க்கை விரிவுபடுத்த கூடுதல் முழு நேர ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.

விளம்பரம்

264. இரண்டு பதிப்புகளிலும் விளம்பரப் பிரிவு தனியாக இயங்கி வருகிறது. கடந்த காலங்களைவிட விளம்பரங்கள் கூடுதலாக சேகரிக்க முடிந்துள்ளது. மாவட்ட மாநாடுகளையொட்டி வள்ளலார், விழுப்புரம் - ராமசாமி படையாச்சி மாவட்டங்களைத் தவிர அனைத்து மாவட்டங்களும் விளம்பரம் கொடுத்திருக்கிறது. இரண்டு பதிப்பிலும் விளம்பரப் பிரிவை மேலும் விரிவுபடுத்த வேண்டியுள்ளது.

265. கட்சித் தோழர்களின் குடும்ப நிகழ்ச்சிகளை ஒட்டியும், கட்சி மற்றும் வெகுஜன அரங்க நிகழ்ச்சிகளை ஒட்டியும் சமீப காலத்தில் விளம்பரங்கள் வந்து கொண்டிருந்தாலும் இதில் வருங் காலத்தில் கூடுதல் கவனம் செலுத்தினால் விளம்பரம் மூலமாக தீக்கதிர் வருமானத்தை உயர்த்த முடியும்.

மார்க்சிஸ்ட்

266. மார்க்சிஸ்ட் 7600 பிரதிகள் விற்பனை ஆகின்றன. விற்பனையில் மூன்றாண்டுகளாக தேக்கம் நீடிக்கிறது. இதன் விற்பனையை அதிகப்படுத்த வேண்டியுள்ளது.

செம்மலர்

267. செம்மலர் விற்பனை 1991ல் 10, 251லிருந்து மூன்று ஆண்டுகளில் 15,199 ஆக அதிகரித்துள்ளது. மேலும் அதிகரிக்க நல்ல வாய்ப்புள்ளது. இதன் விற்பனையை 25,000 ஆக உயர்த்த பிப்ரவரியில் விற்பனை இயக்கம் நடத்த மாநிலக் குழுவில் முடிவெடுத்தோம். மாநாட்டிற்குப் பிறகும் தொடர்ந்து செம்மலர் விற்பனையை 25,000 ஆக உயர்த்த முயற்சிக்க வேண்டும்.

தீக்கதிர் பிரசுர பாக்கி

268. தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட் மற்றும் பிரசுர பாக்கி சுமார் ரூ. 10 லட்சம் மாவட்டங்களில் இருந்து நிலுவையாக உள்ளது.

இந்த பாக்கியைச் செலுத்த மாவட்டக்குழுக்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

பிரசுரங்கள்

269. கடந்த 3 ஆண்டுகளில் 19 பிரசுரங்கள் கொண்டுவந்துள்ளோம். அவை மொத்தமாக 4,03,500 பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன. பிரசுர விற்பனையில் கட்சிக் கமிட்டிகள் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இடைக்கமிட்டிகளும், மாவட்டக் குழுக்களும் பிரசுரங்களை விற்று பணத்தை முழுமையாக தீக்கதிருக்கு அனுப்பாமல் ஒரு பகுதியை கட்சி நடைமுறைப் பணிக்கு பயன்படுத்தும் போக்குள்ளது. இதனால் அடுத்தடுத்து பிரசுரங்கள் வெளியிடுவதில் பெரும் சிக்கல் எழுந்துள்ளது. மாவட்டக்குழுக்கள் பிரசுர பாக்கியை செலுத்திட தனிக் கவனம் செலுத்துவதோடு, வருங்காலத்தில் பணத்தை முன் கூட்டியே செலுத்தி பிரசுரங்களை வாங்கி விற்பதற்கான நிரந்தர ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

270. நமது பிரசுரங்கள் மட்டுமல்லாது பிற பகுதியினரிடமிருந்து வரும் புத்தகங்களைவெளியிடத்தக்க வகையில் 'வைகை வெளியீடு' என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பையும் உருவாக்கி நடத்தி வருகிறோம்.

271. தீக்கதிர் வளர்ச்சி வரலாற்றில் சென்னை பதிப்பு ஒரு மைல் கல். சென்னையில் ஒரு பதிப்பு உருவாக்க வேண்டும் என்பது நம்முடைய நீண்ட நாள் தேவை. அதை 1993 நவம்பர் புரட்சி தினத்தன்று கொண்டுவர முடிந்தது. துவக்க விழாவில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டார்கள்.

272. கட்சி அணிகள் இது விஷயத்தில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். தீக்கதிர் 10 ஆண்டு சந்தா வசூலிக்க வேண்டுமென அறைகூவல் விட்டபோது, பல மாவட்டங்கள் தங்களின் கோட்டாவினை நிறைவு செய்தார்கள். கட்சி அணிகள் இந்த இரண்டாவது பதிப்பை ஒரு அரசியல் கௌரவமாக பார்த்தனர். அதோடு இரண்டாவது பதிப்பு என்பது நமது கட்சி வளர்ச்சியில் ஒரு அடையாளமாகவும் திகழ்கிறது.

273. காகித விலை உயர்வினால் மாதம் சுமார் ரூ. 1 1/2 லட்சம் நட்டம் ஏற்படுகிறது. இவற்றை விளம்பரத்தின் மூலம் முழுமையாக ஈடுகட்ட முடியவில்லை. மேலும் வங்கிக் கடனுக்கான வட்டிக்காக மட்டும் வருடத்திற்கு ரூ. 2 லட்சம் கட்ட வேண்டியுள்ளது.

274. இந்நிலையில்தான் வங்கிக் கடனை முழுமையாக அடைக்க வட்டியில்லா கடன் வசூலித்து வருகிறோம். விற்பனையை அதிகப்படுத்துவது, ஜாப் ஒர்க்கை விஸ்தரிப்பது, விளம்பரத்தின் மூலம் வருமானத்தை அதிகப்படுத்துவது போன்ற முயற்சிகளை மேற்கொண்டால் நட்டத்தை முழுமையாக ஈடு கட்ட முடியும்.

கட்சி ஸ்தாபனம்

275. தஞ்சையில் நடந்த கட்சியின் 14வது மாநில மாநாட்டில் எதிர்கால திட்டமாக கட்சி ஸ்தாபனம் பற்றி கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. கட்சியின் மாநில, மாவட்ட மையங்களை அதிகரித்து வரும் அரசியல் - ஸ்தாபன தேவைக்கு ஏற்ப மேலும் பலப்படுத்துவது;
2. வட்ட / இடைக்கமிட்டிகளை செயல்படும் அமைப்புகளாக உருவாக்குவது;
3. கிளைச் செயலாளர்கள் கூட்டத்தை 2 மாதத்திற்கு ஒரு முறை கூட்டி அதன் செயல்பாட்டில் அபிவிருத்தி காணுவது;
4. கட்சியில் தொழிலாளி வர்க்கப் பகுதியினரை கணிசமான அளவில் சேர்ப்பது;
5. கட்சி அணிகளுக்கு தத்துவார்த்த பயிற்சி அளிப்பது;
6. தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர், பெண்கள் ஆகியோரை கட்சி ஸ்தாபனத்திற்கு அதிக அளவில் கொண்டு வருவது.

7. தீக்கதிர், மார்க்சிஸ்ட், செம்மலர் ஆகியவற்றின் விற்பனையை அதிகரிப்பது;

8. வர்க்க - வெகுஜன அமைப்புகளைப் பலப்படுத்துவது;

9. கட்சிக் கல்வியைத் தொடர்ந்து நடத்துவது;

10. கட்சிக்குள் எழும் அன்னிய வர்க்க கருத்துக்களை களைந்தெறிய தொடர்ந்து நடவடிக்கை எடுப்பது.

276. சென்னையில் நடைபெற்ற 14வது அகில இந்திய கட்சி மாநாடு மூன்று முக்கிய ஸ்தாபன கடமைகளை தீர்மானித்தது:

1. வெகுஜன போராட்டங்களை உருவாக்குவது

2. கட்சியைக் கட்டும் பணியை பிரதான பணியாக மாற்றுவது

3. கட்சியின் நடைமுறை கொள்கைகளையும், தத்துவார்த்த பிரச்சாரத்தையும் சுயேட்சையாக மக்கள் மத்தியில் கொண்டு செல்வது.

277. மேற்குறிப்பிட்ட கடமைகளை கடந்த 3 ஆண்டு காலத்தில் நாம் எவ்வளவு தூரம் நிறைவேற்றியுள்ளோம். எதில் தேக்கம் நீடிக்கிறது என்பதை பரிசீலிப்பதே இந்த அறிக்கையின் நோக்கமாகும்.

மாநிலக்குழு

278. கடந்த மாநில மாநாட்டில் 75 தோழர்களைக்கொண்ட மாநிலக்குழு தேர்வு செய்யப்பட்டது. அதன்பின் சம்புவராயர் மாவட்டக்குழு செயலாளர் தோழர் வி. மன்னார், ராமசாமி படையாச்சி மாவட்டக்குழு செயலாளர் தோழர் ஆர்.ராமமூர்த்தி, கரூர் மாவட்டக்குழு செயலாளர் தோழர் ஜி. குமார், காமராஜ் மாவட்டக்குழு செயலாளர் தோழர் எம். என். எஸ். வெங்கட்ராமன், கட்சியின் மாநிலக்குழு அலுவலக செயலாளர் தோழர் ஆர். ஜவகர், அரசு ஊழியராக இருந்து ஓய்வு பெற்ற தோழர் எம். ஆர். அப்பன் ஆகிய தோழர்கள் மாநிலக் குழுவில் இணைக்கப்பட்டனர். உடல்நிலை காரணமாக தோழர் ஆர்.ராமராஜ் மாநிலக்குழுவிலிருந்து விடுவிக்கப் பட்டார். இப்போது 80 பேர்களைக் கொண்ட மாநிலக்குழு செயல்பட்டுவந்தது.

279. கடந்த மாநாட்டிற்குப்பின் மாநிலக்குழு 20 தடவை கூடியுள்ளது. சராசரியாக 2 மாதத்திற்கு ஒருமுறை கூடியுள்ளது. மாநிலக்குழு உறுப்பினர் வருகை திருப்திகரமாக இருந்தது. வர இயலாதவர்கள் முன்கூட்டியே தகவல் தந்தார்கள். வேறு தவிர்க்க இயலாத வேலை என்றாலோ, நோய்வாய்ப் பட்டாலோ கமிட்டி கூட்டத்திற்கு வராத நிலை இருந்தது. மாநிலக்குழு கூட்டங்களில், மத்தியக்குழு முடிவுகள் ரிப்போர்ட் செய்யப்பட்டன. அதேபோல் மத்தியக்குழு விடுக்கும் இயக்கங்களும் மாநிலக்குழுவில் திட்டமிட்ட நடைமுறைப்படுத்தப் பட்டன. பெரும்பான்மையான கூட்டங்களில் தமிழக அரசியல் நிலை குறித்து விவாதித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. திமுக பிளவிற்குப் பின்பு, ஓசூரில் பிப்ரவரி 94ல் நடைபெற்ற மாநிலக்குழு கூட்டத்தில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் பிரகாஷ் காரத்தும், அக். 94 சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் ஹரி கிஷன் சிங் சுர்ஜித், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் பி. ராமச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு வழி காட்டினர். தவிரவும், தொடர்ச்சியாக அரசியல் தலைமைக் குழுவின் தலையீடும் உதவியும் பெரிதும் பயனுள்ளதாக அமைந்தது.

280. எழுத்துபூர்வமான வேலை அறிக்கையை வைத்து மாநிலக்குழு விவாதித்தது. ஆனால் ஒவ்வொரு கூட்டத்திலும் வேலை அறிக்கை வைத்து விவாதிக்கப்படவில்லை. அதே சமயம் தொழிற் சங்கம், விவசாய, மாதர், வாலிபர், தீக்கதிர் ஆகிய அரங்கங்களின் சப் - கமிட்டி பார்ஃபிராக்ஷன் ரிப் போர்ட்களை முன்வைத்து விவாதங்கள் நடத்தி, முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

281. மாநிலச் செயற்குழு மற்றும் மாநிலக்குழு வேலை பிரிவினை

1. ஏ. நல்லசிவன் - *மாநிலச் செயலாளர், மாநில மையம்*

2. என். சங்கரய்யா - *மாநில மையம், வி. ச. சப் கமிட்டி*

3. ஆர். உமாநாத்

- மாநில மையம், டி. யு. சப் கமிட்டி, ரயில்வே, எல். ஐ. சி. ஃபிராக்ஷன்

4. பி. ஆர். பரமேஸ்வரன்	*- மாநில மையம், தெ. ஆ. வள்ளலார், சேலம் மாவட்ட பொறுப்பு, கல்விக்குழு, கலை - இலக்கிய ஃபிராக்ஷன், பி & டி. ஃபிராக்ஷன் மார்க்சிஸ்ட் மாத இதழ், அண்ணாஜி மெமோரியல் டிரஸ்ட் பொறுப்பு.*
5. கே. ரமணி	*- தொழிற்சங்க சப்-கமிட்டி, கோவை, பெரியார், நீலகிரி மாவட்ட பொறுப்பு.*
6. என். வரதராசன்	*- மாநில மையம், திண்டுக்கல், கோவை, மதுரை மாநகர், புறநகர் மாவட்டக்குழுக்கள் பொறுப்பு, ஆசிரியர் அரங்க ஃபிராக்ஷன்.*
7. ஜீ. வீரய்யன்	*- வி. ச. சப் - கமிட்டி, நாகை, தஞ்சை மாவட்டக் குழுக்கள் பொறுப்பு.*
8. ஏ. அப்துல்வகாப்	*- தீக்கதிர், மதுரை மாநகர், புறநகர் மாவட்டக்குழுக்கள் பொறுப்பு.*
9. கே. முத்தையா	*- மாநில மையம்*
10. கே. வரதராசன்	*- வி. ச. சப்-கமிட்டி, தர்மபுரி, திருச்சி, கரூர் மாவட்டக்குழுக்கள் பொறுப்பு, கலை - இலக்கியம், மாதர் சப்-கமிட்டி, கல்விக்குழு.*
11. டி. லட்சுமணன்	*- மாநில மையம், குமரி, நெல்லை, சிதம்பரனார், காமராஜர், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, சம்புவராயர் மாவட்டக்குழு பொறுப்பு, கல்விக்குழு, அரசு ஊழியர் அரங்க ஃபிராக்ஷன்.*
12. டி. கே. ரங்கராஜன்	*- தொழிற் சங்க சப் - கமிட்டி, சென்னை மாவட்டக்குழு ரயில்வே ஃபிராக்ஷன் பொறுப்பு.*
13. வி. மீனாட்சிசுந்தரம்	*- சென்னை மாவட்டம், கல்விக் குழு, வங்கி அரங்க ஃபிராக்ஷன்.*

14. ஏ. கே. பத்மநாபன்	- *தொழிற்சங்க சப்-கமிட்டி, வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டக் குழு, மின் அரங்கம், மருத்துவ பிரதி நிதிகள் ஃபிராக்ஷன் பொறுப்பு.*
15. ஜி. ராமகிருஷ்ணன்	- *மாநில மையம், ராமசாமி படையாச்சி, பாண்டிச்சேரி மாவட்டக் குழுக்கள் பொறுப்பு, வள்ளலார் மாவட்டத்திற்கு உதவி, வாலிபர், ஆராய்ச்சி மைய கிளை, மாணவர், டாக்டர், அறிவியல், வழக்கறிஞர் ஃபிராக்ஷன், கல்விக்குழு.*

282. தோழர்கள் ஏ. நல்லசிவன், என். சங்கரய்யா, ஆர். உமாநாத் மூவருக்கும் மாவட்டங்களுக்கு பொறுப்பு நிச்சயிக்கப்பட வில்லை. மாவட்டக்குழுக்களில் விசேட பிரச்சனைகள் எழுமானால் இவர்கள் கலந்துகொள்ள ஏற்பாடு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

283. கீழ்க்காணும் மாநிலக்குழு உறுப்பினர்கள் மாநிலரீதியான அரங்கங்களுக்கு பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர்.

1. பி. எம். குமார்	- *சி. ஐ. டி. யு. மாநில மையம்*
2. கே. வைத்தியநாதன்	
3. வி. ஏ. கருப்புசாமி	- *வி. ச. மையம்*
4. பாப்பா உமாநாத்	- *மாதர் சங்க மையம்*
5. மைதிலி சிவராமன்	
6. சுதா	
7. எஸ். ஏ. பெருமாள்	- *தீக்கதிர் மதுரை மையம்*
8. வி. பரமேஸ்வரன்	
9. அருணன்	
10. ஜி. உதயகுமார்	- *தீக்கதிர் - சென்னை மையம்*
11. சு.பொ.அகத்தியலிங்கம்	
12. டி. ரவீந்திரன்	- *வாலிபர் சங்க மையம்*
13. ஏ. சௌந்தரராசன்	- *போக்குவரத்து அரங்கம்*
14. பி. வி. ராமதாஸ்	- *ரயில்வே அரங்கம்*
15. து. ஜானகிராமன்	- *மின்சார அரங்கம்*
16. அருணன்	- *முற்போக்கு எழுத்தாளர் அரங்கம்*
17. ஏ. லாசர்	

- *பசும்பொன் - முகவை மாவட்டக் குழு உதவி*

18. என். சீனிவாசன் - *புதுக்கோட்டை மாவட்டக்குழு உதவி*

19. பி. சம்பத் - *குமரி மாவட்டக்குழு உதவி*

20. எம். ஆர். அப்பன் - *அரசு ஊழியர் அரங்க ஃபிராக் ஷன்களுக்கு உதவி*

284. இது தவிர, பிற மாநிலக்குழு உறுப்பினர்கள் மாவட்டக்குழுக் களிலிருந்து பணியாற்றுகிறார்கள்.

1. உ. ரா. வரதராசன் - *சென்னை*

2. பி. சுந்தரராஜன் - *செங்கை*

3. பி. சங்கரன் - *பாண்டிச்சேரி*

4. கே. பாலகிருஷ்ணன் - *தென்னாற்காடு வள்ளலார்*

5. என். ஆர். ராமசாமி

6. சி. கோவிந்தராஜன்

7. ஆர். ராமமூர்த்தி - *விழுப்புரம் - ராமசாமி படை யாச்சி*

8. வெ. மன்னார் - *திருவண்ணாமலை - சம்புவராயர்*

9. கே. ஆர். சுந்தரம் - *வட ஆற்காடு*

10. டி. ஆர். புருஷோத்தமன்

11. எம். செல்லமுத்து - *நாகை காயிதேமில்லத்*

12. வி. தம்புசாமி

13. ஜி. பாரதிமோகன்

14. குஞ்சிதம் பாரதிமோகன்

15. பி. எஸ். தனுஷ்கோடி

16. ஆர். சி. பழனிவேல் - *தஞ்சை*

17. பி. சண்முகம் - *புதுக்கோட்டை*

18. ஜி. ரத்தினவேலு - *திருச்சி*

19. ஜி. குமார் - *கரூர்*

20. பி. கே. கருப்புசாமி - *திண்டுக்கல் - அண்ணா*

21. எஸ். ஏ. தங்கராஜன்

22. வி. குமாரவேல் - *பசும்பொன் -முகவை*

23. எம். கருப்புராஜா

24. ஏ. லாசர் - *மதுரை புறநகர்*
25. கே. ராஜப்பன்
26. பி. மோகன் - *மதுரை - மாநகர்*
27. என். நன்மாறன்
28. எம்.என்.எஸ்.வெங்கட்ராமன் - *காமராஜர்*
29. வி. பழனி - *நெல்லை - கட்டபொம்மன்*
30. எம். பாண்டியன்
31. எஸ். நூர்முகமது - *குமரி*
32. பி. திவாகரன்
33. ஜெ. ஹேமச்சந்திரன்
34. கே. தங்கவேல் - *கோவை*
35. சி. கோவிந்தசாமி
36. கே. சி. கருணாகரன்
37. ஆர். வெங்கிடு
38. யு. கே. வெள்ளிங்கிரி
39. எம். நஞ்சப்பன்
40. என். வாசு - *நீலகிரி*
41. கே. துரைராஜ் - *பெரியார்*
42. பி. தர்மலிங்கம் - *சேலம்*
43. கே. கருணாகரன்
44. ஆர். ஜவகர் - *மாநில மையம்*
45. பாலு - *கல்விக்குழு, அறிவியல் அரங்கம்*

285. மாநிலச் செயற்குழு இடைப்பட்ட காலத்தில் 66 முறை கூடியுள்ளது. அதாவது, சராசரியாக 3 வாரங்களுக்கு ஒருமுறை கூடியுள்ளது. செயற்குழு உறுப்பினர்கள் வருகை பெரும்பாலும் முழு அளவில் உண்டு. நோய்வாய்ப்பட்டாலோ, மற்ற தவிர்க்க இயலாத காரணம் என்றாலோ ஒரிருவர் வருவதில்லை. இதுவும் எப்போதாவது நடப்பது உண்டு.

286. மாநிலச் செயற்குழு கூட்டங்களில் மத்தியக்குழு விடுக்கும் இயக்கங்களுக்கு திட்டமிடுவது, மாநில அளவில் இயக்கங்கள் நடத்த வழிவகை காண்பது, வர்க்க, வெகுஜன, ஸ்தாபன சப்-கமிட்டிகள், பிராக்ஷன்களுக்கு திட்டமிடுவது, முடிவுகளை

அமுல்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வது, அவ்வப்போது எழக்கூடிய மாவட்ட ஸ்தாபன பிரச்சனைகள், தீக்கதிர் மற்றும் கட்சி பத்திரிகைகள் விற்பனை, பிரசுரங்கள் வெளியீடு ஆகியவை குறித்து விவாதித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரேசமயத்தில் பல்வேறு இயக்கப் பிரச்சனைகள் முன்வரும்போது வேலைப்பளு காரணமாக ஒருசில பிரச்சனைகளை உடனடியாக கவனிக்க முடியாமல் போனதும் உண்டு.

மாநில மையம்

287. தோழர்கள் ஏ.என்., என்.எஸ்., ஆர்.யு., பி.ஆர்.பி., என்.வி., டி.எல்., ஜி.ஆர். கொண்ட மையம் தீர்மானம் செய்யப்பட்டது. மையத்தில் ஒன்று அல்லது இரண்டு தோழர்கள் பேசி செயல்பட வேண்டும் என்ற முடிவில் கடந்த காலத்தைவிட அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இது இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும். மையத் தோழர்களுக்கு சில சமயங்களில் வேலைப்பளு காரணமாக ஒருவர்கூட மையத்தில் இல்லாத நிலையும் உண்டு. இதுவும் தவிர்க்கப்பட வேண்டும்.

288. மாநிலச் செயற்குழு - மாநில மைய வேலைகளைப் பரிசீலித்த போது, கீழ்க்காணும் முன்னேற்றம் இருப்பதைப் பார்க்க முடியும்.

- ஏற்படும் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு உடனுக்குடன் நமது கட்சியின் பிரதிபலிப்பை பத்திரிகை அறிக்கைகளாக வெளியிட்டுள்ளோம்.
- தீக்கதிர் அபிவிருத்திக்கு தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டது.
- வர்க்க, வெகுஜன அமைப்புகளுக்கு வழிகாட்டப்பட்டது.
- பிற அரசியல் கட்சிகளுடன் தொடர்ந்து பேசுவது என்பது முன்னைவிட கூடுதலாக இருந்தது.
- தமிழ்நாடு அரசியல் பற்றி தொடர்ந்து விவாதித்து வழிகாட்டப்பட்டது.

- 24 மணி நேரமும் மாநில மையம் செயல்படக் கூடியதாக உரு வாக்கப்பட்டது.

- அரசியல் தலைமைக்குழுவுடன் தொடர்பு கொண்டு செயல் படுவதில் முன்னேற்றம் இருந்தது.

- மாவட்டக் குழுக்களோடு நெருக்கமான தொடர்புகள் வைத்துக் கொள்ளப்பட்டது. அவைகளுக்கு வழிகாட்டப்பட்டு வந்தது.

289. கீழ்க்கண்ட மாநிலச் செயற்குழு வேலைகளில் மேலும் கூடு தல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

- அரசியல் வகுப்புகளுக்கு திட்டமிடுவதில் கூடுதல் கவனம் வேண்டும். வகுப்பு எடுக்கும் தகுதியுள்ளவர்களை தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

- மத்தியக்குழுவிற்கு உரிய ரிப்போர்ட்டுகள், பி. டி. க்கு செய் திகள் தொடர்ந்து அனுப்புவதில் மேலும் முன்னேற்றம் தேவை.

- மாவட்டக்குழுக்களோடு நெருக்கமான தொடர்பு வைத்திருந்த போதிலும், மாவட்டக் குழுக்கள் எழுப்பும் பிரச்சனைகளில் ஒருசிலவற்றில் உடனடியாக முடிவெடுக்காத நிலையும் நீடிக் கிறது.

290. மாநிலக்குழு அலுவலகத்தில் தோழர் ஜவகர் உட்பட 8 தோழர்கள் பணியாற்றுகிறார்கள். மாநில மையத்தில் ஏராள மான பணிகள் உண்டு. அதை நிறைவேற்ற மாநிலக்குழு உறுப் பினர்கள் மூவர் அல்லது நான்கு பேர் கூடுதலாக இருந்து பணி யாற்றினால் தான் இதில் முன்னேற்றம் காணமுடியும்.

291. தோழர் கே. எம். ஹரிபட், தோழர் பி. ஜி. கிருஷ்ணன் ஆகி யோர் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ விடுப்பில் உள்ள னர்.

292. மாநிலக்குழு அலுவலகச் செயலாளராக பணியாற்றிய தோழர் ஜி.உதயகுமார் சென்னை தீக்கதிர் மேலாளர் பொறுப் பில் பணியாற்றி-வருகிறார்.

293. சென்னை மாவட்டக்குழுவில் இருந்து பணியாற்றி வந்த தோழர் சு.பொ.அகத்தியலிங்கம் சென்னை தீக்கதிர் பொறுப்பாசிரியராக பணியாற்றி வருகிறார்.

294. காமராஜர் மாவட்ட செயலாளராக இருந்த தோழர் எஸ். ஏ. பெருமாள் மதுரை தீக்கதிரில் துணைப் பொது மேலாளராக பணியாற்றி வருகிறார். தோழர் கே. வைத்தியநாதன் விபத்தில் சிக்கி உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தாலும், அவர் சிஐடியு மையத்தில் ஓரளவு பணியாற்றுகிறார்.

295. மாநிலக்குழு உறுப்பினர்கள் தங்களது மாவட்டப் பணிகளோடு பொதுக்கூட்டங்களுக்கு சென்று அவ்வப்போது உதவி செய்கின்றனர். தமிழகத்தில் கட்சியின் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் மாநிலக்குழு உறுப்பினர்கள் மேலும் கூடுதலாக பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்ற திட்டமிட வேண்டியுள்ளது

உபகுழுக்கள் ஃபிராக்ஷன்கள்

தொழிற்சங்க உபகுழு

296. மாநில உபகுழு 15 உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகிறது. இதுவரை ஐந்து முறை கூடியுள்ளது. தொழிற்சங்க அரங்க பணிகள் பற்றி மாநிலக்குழு விவாதத்திற்கான இரண்டு அறிக்கைகளை தயார் செய்தது. மாவட்ட மாநாடுகள் தயாரிப்பு, மாநில மாநாடுகள் தயாரிப்பு போராட்ட பரிசிலனை உட்பட முக்கிய பிரச்சனைகள் உபகுழுவில் விவாதிக்கப்படுகின்றன. தொ. ச..உபகுழுவை முறையாக குறிப்பிட்ட கால அளவில் கூட்ட எதிர்காலத்தில் கூடுதல் முயற்சி தேவைப்படுகிறது.

297. தொழிற்சங்க அரங்கில் அரங்கவாரியான ஃபிராக்ஷன்கள் உள்ளன. போக்குவரத்து, மின்சாரம், ரயில்வே தவிர மத்தியதர ஊழியர் அமைப்புகளுக்கான ஃபிராக்ஷன்களும் உள்ளன. மாநில ஃபிராக்ஷன்கள் கூட்டம் பெரும்பாலும் முறையாக நடைபெறுகின்றன. ஃபிராக்ஷன் கூட்டங்களில் அரங்க தொழிற்சங்கங்களுக்கு வழிகாட்டும் பணிதான் பிரதானமாக நடைபெறுகிறது. சில மத்தியதர வர்க்க ஃபிராக்ஷன்கள்,

மாவட்டங்களில் அரங்க கட்சிப் பணிகளில் வழிகாட்டி உதவி வருகின்றன.

298. தொழிற்சங்கம் சந்திக்கும் கொள்கைப் பிரச்சனைகளில் ஃபிராக்ஷனோ, கட்சி இடைக்கமிட்டியோ வழிகாட்டும்போது அந்த வழிகாட்டுதல் முறையாக கட்சிக் கிளைகளில் ரிப் போர்ட் செய்யப்பட வேண்டும்.

299. ஆண்டுப் பேரவையின்போது வைக்கப்படும் பேனல் குறித்து கட்சிக் கிளைகளில் ஆலோசனை கேட்கப்படுகின்றது. இருந்தும் சில இடங்களில் கட்சி உறுப்பினர்கள் பேரவையில் வாக்கெடுப்புக்கு விட வேண்டும் என்ற கோரிக்கை வைத்துள் ளனர். வாய்ப்புள்ள இடங்களில் இதை அமுலாக்க வேண்டும்.

300. எல்லா மாவட்டங்களிலும் சப்-கமிட்டிகள் பல அரங்க ஃபிராக்ஷன்கள் இருப்பினும், பெரும்பான்மையானவை செயல்படும் அமைப்புகளாக இல்லை. எல்லா மட்டத்திலும் சப்-கமிட்டிகள், ஃபிராக்ஷன்கள் இருக்க வேண்டும் என்ற தற் போதைய நடைமுறையை மாற்றி, எங்கெல்லாம் இவை அவ சியம் என்பது பற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட செயற்குழுக்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

301. தொழிற்சங்கங்களை கட்சியின் கிளைகளாக பாவிக்கும் நிலையும் உள்ளது. அதேசமயம் தொழிற்சங்கங்கள் கட்சி வழி காட்டலுக்கு அப்பாற்பட்டு இயங்கும் ஸ்தாபனம்என்ற போக் கும் எழுகிறது. இவ்விரு போக்குகளையும் களைய சப்-கமிட்டி களும், ஃபிராக்ஷன்களும் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

விவசாய சங்க பகுழு

302.- மாநில உபகுழு 10 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

- இது 6 மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறது.
- இக்குழு தமிழகத்தில் விவசாய சூழல் சம்பந்தமாக ஓர் ஆய்வ றிக்கை தயார் செய்தது.
- மேலும் கடன் நிவாரணம், கரும்புவிலை போன்ற பிரச்ச னைகளில் கொள்கை வகுத்து வழிகாட்டியது.

- விவசாய சங்கம், விவசாய தொழிலாளர் சங்கம் சம்பந்தமான ஸ்தாபன பரிசீலனை பற்றிய அறிக்கை தயாரித்து கட்சியின் மாநிலக்குழுவின் விவாதத்திற்கு வைத்தது.

வாலிபர் சங்க ஃபிராக்ஷன்

303. மாநில ஃபிராக்ஷன் 14 தோழர்களைக் கொண்டு இயங்குகிறது. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடுகிறது.

304. மாநில அளவில் நடத்தப்படும் இயக்கங்கள் பற்றி ஃபிராக்ஷனில் முடிவெடுத்து வாலிபர் சங்க மாநில கமிட்டியில் முறையாக அமுல்படுத்தப்படுகிறது. வாலிபர் அரங்கில் கட்சியைக் கட்டும் பணி பற்றியும் இந்த அரங்கத்திற்கு கட்சி எந்த வகையில் வழிகாட்ட வேண்டும் என்பது பற்றியும், வாலிபர் சங்கம் ஜனநாயக ரீதியில் எப்படி செயல்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் ஃபிராக்ஷன் பரிசீலித்து கட்சியின் மாநிலக் குழு விவாதத்திற்கு வைத்தது. இது கட்சிக் கடிதமாகவும் வெளியிடப்பட்டது.

305. மாநில மாநாட்டில் சங்கத்தின் மாநில நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பதற்கு முன்னால், ஃபிராக்ஷனில் கருத்து அறிந்து, பிறகு கட்சியின் மாநில செயற்குழு ஒப்புதலோடு அமுலாக்கப்பட்டு வருகிறது.

மாணவர் சங்க ஃபிராக்ஷன்

306. மாநில ஃபிராக்ஷனில் 13 உறுப்பினர்கள் செயல்படுகின்றனர். ஃபிராக்ஷன் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை ஒழுங்காகக் கூடுகிறது. ஃபிராக்ஷனில் பெரும்பாலும் கல்வி பிரச்சனை சம்பந்தமாகவும், அதன்மீது இயக்கம் நடத்துவது சம்பந்தமாகவும்தான் விவாதிக்கப்படுகிறது.

307. சங்கத்தில் உறுப்பினர் சேர்ப்பு பற்றியும் ஃபிராக்ஷனில் விவாதிக்கப்படுகிறது. ஆனால் மாணவர் சங்கத்தில் கட்சியைக் கட்டும் பணி பற்றி விவாதிப்பது என்பது குறைவுதான். இதுபற்றி எதிர்காலத்தில் கூடுதல் கவன்ம் செலுத்தப்பட வேண்டும்.

மாதர் சங்க ஃபிராக்ஷன்

308. மாநில ஃபிராக்ஷன் 12 உறுப்பினர்களை கொண்டு இயங்குகிறது. இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கூடுகிறது. ஃபிராக்ஷன் கூட்டங்களில் பெரும்பான்மை உறுப்பினர்கள் பங்கு கொள்கின்றனர். அரங்கத்தில் கட்சியைக் கட்டும் பணி யில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஓரளவு முன் னேற்றமும் உண்டு. மாநிலக்குழு கூடுவதற்கு முன்னால் ஃபிராக்ஷன் கூட்டப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மாநில அளவிலான இயக்கங்கள், வகுப்புகள், பயிற்சி பட்டறை, மாநாடுகள் பற்றியெல்லாம் முதலில் ஃபிராக்ஷனில் பேசி முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

309. மாதர் சங்க முழுநேர ஊழியர்கள், நிதி ஏற்பாடுகள், கட்சிக் கல்வி, பயிற்சி வகுப்புகள் போன்ற பிரச்சனைகளை மாநில ஃபிராக்ஷன் விவாதித்து கட்சியின் மாநிலக்குழுவின் முன் வைத்தது. கட்சியின் மாநிலக்குழுவும் இதை. பரிசீலித்தது. அடுத்து மாவட்ட குழுக்களுக்கு இதை எடுத்து செல்ல வேண்டும்.

தீக்கதிர் உபகுழு

310. தீக்கதிர் உபகுழு 10 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கு கிறது. இக்குழு மாதாமாதம் கூடுகிறது என்றே சொல்லலாம். தீக்கதிர் நிர்வாக ஏற்பாடு முதற்கொண்டு பத்திரிகை தரம் உயர்த்துவது வரை பல பிரச்சனைகள் பற்றி தீக்கதிர் உபகுழு விவாதிக்கிறது.

311. மேலும் மின்ஊழியர், போக்குவரத்து, ரயில்வே, எல். ஐ. சி. , தபால் - தந்தி, அரசு ஊழியர், ஆசிரியர்கள், வங்கி, மருத்துவ பிரதிநிதிகள், அறிவியல், டாக்டர்கள், வழக்கறிஞர்கள், கலை - இலக்கியம் ஆகிய அரங்கங்களிலும் ஃபிராக்ஷன்கள் அமைக் கப்பட்டு செயல்படுகின்றன. இவ்வரங்கங்களை செயல்பட வைப்பதில் குறிப்பாக மத்தியதர வர்க்க அரங்கங்களை செயல் பட வைப்பதில் சம்பந்தப்பட்ட ஃபிராக்ஷன்கள் நல்ல முறை யில் பங்காற்றுகின்றன. அரங்கத்தில் கட்சி வளர்ச்சிக்கும் திட்ட மிடப்படுகின்றன.

312. இடைக்கமிட்டி அளவில் தற்போது அமைக்கப்பட்டுள்ள வர்க்க / வெகுஜன ஸ்தாபனங்களில் சப்-கமிட்டி, ஃபிராக்ஷன் களில் பெரும்பான்மையானவை செயல்பாடற்றவையாகவே உள்ளன. எனவே, இடைக்கமிட்டி அளவில் சப்-கமிட்டி / ஃபிர்ராக்ஷன் அமைக்கத் தேவையில்லை என மாநிலக்குழு முடிவு செய்துள்ளது.

313. விசேஷ சூழ்நிலையில் சப்-கமிட்டி / ஃபிராக்ஷன் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டால், மாவட்டக் குழுக்களின் ஒப்பு தல் பெற்று அமைக்கப்பட வேண்டும்.

314. கடந்தகாலத்தில் மாநில, மாவட்ட அளவிலான சப்-கமிட்டி கள், ஃபிராக்ஷன்கள் கூடுவதில் ஏற்பட்ட பலகீனம் போக்கப் பட்டு, உரியகாலத்தில் கூடுவதை உத்தரவாதப்படுத்த வேண்டி யுள்ளது.

மாநில கண்ட்ரோல் கமிஷன்

315. கண்ட்ரோல் கமிஷனுக்கு தோழர் ஹரிபட் அவர்களைத் தலைவராகக் கொண்டு தோழர்கள் மணியன் (நாகை மாவட் டம்), என்.வி.தாமோதரன் (கோவை மாவட்டம்), சிங்கார வேலு (சேலம்), செல்வசிங் (சென்னை) ஆகியோர் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

316. தோழர் ஹரிபட் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவர் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு மாநிலக்குழு உறுப்பினர் தோழர். என். சீனிவாசன் தலைவர் பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்கமிஷன் சுயேட்சையாக இயங்கி வருகிறது.

சட்டமன்றத்தில் நமது பணி

317. இன்றைய சட்டமன்றத்தில் நமக்கு ஒரேயொரு உறுப்பினர் இருப்பதாலும் அதிமுக அரசு சட்டமன்றத்திலும் ஜனநாயக பூர்வமான செயல்பாடுகளை அழித்து வருவதாலும் சட்டமன் றத்தைப் பயன்படுத்தி மக்கள் பிரச்சனைகளில் மற்றும் அர சியல் பிரச்சனைகளில் ஆளும் கட்சியை அம்பலப்படுத்துவது என்பது பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

318. இந்தச் சூழலில் தோழர். தம்புசாமி மாநில மைய உதவியுடன் முடிந்த அளவு பிரச்சனைகளை சட்டமன்றத்தில் எழுப்புகிறார்.

319. தங்கய்யன் படுகொலை பிரச்சனையில் தோழர் தம்புசாமி யின் தலையீடு வருவாய்த்துறை அமைச்சர் எஸ். டி. சோம சுந்தரத்தை அம்பலப்படுத்த உதவியது. மற்றபடி எழும் பிரச் சனைகளில் நமது கட்சியின் நிலையை தெளிவுபடுத்த சாத்திய மான அளவு சட்டமன்றத்தைப் பயன்படுத்த முடிகிறது.

மாவட்டக் குழுக்கள்

320. கடந்த மாநில மாநாட்டு சமயம் 24 மாவட்டக்குழுக்கள் இருந் தன. அதற்குப்பின் திருச்சி மாவட்டக்குழு இரண்டாகப் பிரிக் கப்பட்டு திருச்சி, கரூர் என மாவட்டக்குழுக்கள் உருவாயின. ஆக 25 மாவட்டக்குழுக்கள் செயல்பட்டன. இம்மாநாட்டின் போது பசும்பொன் - முகவை மாவட்டக்குழு இரண்டாகப் பிரிக்கப்பட்டு இராமநாதபுரம் மாவட்டக்குழு, பசும்பொன் மாவட்டக்குழு என்றும், செங்கல்பட்டு மாவட்டம் பிரிக்கப் பட்டு செங்கை (வடக்கு) மாவட்டக்குழு, செங்கை (தெற்கு) மாவட்டக்குழு என்றும், சென்னை மாவட்டம் வடசென்னை, தென்சென்னை என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் 28 மாவட்டக்குழுக்கள் இயங்கி வருகின்றன.

321. கடந்த காலத்தில் நாம் எடுத்துக்கொண்ட தொடர் முயற்சி களால் பெரும்பாலான மாவட்டங்களில் செயல்படக்கூடிய மையங்களை உருவாக்க முடிந்துள்ளது. இன்னும் சில மாவட் டங்களில் மையம் செயல்படுவதில் முன்னேற்றம் தேவைப் படுகிறது. அலுவலக செயலாளர்களை நியமிப்பதில் சில மாவட்டங்களில் பலகீனம் நீடிக்கிறது. இதற்கு மாவட்டக் குழுக்கள் கவனம் செலுத்த வேண்டும் பெரும்பாலான மாவட் டங்களில் வேலை அறிக்கை வைத்து விவாதம் நடத்துவதில் முன்னேற்றம் உண்டு. இதனால் உரிய பலனும் கிடைத் துள்ளது. இன்னும் சில மாவட்டங்களில் முறையாக எழுத்து மூலமான அறிக்கை வைத்து விவாதிப்பதில் பலகீனம் நீடிக் கிறது.

322. வரவு - செலவு கணக்குகளை முறையாக பராமரிப்பதில் கவனம் செலுத்தாதபோக்கு இன்னும் சில மாவட்டங்களில் நீடிக்கிறது. மாவட்டக்குழுக்கள் கணக்கை முறையாக பராமரிப்பதை முக்கியப் பணியாகப் பார்க்க வேண்டும். அவ்வப்போது பண இருப்பை நேரிடையாக பரிசீலிக்க வேண்டும். மாவட்ட செயலாளர்கள் நிதிப் பொறுப்பாளராக இருக்கக் கூடாது என்ற கடந்த மாநாட்டு முடிவை அமுல்படுத்துவதில் உள்ள பலகீனம் போக்கப்பட வேண்டும்.

323. பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலிருந்தும் மாநில மையத்திற்கு சுற்றறிக்கைகளும், மாவட்டக்குழு முடிவுகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் நடைபெற்ற வேலைகள், இயக்கங்கள் பற்றிய அறிக்கைகளை உடனுக்குடன் அனுப்பி வைப்பதில் முன்னேற்றம் இல்லை.

324. மாநிலச் செயற்குழு, மாநிலக்குழு, மாவட்டக்குழு ஆகியவற்றின் ஸ்தாபன வேலைகளை ஆண்டுக்கொருமுறை பரிசீலனை செய்ய வேண்டுமென மத்தியக்குழு முடிவு செய்தது. மாநிலக்குழு, மாநிலச் செயற்குழு வேலைப் பரிசீலனை செய்வது என்ற முடிவு அமுலாகவில்லை. மாநிலக்குழு வேலையைப் பரிசீலனை செய்திருந்தால் அது கட்சி ஸ்தாபன வளர்ச்சிக்கு உதவியிருக்கும் என்பதை மாநிலக்குழு பார்த்தது. இத்தகைய பரிசீலனை நடத்தாத பலகீனம் எதிர்காலத்தில் போக்கப்பட வேண்டும் என்றும் மாநிலக்குழு முடிவுக்கு வந்துள்ளது. ஆனால் மாவட்ட அளவில் எல்லா மாவட்டங்களிலும் ஒரு முறை பரிசீலனையை முடித்துள்ளோம். அப்பரிசீலனைக் கூட்டங்களில் எழுத்துபூர்வமான அறிக்கை முன்வைக்கப்பட்டு, விவாதம் நடத்தப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 2 மாநில செயற்குழு உறுப்பினர்கள் அப்பரிசீலனைக் கூட்டத்தில் கலந்து வழிகாட்டியுள்ளனர்.

325. அத்தகைய ஸ்தாபன பரிசீலனைக் கூட்டங்கள் கட்சி வளர்ச்சிக்கு உதவியுள்ளன. பெரும்பான்மையான மாவட்ட மாநாட்டு அறிக்கைகளில் ஸ்தாபன பரிசீலனைக் கூட்டங்களில் எடுத்த முடிவுகள் அமுல்படுத்தப்படுவதும், அது ஸ்தாபன செயல்பாட்டுக்கு உதவியுள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

திண்டுக்கல் போன்ற ஒருசில மாவட்டங்களில் ஸ்தாபன பரிசீலனை கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் அமுலாக வில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பல மாவட்டங்களில் இத்தகைய பரிசீலனை ஆண்டுதோறும் நடைபெற வேண்டும் என்ற கருத்தும் வந்துள்ளது. இருப்பினும், குறைந்த பட்சம் இரண்டு மாநாடுகளுக்கு இடையில் மாவட்டங்களில் கட்சி பரிசீலனை நடத்துவது அவசியமாகும்.

கட்சி அலுவலகக் கட்டிடங்கள்

326. காமராஜ் மாவட்டக்குழுவிற்கு புதிய அலுவலகம் கட்டி திறக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டக்குழு அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மதுரை புறநகர், மதுரை மாநகர், திண்டுக்கல் மாவட்டங்களில் கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அதற்கான நிதியை திரட்டி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மருத்துவமனை

327. மறைந்த டாக்டர் அண்ணாஜி அவர்கள் கிருஷ்ணகிரியில் இருந்த அவரது மருத்துவமனையை, நமது கட்சியின் 'உழைக்கும் மக்கள் நல அறக்கட்டளை'யிடம் ஒப்படைத்திருந்தார். அவரது நினைவாக 'டாக்டர் அண்ணாஜி நினைவு அறக்கட்டளை' உருவாக்கப்பட்டு, அவ்வறக்கட்டளை மருத்துவ மனையின் அபிவிருத்திப் பணிகளைக் கவனித்து வருகின்றன.

மாவட்ட மாநாடுகள்

328. இப்போது நடந்த எல்லா மாவட்ட மாநாடுகளும், கடந்த மாநாடுகளை ஒப்பிடுகின்றபோது சிறப்பாக நடைபெற்றுள்ளன. அம்மாநாடுகளும், மாநாடுகளையொட்டி நடைபெற்ற பேரணிகளும் நமது செல்வாக்கை மேலும் உயர்த்தக்கூடிய வகையில் அமைந்திருந்தன. குமரி, மதுரை, கோவை, தர்மபுரி மாவட்ட மாநாட்டு பேரணிகளில் 7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையிலான பங்கேற்பும், மற்ற மாவட்டங்களில் 1500 முதல் 3000 வரையான பங்கேற்பும் இருந்தது. மாநாட்டில் பிரதிநிதிகள் பங்கேற்பு நீலகிரி தவிர மற்ற மாவட்டங்களில் 80% முதல் 95% வரை இருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

329. மாநாட்டின்போது கமிட்டி உறுப்பினர்களை, கமிட்டி செய லாளரை தேர்ந்தெடுக்க இதுவரை இருந்த, மேல்கமிட்டி உறுப் பினர்கள் முன்மொழியும் முறை தவிர்க்கப்பட்டு விட்டது. மத்தியக்குழு காட்டிய வழியில் தேர்தல் நடத்தப்பட்டது.

330. இந்தப் புதிய சூழ்நிலையில் பல இடங்களில் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. ஒருசில இடங்களில் தனக்கு வேண்டி யவர்களுக்கு பிரச்சாரம் செய்யும் போக்கு தலைதூக்கி யுள்ளது. கட்சி விதிகளில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைக் கறாராக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை அப்படிப்பட்ட தோழர்களுக்கு நாம் கற்றுத்தந்து முறைப்படுத்த வேண்டிய கடமை நம் முன் உள்ளது.

331. மாவட்டச் செயற்குழு, மாவட்டக் குழுக்களின் செயல் பாடுகள் குறித்து மாநிலக்குழு மேற்கண்ட அடிப்படையில் மதிப்பீடு செய்தது. கடந்த மாநில மாநாட்டிற்குப்பிறகு கட்சி மற்றும் வெகுஜன அரங்கங்களின் வளர்ச்சியில் மாவட்ட செயற்குழு, மாவட்டக் குழுக்கள் முக்கியப் பாத்திரம் வகித் துள்ளன. மூன்று ஆண்டுகளில் முன்னேற்றம் ஏற்பட்டி ருப்பினும், மாவட்டச் செயற்குழுக்கள், மாவட்டக் குழுக்களின் செயல்பாட்டை மாவட்ட மாநாடுகள் பரிசீலித்தது. உதாரணத் திற்காக சில மாவட்ட மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மாவட்டச் செயற்குழு, மாவட் டக் குழுக்களின் செயல்பாட்டில் உள்ள குறைபாடு கீழே அளிக்கப்பட்டுள்ளன.

332. சென்னை மாவட்ட மாநாட்டு அறிக்கையில் இருந்து மாவட்டச் செயற்குழு செயல்பாடு பற்றி 'அறிக்கைகள் தயா ரிப்பது, கடிதங்களை கவனிப்பது, செயற்குழுவிற்கான தகவல் கள் சேகரிப்பது, பிரசுர விற்பனை, கட்சி நிதி, அச்சக நிர் வாகம் மற்றும் இதர மையப் பணிகளையும் உடனடியாக தலை யீடு தேவைப்படும் அரசியல், ஸ்தாபன பிரச்சனைகளையும் வி.எம்.எஸ்., சின்னையா இருவரே கவனிக்கும் நிலை ஏற் பட்டது. இதனால் மாவட்ட மைய பணிகளை முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலைமை இருந்தது.'

333. '1994 ஜூலை மாதத்தில் நடந்த பரிசீலனையின் முடிவாக மாவட்டச் செயற்குழு மாவட்ட மையம், மாவட்டக்குழு ஆகிய வற்றை பலப்படுத்தவும் செயல்பாட்டில் முன்னேற்றம் காண வும் வேறு பணிகளில் இருந்து 5 மாவட்டச் செயற்குழு உறுப் பினர்களை விடுவித்து புதிதாக 7 தோழர்கள் செயற்குழுவில் இணைக்கப்பட்டார்கள்'.

334. நெல்லை மாவட்ட அறிக்கையில் இருந்து:

'கடந்த 3 ஆண்டுகளில் கட்சி மாவட்ட மையத்தில் முழுமை யாக செயல்பட்ட தோழர்கள் எம். பாண்டியன், வி. பழனி இருவர் மட்டுமே. தோழர் ஆர். கருமலையான், பி. ஜெயராஜ் இருவரும் மாவட்ட மைய பணிகளுக்கு பெருமளவு உதவி செய்து வந்துள்ளனர். தோழர் எம். ராஜாங்கம் முழுமையாக பீடி மற்றும் சிஐடியு மாவட்ட மையப் பணிகளையே செய்து வருகிறார். கட்சி மாவட்ட மையப் பணிகளில் அவ்வப்போது பங்கெடுக்கவே முடிகிறது. தோழர் ஆர். கிருஷ்ணன் முடிந்த அளவு மாவட்ட மையப் பணிகளுக்கு உதவி செய்துவருகிறார். தோழர் சி. முருகன் தென்காசியில் இருந்து தூத்துக்குடிக்கு மாறுதலாகிச் சென்ற பிறகு மாவட்ட மையப் பணிகளில் பங்கெடுக்க முடியவில்லை. தோழர் சிவா அரங்கப் பொறுப் பெடுத்த பிறகு கட்சி மாவட்ட மையத்திற்குஉதவி செய்ய முடிய வில்லை. தோழர்கள் தியாகராஜன், எம். நமச்சிவாயம், எம். எஸ். சிவசாமி ஆகியோர் இடைக்கமிட்டி மற்றும் அரங்கப் பொறுப்புகளையே நிறைவேற்றி வந்துள்ளனர். இந்தப் பின் னணியில் மாவட்டச் செயற்குழு செயல்பாட்டில் பெரும் முன் னேற்றம் ஏற்படுத்த முடியவில்லை'.

335. மதுரை - புறநகர் மாவட்ட அறிக்கையிலிருந்து:

"இப்படி ஒரு முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் அமு லான இதேகாலத்தில் தொடர்ந்து மாவட்ட மையத்தில் ஒரு மையத் தோழர் இருப்பது என்ற முடிவு முழுமையாக அமுலாக வில்லை. சில நேரங்களில் மாவட்ட மையத்தில் மையத் தோழர்கள் இல்லாத நிலைமை நீடிக்கிறது. மையத் தோழர் ராஜப்பன் போன்ற தோழர்களுக்கு அரங்கத்தில் செயல்பட

வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. தொடர்ச்சியான பணி மாவட்டம் முழுவதும் நடக்கிற காலங்களில் மையத் தோழர்கள் பல்வேறு கமிட்டிகளுக்கு போய்விடுகின்ற சூழ்நிலைகளில் மையத்தில் மையத் தோழர்கள் இல்லாத நிலைமை நீடிக்கிறது. இக்காலங்களில் அலுவலக செயலாளர் வருகிற பிரச்சனை களை கேட்டு மையத்தோழர்களுக்கு தகவல்களை தருகிறார். வரும் காலத்தில் மையத்தில் எப்போதும் ஒரு தோழர் இருப் பதை உத்தரவாதம் செய்ய வேண்டியதிருக்கிறது'.

336. நாகை - காயிதே மில்லத் மாவட்ட அறிக்கையிலிருந்து:

'மாநாட்டிற்குப் பின், அதாவது 1991 அக்டோபர் 6ம்தேதி முதல் 1995 ஜனவரி 20, 21 வரை மாவட்டக்குழு கூட்டம் 29 முறை நடத்தப்பட்டுள்ளது.

337. கூட்டத்திற்கு தோழர்களின் வருகை என்பது சராசரி 90% உள்ளது. வருகை திருப்தியாக இருந்தாலும் ஏற்றத்தாழ்வான நிலையே உள்ளது. உயர்ந்த எண்ணிக்கை 29. குறைந்த எண் ணிக்கை 17 என்ற அளவில் இருக்கிறது. அநேகமாக, மாவட் டக்குழு கூட்டத்தில்தான் எல்லா முடிவுகளையும் மேற் கொண்டு செயல்படுத்தி வருகிறோம். மாவட்டக்குழுதான் மாவட்ட கட்சியின் உயர்ந்த அமைப்பு என்ற அடிப்படையில் மாவட்டக்குழு 40 மாதங்களில் 29 முறைகள் கூடியுள்ளது என்பது நெருக்கமாகவே கூடியுள்ளதாகும்.

338. மாவட்டக்குழு கூட்டங்கள் முழுத் தயாரிப்புடனும், எழுத்துப் பூர்வமான வேலை அறிக்கை, வரவு - செலவு கணக்கு இவை களுடனும் நடத்தப்படுகின்றன. கூட்டங்கள் நெருக்கமாக நடத் தப்பட்டாலும், குறிப்பிட்டக் காலத்தில் கூடுவதில் தொடர்ந்து பலகீனம் நீடிக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டும். மாவட் டக்குழு உறுப்பினர்களிடம் அரசியல் ஒற்றுமை உள்ளது. ஆனால் செயல் ஒற்றுமை இன்மையால் முணுமுணுப்பு இருக் கிறது. மாவட்டக் குழுவிலிருக்கும் சில தோழர்களுக்கு மாவட் டத்தின் உயர்ந்த அமைப்பில் இருக்கின்றோம் என்ற நிலை யிலிருந்து கமிட்டியில் விவாதம் செய்து முடிவிற்கு வர உதவு வது, மாவட்டம் முழுவதற்கும் உள்ள அரசியல் ஸ்தாபனத்திற்கு

பொறுப்பேற்று செயல்படுவது போன்றவைகளில் பலகீனம் நீடிக்கிறது. இது களையப்பட வேண்டும்.

339. சில தோழர்கள் கமிட்டி கூட்டங்களுக்கு வருவது, கருத்துக் களை கூறுவது, முடிவுகளை அமுல் நடத்துவதில் தங்களுக்கு பொறுப்பில்லை என்று கருதும் நிலை இருக்கிறது. இது மாற் றப்பட வேண்டும்.

340. கமிட்டியில் விவாதம் என்பது ஓரளவே இருக்கிறது. தங்கள் பகுதி வேலைகளை மட்டும் சொன்னால் போதும் என்ற நிலை நீடிக்கிறது. இது போக்கப்பட வேண்டும். ஆனாலும் சென்ற மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்ட பலகீனம் இருக்கிறது'.

341. தென்னாற்காடு - வள்ளலார் மாவட்ட மாநாட்டு அறிக்கையி லிருந்து:

'மாவட்டச் செயற்குழு மாவட்ட மைய செயல்பாடுகளில் இத்தகைய முன்னேற்றம் இருந்தபோதிலும் கவனிக்கப்பட வேண்டிய குறைபாடுகளும் உள்ளன. பலமுறை விவாதித்தும் தாமதமாக கூட்டங்கள் தொடங்குவது நீடிக்கிறது. செயற்குழு கூட்டங்களில் அழுத்தமான விமர்சனம், சுயவிமர்சனம் என்பது இல்லை. பிரச்சனை அடிப்படையில் கூர்மையான விவாதம் அமைவதில்லை. விமர்சனங்களை தன்னுணர்வு பட்டு பார்க்கும் மனோபாவம் உள்ளது. கூட்டுத்தலைமை என்ப தில் முன்னேற்றமிருந்த போதிலும் மேலும் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

342. இடைக்குழு, கிளை மட்டத்தில் ஏற்படும் ஸ்தாபன பிரச்ச னைக்களை உடனடியாக தலையிட்டு தீர்க்க முடிவதில்லை. கட்சிக் கல்வி, தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட் மற்றும் பிரசுர விற்பனையில் போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை. இது குறித்து பலமுறை விவாதித்து முடிவுகள் செய்தபோதிலும் அமு லாவதில் முன்னேற்றமில்லை.

343. மாவட்டக்குழு முடிவுகளை அமுல்படுத்துவதில் செயற்குழு உறுப்பினர்களிடையே ஏற்றத்தாழ்வான நிலை உள்ளது. முடிவுகளை அமுல்படுத்துவதில் கராறாக நிற்பதில்லை. கட்சிக் கல்வியில் தொடர்ச்சியான ஏற்பாடு இல்லை. செயற்குழு

கூட்டங்களில் அரசியல் விவாதங்கள் நடைபெறுவதில் ஊன முள்ளது. அரசியல் தத்துவார்த்த துறையில் வளர்த்துக் கொள் வதில் சுயமுயற்சி குறைவே! கட்சியின் அனைத்து மட்டங் களிலும் ஊழியர் பற்றாக்குறை பெரும் பிரச்சனையாக உள்ளது. கட்சியில் தற்போது ஏராளமான இளைஞர்கள் வந் துள்ளார்கள். அவர்களைப் பயிற்றுவித்து ஊழியர்களாக்கு வதில் திட்டமிட்ட முயற்சியில்லை.'

344. திருச்சி மாவட்ட மாநாட்டு அறிக்கையிலிருந்து:

'இக்காலத்தில் ஏராளமான வேலைகளுக்கு செயற்குழு திட்டமிட்டு செயல்பட்டிருந்தாலும், செயற்குழு மையக் கூட் டங்கள் முறைப்படி நடத்தப்பட்டிருந்தாலும், ஸ்தாபனத்துறை யில் முன்னேற்றம் போதுமானதாக இல்லை.

345. குறிப்பாக, இடைக்கமிட்டிகளை பலப்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறுகிய எல்லைக்குள் செயல்பட வசதி யாக, சில இடைக்கமிட்டிகள் பிரிக்கப்பட்டன. தொடர்ச்சியாக அதன் செயல்பாட்டை அதிகரிக்க செயற்குழு கூடுதல் கவனம் செலுத்துவதில்,

346. வெகுஜன அரங்கங்களைக் கெட்டிப்படுத்தவும், அவைகளை விஸ்தரிக்கவும், வெகுஜன அரங்கத்தில் கட்சியைக் கட்டவும் இந்த நோக்கத்துடன் அரங்க சப்-கமிட்டி ஃபிராக்ஷன்களை இயக்குவதில்,

★ நாம் நடத்தியிருக்கும் பரிசீலனை அனுபவங்களை கட்சி அணி களுக்கு எடுத்துச் சென்று போதிப்பதில்,

★ அரசியல் வகுப்புகள் கூடுதலாக நடத்தி நமது அணிகளுக்கு கல்வியை போதிப்பதில்,

★ சுயகல்விக்கு உதவும் வகையில் பத்திரிகை, பிரசுரங்கள், வர வழைத்து விற்பனையை அதிகரிப்பதில் கூடுதல் கவனம் -

347. - இவ்வகையான பணிகளை செயற்குழு செய்திருக்க வேண்டும். ஆனால், மைய செயற்குழு தொடர்ச்சியாக வரும் வேலைகளில் கவனம் செலுத்தியதால், அடிப்படையான சில பணிகளில் தடங்கல்கள் ஏற்படுகின்றன.

348. வருங்காலத்தில் இப்படிப்பட்ட பலகீனத்தை களைந்து அடிப்படை பிரச்சனைகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுவதன் மூலம் முன்னேற்றம் காணமுடியும்'.

349. மேற்கண்ட மாவட்டங்களில் மாவட்டச் செயற்குழு, மாவட்டக்குழு செயல்பாட்டில் பல அம்சங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பினும் குறிப்பிட்ட சில அம்சங்களில் உள்ள பலகீனத்தை கவனித்து எதிர்காலத்தில் களைய வேண்டியுள்ளது.

350. உதாரணத்திற்காக சில மாவட்ட மாநாட்டு அறிக்கைகளிலிருந்து சில பகுதிகளை சுட்டிக்காட்டினோம். எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட மாநாடுகள் சுட்டிக்காட்டிய குறைபாடுகளைக் களைய மாவட்டச் செயற்குழு, மாவட்டக் குழுக்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இடைக்கமிட்டிகள்

351. கடந்த மாநாட்டின்போது 222 இடைக்கமிட்டிகள் செயல்பட்டன. பல மாவட்டங்களில் புதிய இடைக்கமிட்டிகள் அமைக்கப்பட்டு தற்பொழுது 284 இடைக்கமிட்டிகள் செயல்பட்டு வருகின்றன.

352. இவ்வாறு புதிய கமிட்டிகள் அமைக்கப்பட்டது கட்சி விஸ்தரிப்பிற்கு பயனளித்துள்ளது. வளர்ச்சியடைந்த இடைக்கமிட்டிகளில் செயற்குழுக்கள் அமைக்கப்பட்டதும், கோவை போன்ற நகரத்தில் இடைக்கமிட்டிகளுக்கும், கிளைகளுக்கும் இடையில் லோக்கல் கமிட்டிகள் அமைக்கப்பட்டதும் பயனுள்ளதாக உள்ளது.

353. கடந்த மாநில மாநாட்டில் 'இடைக்கமிட்டிகளை பலப்படுத்துவோம்' என்று முடிவு எடுத்தோம். அது முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்றாலும் கடந்த மூன்றாண்டுகளில் இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டு சில கமிட்டிகள் நிதி ஆதாரம், முழுநேர ஊழியர்கள், பத்திரிகை விற்பனை ஏற்பாடு, வெகுஜன ஸ்தாபனங்களை வழி நடத்துவது போன்றவற்றிலும் கவனம் செலுத்துவதில் முன்னேற்றம் கண்டுள்ளன. பல இடைக்

கமிட்டிகளில் உறுப்பினர்களின் வருகை உட்பட முறையான செயல்பாட்டில் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

354. பல இடைக்கமிட்டிகளில் முழுநேர ஊழியர்கள் இல்லாதது, கூட்டாக வேலை செய்வதற்குப் பதிலாக, ஓர் இரு முழுநேர ஊழியர் மட்டுமே வேலைகளை சுமக்கும் நிலை, நிதிப்பற்றாக் குறை - இவைகளினால் வெகுஜன அரங்கங்களுக்கு உதவி செய்வதில், கட்சிக்கிளைகளை இயங்க வைத்ததில் இடைக் கமிட்டிகள் சிரமப்படுகின்றன.

355. கடந்த மூன்று ஆண்டுகளில் இடைக்கமிட்டி செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை உறுதிப்படுத்த மேற்கண்ட குறைபாடுகளை களைந்து முன்னேற்றம் காண முயற்சிக்க வேண்டும். கிளைகளுக்கு அடுத்ததாக மக்களோடு நெருக்கமாக உள்ளது இடைக்கமிட்டி என்பதை மனதில் வைத்து இடைக் கமிட்டி செயல்பாட்டில் மேலும் முன்னேற்றம் காண வேண்டி யுள்ளது.

356. மின் ஊழியர், போக்குவரத்து ஊழியர் ஆகிய அரங்கங் களில் இடைக்கமிட்டிகள் பல மாவட்டங்களில் உருவாக்கப் பட்டுள்ளன. இவைகள் இந்த அரங்கங்களில் கட்சி மற்றும் சங்கப் பணிகளை திட்டமிட்டு அமுலாக்க உதவிகரமாக உள் ளன. அந்த இடைக் கமிட்டிகள் அந்தந்த அரங்கங்களில் உள்ள தொழிலாளர்களை கட்சிக்கு கொண்டுவர கூடுதல் கவனம் செலுத்தச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட அரங்க இடைக் கமிட்டி தோழர்களை அவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் உள்ள கிளைகளில் அசோசியேட் உறுப்பினர்களாக சேர்த்து கட்சிப் பணியாற்ற வேண்டும் என்பதை இடைக்கமிட்டி மாநாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன. இதை நடைமுறைப்படுத்திட நாம் கவனம் செலுத்திட வேண்டும். இடைக்கமிட்டி மாநாடு களும் எல்லா பகுதிகளிலும் ஓரளவுக்கு சிறப்பாக நடந்துள் ளன. மாநாடுகளில் பிரதிநிதிகளின் வருகை 50% முதல் 75% வரை இருந்துள்ளது.

கட்சிக் கிளைகள்

357. கடந்த மாநாட்டு காலத்தில் 5877 கட்சி கிளைகள் இருந்தன. இப்போது 6986 கிளைகள் என்று வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கட்சியின் ஒட்டுமொத்த செயல்பாட்டில் பெரும் வீச்சு உருவாக வேண்டுமெனில் அதன் அஸ்திவாரமாக உயிரோட்டமுள்ள கிளை செயல்பாடு அமைய வேண்டும் என்பது நாம் அறிந்ததே.

358. குறிப்பாக, ஒரு காலத்தில் பிரதானமாக அரசியல் மற்றும் தொழிற்சங்க அமைப்பை மட்டும் சார்ந்திருந்த கிளைகள், இன்று அரசியல், தொழிற்சங்கம், விவசாய சங்கம், வாலிபர், மாணவர், மாதர் அமைப்புகள், கலை - இலக்கியம், அறிவியல் என்று பன்முகப்படுத்தப்பட்ட பிரச்சனைகளில் தலையிட்டு, பல்வேறு தொடர்ச்சியான வேலைகளுக்கு ஈடுகொடுக்க வேண்டியதாக இருக்கின்றன. இப்பணிகளில் கிளைக்கும், குறிப்பாக கிளை செயலாளருக்கும் பெரும் பொறுப்பு உள்ளது.

359. கிளைகளின் எண்ணிக்கை ஆயிரத்திற்கு மேல் உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்க நல்ல அம்சமே. எனினும், இந்த வளர்ச்சி மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுவதை பட்டியலில் காண முடியும். உதாரணத்திற்கு நமது வலுவான தளமான நாகை - காயிதே மில்லைத் மாவட்டத்தில் கிளைகள் எண்ணிக்கை 412-லிருந்து 526 ஆக மாறியுள்ளது. ஒப்பு நோக்குகையில் பலவீனமான இயக்கம் உள்ள புதுக் கோட்டையில் 87 கிளைகள் உயர்ந்துள்ளது. ஆனால் காமராசர் மாவட்டத்தில் கிளை எண்ணிக்கை உயர்வு 27 மட்டுமே. முகவை மாவட்டத்தில் 11 கிளைகள் குறைந்துள்ளன. நீலகிரி மாவட்டத்தில் கடந்த மாநாடு காலத்தில் 74 கிளைகள் இருந்தன; இன்று 76 கிளைகள் உள்ளன. இதேபோல் நமக்கு ஓரளவு வலுவுள்ள மதுரை மாநகரில் கிளைகள் எண்ணிக்கை உறுப்பினர் எண்ணிக்கை இரண்டிலும் ஒரு தேக்கம் ஏற்பட்டுள்ளதைக் காணமுடியும். மாநிலத்தில் பொதுவாக ஏற்பட்டுள்ள வளர்ச்சி இத்தகைய சில மாவட்டங்களில் பிரதிபலிக்காதது ஏன் என்பது பரிசீலிக்கப்பட வேண்டும்.

360. கிளை செயல்பாடுகள் பற்றி மாவட்ட மாநாடுகளில் ஸ்தூல மான பரிசீலனை ஒருசில மாவட்டங்களிலேயே செய்யப்பட் டுள்ளது. மற்ற மாவட்டங்களில் பொதுவாகவே விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த ஆழமான பரிசீலனை அவசியம் செய்யப்பட வேண்டும். வந்திருக்கிற விபரங்களை வைத்துப் பார்க்கும்பொழுது மாநிலத்தில் கிளைகள் 3 வகைகளாக உள்ளதைப் பார்க்க முடிகிறது. தானாக கூடி செயல்படும் கிளைகள், மேல் கமிட்டி முயற்சித்தால் கூடும் கிளைகள், முயற்சித்தாலும் கூடாத கிளைகள் என்று பொது வாக வகைப்படுத்தலாம்.

361. சற்று ஏற்றத்தாழ்வுகள் இருப்பினும், சுமார் 15% கிளைகள் தானியங்கி கிளைகளாக உள்ளன என்பதும், 50% கிளைகள் மேல்கமிட்டி முயற்சித்தால் கூடும் கிளைகளாக இருப்பதும் - சுமார் 35% கிளைகள் கூடுவதற்கு பெரும் சிரமம் இருப்பதையும் காணமுடிகிறது. பதிவுக்கு பதிவு மட்டுமே கூடும் கிளைகளாக 3ல் 1 பங்கு கிளைகள் இருப்பதாக பல மாவட்டக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

362. இச்சூழலில் பெரும்பான்மையான கிளைகளைச் செயல்பட வைப்பது என்பதும், அதற்கேற்றாற்போல் இடைக்கமிட்டிகள் செயல்பாட்டில் முன்னேற்றம் காண்பது என்பதும் நம்முன் ஸ்தாபனத் துறையில் உள்ள பிரதான கடமையாகிறது. இடைக் கமிட்டி செயல்பாட்டு முன்னேற்றத்துடன் இணைந்து கிளை செயல்படுவதற்கு முதுகெலும்பாக இருக்க வேண்டியது கிளை செயலாளர்களின் பாத்திரமே.

363. தகுதியுள்ள கிளைச் செயலாளர்களை தீர்மானிப்பது - அவர் களுக்கு தொடர்ந்து பயிற்சி கொடுப்பது என்பது சால்கியா வலியுறுத்திய முக்கியமான அம்சம். இதற்கென கிளைச் செய லாளர்கள் கூட்டம் முறையாக நடத்தி அரசியல் ரிப்போர்ட் அளிக்கப்படுவது உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஓரளவு கிளைச் செயலாளர்கள் கூட்டம் சில மாவட்டங்களில் நடைபெறுகிறது. அவைகளும், 'அரசியல் ரிப்போர்ட்' அளிக்கும் நோக்கத்துடன் இல்லாமல் 'வேலைகள்

மீது' பேசவே நடைபெறுவதாக மாவட்ட மாநாட்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

364. மாநிலத்தில் உள்ள 7000 கிளைச் செயலாளர்களை பயிற்றுவித்து கிளைகள் மூலமாக சகல பணிகளும் நிறைவேற்றப்படும் என்ற நிலை உருவாக்க, மாநில - மாவட்டக் குழுக்கள் நடத்த வேண்டிய போராட்டமே இக்காலத்தில் நம்முன் உள்ள ஆகப் பெரிய கடமையாகும்.

365. கட்சி உறுப்பினர்கள்

வருடம்	பி.எம்.	சி.எம்.	ஏ. எம்.
1991	*36,770*	*12,401*	*13,391*
1992	*41,620*	*12,783*	*17,711*
1993	*43,346*	*14,908*	*13,233*
1994	*48,191*	*15,247*	*15,393*

366. கடந்த மாநாட்டுக்குப் பின்னர் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை 14,267 (29%) உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதே. எனினும் 91 முதல் 93 வரை துணைக்குழு உறுப்பினர்கள் 44,000க்கு மேல் சேர்க்கப்பட்டிருப்பினும் - அவர்களில் பெரும்பாலானோரை கட்சியில் தக்க வைத்துக்கொள்ள இயலவில்லை என்பதையும் விபரங்கள் தெரிவிக்கின்றன. கட்சியை விட்டு 'விடுபட்டு போவது' என்ற போக்கும் குறிப்பிடத்தக்க அளவு நீடிப்பதையும் காணமுடியும். இவ்விரண்டு அம்சங்களில் கவனம் செலுத்தப்பட்டிருந்தால் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையை கணிசமாக உயர்த்தியிருக்க முடியும்.

367. உறுப்பினர் எண்ணிக்கை உயர்விலும், துணைக்குழு சேர்ப்பதிலும் கூட மாவட்டங்களுக்குள் பெரும் ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. மதுரை நகர் மாவட்டம், பெரியார் மாவட்டம் போன்ற பகுதிகளில் மாநிலத்தில் சராசரி உயர்வு சதவீதத்திற்கு மிகக் குறைவாகவே உறுப்பினர் எண்ணிக்கை உயர்வு இருப்பதைக் காணமுடிகிறது. உறுப்பினர் சேர்ப்பில் மிகுந்த தயக்கத்துடன் செயல்படும் போக்கும் மற்றும் மிக தாராளப் போக்குடன் செயல்படும் போக்கும் இரண்டும் இருப்பதைக் காணமுடிகிறது.

வர்க்க சேர்மானம்

368. ஒரு வெகுஜன புரட்சி கட்சி கட்டப்படுவதில் அக்கட்சி உறுப்பினர்களின் வர்க்க சேர்மானம் மிக முக்கிய பங்காற்றுகிறது என்பதை நாம் அறிவோம். தொழிலாளி வர்க்கத்திலிருந்து கட்சிக்கு வருவோர் பங்கு குறைந்து வருவதைக் கடந்த மாநாட்டில் சுட்டிக்காட்டியிருந்தோம். இப்பொழுது அவ்வகையில் ஓரளவு முன்னேற்றம் உண்டெனினும் தொடர்ந்து கவனித்து ஒழுங்கு படுத்த வேண்டிய பணியாகவே இது தொடர்கிறது.

369. எனினும், மாநிலத்தில் கட்சியின் வர்க்க சேர்மானம் தொழிலாளி வர்க்கம் - விவசாயத் தொழிலாளி வர்க்கம், ஏழை விவசாயிகள் வர்க்கம் ஆகியவற்றையே பிரதானமாகக் கொண்டு நீடிக்கிறது என்பது இந்த மூன்று பகுதியினரும் சேர்த்து 80% வரை இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

370. மாநிலத்தில் பொதுவாக வர்க்க சேர்க்கை திருப்தி அளிப்பதாக இருப்பினும் மற்ற பல்வேறு அம்சங்களைப் போன்றே இதிலும் பெரிதும் ஏற்றத் தாழ்வான நிலைகளை காண முடிகிறது. பல மாவட்ட மாநாடுகளில் வர்க்க சேர்க்கைப் பிரச்சனைகளை அறிக்கையில் வைக்கப்படவில்லை. எனினும் இவ்விவரம் பரிசீலிக்கப்பட்டுள்ள சில மாவட்டங்களில் உள்ள நிலவரங்கள் பரிசீலிக்கத் தகுந்தவை.

371. உதாரணத்திற்கு நமது வலுவான மாவட்டமான கோவை மாவட்டத்தில் கட்சி உறுப்பினர்களில் விவசாயத் தொழிலாளர்கள் வெறும் 5%தான். திருச்சி, கரூர் மாவட்டங்களில் இது 40%வும், 58%வும் உள்ளது. இதே போல் செங்கை மாவட்ட கட்சி உறுப்பினர்களில் மத்திய தர வர்க்கத்தின் பங்கு ஒரு சதவீதமே. அதே நேரத்தில் சிதம்பரனார் மாவட்டத்தில் 22% பேர் மத்திய தர வர்க்கத்திலிருந்து வருகின்றனர். மாவட்டந் தோறும் வர்க்க சேர்மானம் குறித்த சரியான ஆய்வும், விபரங்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் ஒரு புரட்சிகரமான கட்சியைக் கட்டுவதற்கு உடனடிக் கடமைகளாக ஆகின்றன.

372. தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர், பெண்கள் ஆகியோரைக் கட்சிக்குள் கொண்டு வருகிற பிரதான கடமை நம் முன்னால் உள்ளது. தாழ்த்தப்பட்டோரைக் கட்சிக்குள் கொண்டு வருவதில் கணிசமான முன்னேற்றம் உண்டு. நாகை - காயிதே மில்லத் மாவட்டம் தவிர, இதர மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டோரை கட்சியில் இணைப்பதில் விழுப்புரம் (50%), சிதம்பரனார் (37%), திருச்சி (31%), நீலகிரி (50%) என்று விபரங்கள் தெரிவிக்கின்றன. மாநிலத்தில் சராசரியாக 25%க்கு அதிகம் இருக்கும். எனினும், இதிலும் கவனம் செலுத்துவது என்பது மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் உள்ளது.

373. உதாரணத்திற்கு வ. ஆ. மாவட்டத்தில் கட்சியில் தாழ்த்தப்பட்டோர் வெறும் 9% மட்டுமே. கோவை போன்ற மாவட்டங்கள் இவ்வகையில் ஒரு முறிப்பை உண்டாக்க வேண்டிய அவசியம் உள்ளது. குறிப்பாக தலித் இயக்கங்கள் மேலோங்கி வரும் இச்சூழலில் நமது இக்கடமை எவ்வளவு முக்கியமாகிறது என்பதற்கு விளக்கம் தேவையில்லை.

374. பெண்களை கட்சி உறுப்பினராக சேர்ப்பதில் ஓரளவு முன்னேற்றம் உண்டு. கடந்த மாநாடு காலத்தில் மாநிலம் முழுவதும் உள்ள கிளைகளில் 2116 கட்சி உறுப்பினர்கள் இருந்தார்கள். இப்போது 3637 கட்சி உறுப்பினர்கள் உள்ளனர். பெண்களைக் கட்சி உறுப்பினர்களாக ஆக்குவதில் காமராஜர் மாவட்டம், கரூர் மாவட்டம் போன்றவை மாநில சராசரிக்கு மிகவும் பின்தங்கியிருப்பதைக் காண முடிகிறது.

கட்சியும் வெகுஜன ஸ்தாபனங்களும்

375. வெகுஜன ஸ்தாபனம் குறித்து கட்சியில் ஏற்படும் இருவகை திரிபுகளை சால்கியா பிளீனம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது. "பல கமிட்டிகள் மற்றும் தோழர்கள் வெகுஜன ஸ்தாபனங்களை கட்சியின் துணை உறுப்புகளாகக் கருதியும் அவற்றை ஜனநாயக பூர்வமாக நடத்த வேண்டியதில் கவனக் குறைவாகவும் இருக்கின்றனர். அதே சமயம் பாதகம் விளைவிக்கும் இன்னொரு போக்கும் இருந்து வருகிறது. வெகுஜன ஸ்தாபனங்களுக்கு தலைமை ஏற்கும் கட்சி உறுப்பினர்கள்

சிலர் கட்சிகளை ஒதுக்கிவிட்டு தன்னிச்சையான போக்கில் அவற்றை நடத்திச் செல்லவும் தலைப்படுகின்றனர்.

376. இந்த இரண்டு திரிபுகளும் முழுமையாக களையப்படுவதற்கு தொடர்ந்து போராட வேண்டிய தேவை இருப்பதை 14வது கட்சி மாநாடு வலியுறுத்துகிறது. நமது மாநிலத்திலும் இருவகைத் திரிபுகளும் உண்டு. எனினும் முதல் வகைத் திரிபு அதாவது "வெகுஜன ஸ்தாபனங்களை கட்சியின் உப அமைப்பாக "கருதி செயல்படும் போக்கு மேலோங்கியுள்ளது. இது இந்த வெகுஜன ஸ்தாபனங்களை நோக்கி பல்லாயிரக் கணக்கான பின்தங்கிய உணர்வுடைய மக்கள் ஈர்க்கப்படுவதை தடுக்கும்.

377. வெகுஜன ஸ்தாபனங்கள் தீர்மானிக்கும் போராட்டங்களை கட்சி தலையிட்டு தடுப்பது - வெகுஜன ஸ்தாபனங்களின் பெயரில் நிதி வசூல் செய்து கட்சிக்கென்று வரவு வைத்துக் கொள்வது, வெகுஜன ஸ்தாபன மேடைகளில் நேரடியாக கட்சி அரசியல் பேசுவது என்ற வகைகளில் இப்போக்கு நீடிக்கிறது. இவைகள் தொடர்ந்து கண்காணிப்புடன் இருந்து களையப்பட வேண்டிய பலவீனமாகும்.

நிதி வசூல்

378. மாநில கட்சியின் நிதி ஏற்பாடுகளை கவனிக்கும் பொறுப்பை தோழர்கள் என். வரதராஜன் (கன்வீனர்), பி.ஆர்.பரமேஸ்வரன், டி. லட்சுமணன் ஆகியோர் நிதிக் குழுவாக இருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

379. ஒவ்வொரு மாநிலக்குழு கூட்டத்திலும் மாநில மையத்தின் வரவு - செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்படுகின்றன.

380. மாநிலக்குழு வரவு - செலவு கணக்குகள் தணிக்கைக் குழுவால் தணிக்கை செய்யப்படுகின்றன.

381. கடந்த மூன்றாண்டுகளில் விசேஷ நிதி வசூலுக்காக மாநிலக்குழு சார்பில் அறைகூவல் விடப்பட்டன. அதன் விவரங்கள் பின்வருமாறு :

1.	கருப்பண்ணன் விபத்து நிதி	ரூ. 1,03,586.60
2.	கே. வைத்தியநாதன் சிகிச்சை நிதி	ரூ. 1,11,706.00
3.	பத்மினி வழக்கு நிதி	ரூ. 12,925.00
4.	பழனி-ராணிப்பேட்டை இடைத் தேர்தல் நிதி	ரூ. 20,000.00
5.	மைலாப்பூர், பெருந்துறை இடைத் தேர்தல் நிதி	ரூ. 2,84,144.50
6.	திருச்சி பேரணி விபத்து நிதி	ரூ. 1,24,838.40
7.	தீக்கதிர் 10 ஆண்டு சந்தா நிதி வசூல்	ரூ. 9,54,230.00
8.	வட்டியில்லா கடன் வசூல்	ரூ. 4,35,050.00
9.	14வது கட்சி காங்கிரஸ் நிதி வசூல்	ரூ. 16,69,433.50
10.	கியூபா உதவி நிதி	ரூ. 6,80,852.10
11.	மகாராஷ்டிரா பூகம்ப நிதி	ரூ. 3,27,199.70
12.	திரிபுரா தேர்தல் நிதி	ரூ. 2,86,813.25
13.	அகில இந்திய மாதர் மாநாடு நிதி	ரூ. 1,24,172.10
14.	தோழர் ஜி. ஆர். கியூபா பயண நிதி	ரூ. 59,305.00
	மொத்தம்	ரூ. 51,94,256.15

382. இப்படி சில அவசிய பணிகளுக்காக நிதி வசூல் செய்ய வேண்டியிருந்தது. நிதி கோட்டாவை மாவட்டக்குழுக்கள் ஓரளவு நிறைவேற்றியுள்ளன. இதில் மேலும் முன்னேற்றம் தேவைப்படுகிறது என்பதையும் குறிப்பட்டுச் சொல்ல வேண்டும்.

விபத்து நிதி

383. பவானி தோழர் கருப்பண்ணன், சென்னையில் நடந்த கட்சியின் அகில இந்திய மாநாட்டுப் பேரணிக்கு வந்திருந்து திரும்பிச் செல்லுகையில் விபத்து ஏற்பட்டு கால் துண்டிக்கப்பட்டதால் அவருக்கும், அவருடன் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ரூ.91,000 வரை உதவித் தொகையாக மாவட்டங்களில் வசூல் செய்து மாநிலக்குழு சார்பில் வழங்கப்பட்டது.

384. திருச்சி அரசியல் மாநாட்டுப் பேரணிக்கு வந்து கொள்ளிடம் ஆற்றில் விழுந்து இறந்து போன வட ஆற்காடு மாவட்டத்

தோழர்கள் சரவணன், நரசிம்மன் குடும்பத்திற்கும் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த முனியப்பனுக்கும் ரூ. 75,000 நிதி உதவி அளிக்கப்பட்டது.

385. தஞ்சையில் நடைபெற்ற இடதுசாரி கட்சிகளின் பேரணிக்கு வந்து விபத்தில் உயிரிழந்த திண்டுக்கல் தோழர் அழகர் குடும்பத்திற்கு ரூ. 32,138 நிதி உதவி அளிக்கப்பட்டது.

386. தோழர்களுக்கு இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டு பாதிக் கப்படுகிறபோது கட்சி அவர்களையும் பராமரிக்கும் என்ற நம்பிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

387. ஆனால் இதுபோன்ற விபத்து ஏற்பட்ட காலங்களில் அதன் அவசியத்தை உணர்ந்து நிதி உதவி செய்வதில் மெத்தனப் போக்கு காட்டுகிற மாவட்டக் குழுக்களும் உண்டு என்பதை கவலையோடு பார்க்க வேண்டியுள்ளது. உதாரணமாக தர்மபுரி மாவட்டத்துக்கு கருப்பணன் உதவி நிதியாக ரூ. 1000 நிர்ணயித்தபோது அக்கமிட்டி வெறும் ரூ. 50தான் வழங்கியுள்ளது.

388. திருச்சி விபத்து நிதியாக திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்திற்கு ரூ. 1,500 கோட்டா நிர்ணயித்தபோது அக் கமிட்டி வெறும் ரூ. 460 மட்டுமே வழங்கியுள்ளது. கரூர் மாவட் டக் குழுவிற்கு ரூ. 1500, கோட்டா நிர்ணயித்தபோது அக் கமிட்டி ரூ. 370 மட்டுமே வழங்கியுள்ளது. எதிர்காலத்தில் இப் படிப்பட்ட கவலை தரும் குறைபாடுகளை போக்கிட வேண் டும்.

389. பொதுவாக கட்சிக்கு நிதி வசூல் என்கிறபோது பொது மக்களும், வியாபாரிகளும் மனமுவந்து நிதி தருகிறார்கள். கட் சிக்கு மக்களிடம் மரியாதை வளர்ந்து வருகிறது என்பதற்கு இது ஓர் அடையாளமாகும்.

390. உதாரணமாக மாவட்ட மாநாடுகளுக்கு மக்களிடம் நிதி வசூல் செய்தபோது இந்த அனுபவம் தெளிவாகத் தெரிந்தது. மாவட்டக் குழுக்கள் ரூ. 70 ஆயிரம், 80 ஆயிரம் என வெகு சுலமாக வசூல் செய்து மாநாடுகளை சிறப்பாக நடத்தின.

391. ஏறக்குறைய மாவட்ட, வட்ட மாநாடுகளுக்காக தமிழகம் பூரா வும் கடந்த மூன்று மாத காலத்தில் ரூ. 1 கோடி வரை வசூலிக் கப்பட்டிருக்கும் என்று யூகிக்க முடிகிறது.

392. நிதி வசூலில் மாநில அளவில் குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதில் கணிசமான பகுதி தனிநபர் வசூல் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். வரும் காலத்தில் நமது கட்சிக்கு ஏற் பட்டுள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் நிதி வசூலுக்கு கூடுதலாக முயற்சிக்க வேண்டும்.

லெவி

393. மாவட்ட மாநாடுகளில் லெவி பற்றி வந்த விவாதத்தில் எந்த மாவட்டத்திலும் மத்திய குழு நிர்ணயித்துள்ள லெவியை வசூல் செல்வதாகத் தெரியவில்லை. மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த வர்களில் கூட மிகமிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர் களே மத்திய குழு நிர்ணயித்துள்ள விகிதாச்சாரத்தில் லெவி தருவதாகத் தெரிகிறது.

394. சில மாவட்டக் குழுக்களிலும், பெரும்பாலான இடைக் கமிட்டிகளிலும் லெவிக்கு ரசீது தருவதில்லை என்று குற்றம் சாட்டி மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் பேசி னார்கள். மாவட்டக் குழுக்களும், இடைக்கமிட்டிகளும் இப் படிப்பட்ட போக்கிற்கு முடிவு காண வேண்டும்.

395. மாதாமாதம் லெவி வசூல் செய்வது என்பது ஓரளவு மத்திய தர வர்க்கத்தினரிடம்தான் நடைபெறுகிறது. மற்றபடி மற்ற பகுதியினர் மூன்று மாதத்துக்கு ஒருமுறை -வருடத்திற்கு ஒரு முறை லெவிவசூல் செய்கின்ற பழக்கம்தான் உண்டு. விவ சாயிகளிடமும், விவசாயத் தொழிலாளர்களிடமும்தான் அறு வடைக் காலத்தில் லெவி வசூல் செய்ய அனுமதியே தவிர, மற்ற எல்லா பிரிவினரும் மாதாமாதம் லெவி செலுத்த வேண்டும் என்பதுதான் விதி. மாவட்டக் குழுக்கள் இதில் மேலும் கறாரான தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

396. ஏற்கெனவே சென்ற அகில இந்திய மாநாட்டில் குறிப் பிட்டுள்ளதுபோல லெவி கொடுப்பது என்பது பணப் பிரச்

சனை மட்டுமல்ல; தோழர்களின் அரசியல் உணர்வைக் காட்டு வதற்கு அது ஓர் அடையாளம். அது உணர்த்தப்படுவதைப் பொறுத்தே லெவி வரவில் முன்னேற்றம் காண முடியும்.

397. மாவட்டக் குழுக்களின் மாநாடு அறிக்கையில் மத்திய குழு வின் விகிதாச்சார அடிப்படையில் லெவி வசூல் செய்வது என்பதை ஒவ்வொரு வருடமும் உயர்த்தி வருவதாகக் கூறப் பட்டுள்ளது. அதுவும் மத்திய தர வர்க்கத்திடம்தான் இந்த முயற்சிகள் நடந்து வருகின்றன. மூன்று, நான்கு மாதம் தொடர்ந்து லெவி வசூல் செய்யாமல் விட்டுவிட்டு பிறகு மொத்தமாக வசூலிக்கிறபோது சில தோழர்கள் மொத்தமாக லெவி கொடுக்க முடியாமல் கடைசியில் கட்சியை விட்டே போகும் நிலையும் ஏற்படுகிறது.

398. சென்ற மூன்றாண்டுகளில் மாவட்டக் குழுக்கள் மாநில மையத்துக்கு தந்த லெவி ஈவுத் தொகை தனியாகத் தரப்பட் டுள்ளது. மொத்த லெவி வசூலில் 10% தொகையினை மாநில மையத்துக்கு செலுத்த வேண்டும் என்கிற முறையை ஒரு சில குழுக்கள்தான் நிறைவேற்றுகின்றன. மற்ற மாவட்டக் குழுக்கள் ஏதோ குத்து மதிப்பாக அவர்களால் முடிந்த தொகையை அனுப்பி வைக்கிறார்கள்.

முழுநேர ஊழியர்கள்

399. முழுநேர ஊழியர்களின் அலவன்ஸ் ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களைப் பராமரிப்பது கட்சி குழுக்க ளின் முதற் கடமையாகும்.

400. திருமணமான முழுநேர ஊழியர்களுக்கு மாத அலவன்ஸ் ரூ. **1400** எனவும், திருமணம் ஆகாத முழுநேர ஊழியர்களுக்கு ரூ. **1050** எனவும், குடும்பங்களைப் பராமரிக்க வேண்டிய முழு நேர ஊழியர்களுக்கு திருமணமாகாவிட்டாலும் ரூ. **1400** எனவும் கொடுக்கவேண்டும் என்று மாநிலக்குழு தீர்மா னித்தது. இந்த அலவன்ஸ் கூட மிகக் குறைவானதுதான்.

401. எனவே முழுநேர ஊழியர்களுக்கு உள்ள சிரமங்களைக் குறைக்க அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை,

பண்டிகையையொட்டி துணி அலவன்ஸ் என வருடத்திற்கு ஒருமுறை வழங்க வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

402. அலவன்ஸ் கொடுப்பதை மாவட்ட மையத்தில் ஒருமுகப் படுத்தி மாதாமாதம் முழுநேர ஊழியர்களுக்கு அலவன்ஸ் கிடைத்திடவும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

403. மேற்குறிப்பிட்ட முடிவுகள் எவ்வளவு தூரம் மாவட்டங் களில் அமுல்படுத்தப்படுகின்றன என பரிசீலனை செய்கிற போது மாநிலக்குழு முடிவுப்படி ஒரு சில மாவட்டக்குழுக்கள் தான் ரூ. 1400. ரூ. 1050 என அலவன்ஸ் தொகை வழங்கு கின்றன. சென்னை, கோவை, திருச்சி போன்ற குழுக்கள்தான் அப்படி வழங்குகின்றன.

404. இந்த குறைந்தபட்ச அலவன்சைக்கூட இரண்டு மாதங்கள் மூன்று மாதங்கள் தொடர்ந்து தராமல் சில மாவட்டக் குழுக்கள் சிரமப்படுகின்றன. தொடர்ந்து கட்சிப் பணிகள், இயக்கங்கள், போராட்டங்கள், கட்சி அலுவலகக் கட்டிட வேலைகள் என வந்து விடுவதால் செலவுகள் அதிகமாகிவிடுகின்றன. அத னால் அலவன்சை மாதாமாதம் ஒழுங்காக கொடுக்க முடியாத நிலை உருவாகிறது.

405. கட்சியின் மற்றப் பணிகளுக்கு செலவு செய்திட முனைப்புக் காட்டுவது போல முழுநேர ஊழியர்களின் அலவன்சுக்கு ஏற்பாடுகள் செய்திடவும், முன் எச்சரிக்கையுடனும், கவனத் துடனும் செயல்பட வேண்டும்.

406. நிதி வசூலுக்கு முன்கூட்டி திட்டமிடுவது, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வசூலை முடிப்பது, வெகுஜன வசூலுக்கு ஏற்பாடு செய்வது போன்ற விடாப்பிடியான முயற்சிகளை மாவட்டக் குழுக்கள் எடுப்பதோடு, இந்த உணர்வின் அடிப்படையில் கட்சி அணிகளை ஊக்குவிப்பது என பல்வேறு முயற்சிகளை செய்ய வேண்டியுள்ளது. இப்படி விடாப்பிடியான கவனம் செலுத்துகிற குழுக்களுக்கு சில சிரமங்கள் இடையில் வந்தா லும் சமாளித்துக் கொள்கின்றன. அதைப்போல் லெவியை

மாதாமாதம் வசூல் செய்வதற்கான உத்தரவாதத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

407. பொதுவாக முழுநேர ஊழியர்களுக்கு ஏற்படும் நிதி சம்பந்தமான சிரமங்களைக் குறைத்திட, அலவன்ஸ் சம்பந்தமான நியாயப்பூர்வமான வழிகளை வகுத்திட மேலும் ஆழமான பரிசீலனை தேவைப்படுகிறது. மாநிலக்குழுவில் இது சம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு விவாதித்து மாவட்டக் குழுக்களுக்கு முழுநேர ஊழியர்கள் சம்பந்தமாக விபரம் கேட்டு பட்டியல் அனுப்பியுள்ளது. இந்தப் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டு முழுமையாக மாநில மையத்துக்கு வந்து சேரவில்லை.

408. மாவட்டக் குழுக்களிலிருந்து முழுமையாக விபரங்கள் வந்தவுடன் முழுநேர ஊழியர்கள் அலவன்ஸ் கொள்கையை உருவாக்க வேண்டும்.

409. பல்கி வரும் வேலைகளுக்கு ஈடுகொடுக்க பல மாவட்டக் குழுக்களுக்கு இன்னும்முழு நேர ஊழியர்கள் தேவைப்படுகிறது. நிதி நெருக்கடியின் காரணத்தால் முழுநேர ஊழியர்களை நியமிக்க சில குழுக்களுக்கு தயக்கம் இருந்தாலும் முழுநேர ஊழியர்களாக வருவதில் கட்சித் தோழர்களிடம் தயக்கமும் உள்ளது. குறிப்பாக, தொழிலாளி வர்க்கத்திலிருந்தோ, மத்திய தர வர்க்கத்திலிருந்தோ முழு நேர ஊழியர்களாக வருவது என்பது குறைந்துவிட்டது. இது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். நிர்ணயிக்கும் குறைந்த 'அலவன்ஸ்' என்பது ஒரு காரணமே. எனினும், தியாகம் செய்து கட்சிக்கு தனது சக்தி அனைத்தையும் செலவிடுவது என்ற குணம் குறைந்து வருவதும் பிரதான காரணமாகும். இவ்வகையில் தொடர்ச்சியான விடாப்பிடியான போராட்டங்கள் மூலம் தகுதியுடைய ஊழியர்களை முழுநேரப் பணிக்கு பெறுவது நமது முக்கிய கடமைகளில் ஒன்றாகிறது. இருபக்கமும் உள்ள தயக்கம் உடைக்கப்பட வேண்டும்.

410. ஒரு வெகுஜன புரட்சிக் கட்சியைக் கட்ட அஸ்திவாரமான ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்ட, வர்க்கப் போராட்ட

அனுபவம் பெற்ற ஊழியர்களாக இல்லாமல் கட்சியை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமில்லை. இவ்வகையில் இன்று நாம் புதிதாக முழு நேர ஊழியர்கள் இணைக்கப்படுவது மட்டுமின்றி இருக்கின்ற முழு நேர ஊழியர்களின் பணிகளிலும் பெரும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது. தேவையற்ற தனி நபர் பஞ்சாயத்துக்களில் முழு நேர ஊழியர்கள் சிலரின் காலம் விரையமாவதை மாவட்ட மாநாடுகளின் விவாதங்கள் எடுத்துக்காட்டின. பெரும்பாலான முழு நேர ஊழியர்கள் மிகுந்த சிரமத்துடன் கடும் உழைப்பில் ஈடுபட்டிருப்பினும், குறிப்பிட்ட சில முழு நேர ஊழியர்கள் அவர்கள் செய்ய வேண்டிய அளவு பணிகள் செய்யாகதும் உண்டு. இதுதவிர, உடல் நலம், வயது ஆகிய காரணங்களாலும், திறமையின்மை காரணமாகவும் முழு நேர ஊழியர்களாக செயல்பட முடியாத நிலையில் உள்ள தோழர்களும் ஒரு சிலர் உண்டு. கட்சி வளர்ச்சியோடு இணைந்து முழு நேர ஊழியர்களும் அரசியல் தத்துவார்த்த ரீதியில் வளர உதவிட வேண்டியுள்ளது.

கிளர்ச்சிப் பிரச்சாரம்

411. தமிழக மக்களிடம் நமது நிலைபாட்டை எடுத்துச் செல்வதில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். கட்சியின் அறிக்கைகள் பத்திரிகைகளில் பெரும்பாலும் பிரசுரிக்கப்படுகின்றன. ஓரளவு வானொலி, தொலைக்காட்சியிலும் நம் செய்திகள் சொல்லப்படுகின்றன. நம் கருத்துக்களை பத்திரிகைகள் மூலம் கொண்டு செல்வதில் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

412. மாவட்டங்களிலும், மாவட்டக்குழுக்கள் நடத்தும் இயக்கங்கள், அல்லது ஸ்தல பிரச்சனை மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி அவ்வப்போது பத்திரிகைகளுக்கு செய்திகள் தருவதும், அவை பெரும்பாலும் சிறப்பான முறையில் வெளியாவதும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

413. கட்சியில் பேச்சாளர்களும் அதிக எண்ணிக்கையில் உருவாகியுள்ளனர். மக்களிடம் எளிமையாக கருத்துக்களை எடுத்துச் சொல்வதிலும், புரியும்படி சொல்வதிலும் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பெண் பேச்சாளர்களும் உருவாகியுள்ளனர்.

414. பட்டிமன்றம், கருத்தரங்கம், வழக்காடு மன்றம் போன்ற நிகழ்ச்சிகளோடு 'கலை இரவு' என்ற பெயரில் பல்லாயிரக் கணக்கான மக்களைத் திரட்டி கருத்துக்களை வழங்குகிறார்கள். விடியவிடிய மக்கள் காத்திருந்து கலை நிகழ்ச்சிகளை ரசிக்கி றார்கள். கலை நிகழ்ச்சிகளுக்காக மக்களிடம் பல ஆயிரம் ரூபாய் சுலபமாக வசூல் செய்ய முடிகிறது. இடதுசாரி கருத் துக்களை மக்களிடம் எடுத்துச் செல்ல இது ஒரு சிறப்பான வழி யாகும். இதை மேலும் நாம் வளர்த்தெடுக்க வேண்டும். அண்மையில் கட்சிக்கு திறமையான ஓவியர்கள் வந்துள் ளார்கள், அவர்கள் பெருமளவிற்கு விளம்பரத்திற்கு பயன்படு கிறார்கள்.

415. மாவட்டங்களில் 30க்கும் மேலான கலைக்குழுக்கள் இயங்கி வருகின்றன. இவை அண்டை மாவட்டங்களிலும் நிகழ்ச்சி களை நடத்துகின்றன. ஒரு சில மாநிலம் முழுவதும் சென்று நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. இவர்களை முழுமையாக நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்துவது, தெருமுனைப் பிரச்சா ரத்தை தொடர்ந்து கொண்டு செல்வது, பொதுக்கூட்டங் களுக்குத் திட்டமிட்டு பொதுமக்களைத் திரட்டுவது போன்ற வழிகளில் நமது பிரச்சாரத்தை எடுத்துச் செல்ல வேண்டும்.

பிரசுரங்கள்

416. கடந்த 3 ஆண்டுகளில் அவ்வப்போது எழுந்துள்ள அரசியல் முக்கியத்துவத்தைக் கருதி பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. மத்திய குழு தீர்மானங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு சிறு பிர சுரங்களாக வெளியிடப்பட்டன. காவேரி நதி நீர்ப் பிரச் சனை, மொழிப் பிரச்சனை எழுந்தபோது கட்சி சார்பில் நம் நிலையை விளக்கி பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. காவிரி நீர்ப் பிரச்சனை பற்றி குகன் எழுதிய பிரசுரத்தின் தமிழாக்கம் சிறுபிரசுரமாக வெளியிடப்பட்டது. அதிமுக அரசின் கொள் கைகளை விமர்சித்தும், அதன் மக்கள் விரோத நடவடிக் கைகளை எடுத்துக் கூறிய 2 பிரசுரங்களும் டங்கல் திட்டத்தை அம்பலப் படுத்தியும் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

417. திருச்சி அரசியல் மாநாட்டினையொட்டி 'மதவெறியை எதிர்க்கும் மனித நேயக் குரல்கள்' என்ற தலைப்பில் கட்சிக்கு

அப்பாற்பட்டவர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து ஒரு பிரசுரம் வெளியிட்டோம். இவை பொதுமக்களிடமும் மற்ற அரசியல் கட்சிகளிடமும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. இப்போது திமுக தலைவர் கருணாநிதிக்கும், நம் கட்சிக்கும் இடையே நடந்த கொள்கைப் போராட்ட கட்டுரைகளை இரண்டு பகுதிகளாக சிறு பிரசுரங்களாக கொண்டுவந்தோம்.

418. மத்தியக்குழுவின் கட்சிக் கல்விப் பாடக் குறிப்பு புத்த கங்களை தமிழில் மொழி பெயர்த்து கட்சி அணிகள் மத்தியில் விற்பனை செய்துள்ளோம்.

419. கட்சிக் கடிதம்

இதுவரை 10 கடிதங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இது போதுமானதல்ல. இந்த கடிதங்களும் கிளைகளில் படித்து விவாதிக்கப்படுவதற்கு போதிய கவனம் செலுத்தப் படவில்லை. ஒரு சில கிளைகளில்தான் இவை விவாதிக்கப் பட்டுள்ளன.

420. வருங்காலத்தில் கட்சி அணிகளுக்கான கட்சிக்கல்வி அளிக்க த்தக்க வகையில் கடிதங்களை வெளியிட வேண்டி யுள்ளது. அவ்வப்போதுள்ள அரசியல் நிலைகளையும், நாம் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகளையும் அணிக ளுக்கு உடனுக்குடன் கொண்டு செல்லவும் நாம் நடத்தும் இயக்கங்களைப் பரிசீலனை செய்து, நமக்கு கிடைத்துள்ள படிப்பினையை கட்சி அணிகளுக்கு கொண்டு செல்லவும், குறிப்பிட்ட சில மாவட்டங்களில் இயக்கங்கள் சக்தியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள், வழிமுறைகள், அதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் போன்றவற்றைத் தாங்கி கட்சிக் கடிதங்களைக் கொண்டு வருவது அவசியமாகும். குறைந்த பட்சம் 2 மாதங்களுக்கு 1 கட்சிக் கடிதம் கொண்டு வருவதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

கட்சிக் கல்வி

421. நடந்து முடிந்த இடைக்கமிட்டி மாநாடுகளிலும், மாவட்ட மாநாடுகளிலும் விவாதம் நடத்திய தோழர்கள் பலர் கட்சி

அணிகளுக்குத் தொடர்ந்து கட்சிக் கல்வி போதிக்க வேண்டும் என வலுவாக வற்புறுத்தினார்கள்.

422. மாநிலச் செயற்குழு திட்டமிட்டு திருச்சியில் அரசியல் வகுப்பு எடுப்பதற்கான ஆசிரியர்களை உருவாக்கும் பயிற்சி பட்டறை நடத்தியது. மாவட்டங்களிலிருந்து தோழர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டார்கள். அப்படிப் பயிற்சிப் பெற்றவர்களை அந்தந்த மாவட்டக்குழுக்கள் ஆங்காங்கே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் மாநிலச் செயற்குழு சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

423. வகுப்பு எடுப்பவர்களுக்கு வசதியாக இருக்க, பாடக் குறிப்பு புத்தகமும் மாநிலச் செயற்குழுவால் வெளியிடப்பட்டது. இந்தப் பாடக் குறிப்பின் அடிப்படையில் மாநிலச் செயற்குழு மாவட்ட அளவிலான வகுப்புக்களை நடத்தி முடித்து - அதேபோல் வட்ட அளவில் உள்ள கட்சித் தோழர்களுக்கு இந்தப் பாடக் குறிப்பின் அடிப்படையில் திருச்சி பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட தோழர்களைப் பயன்படுத்தி வகுப்புகள் நடத்த வேண்டும் என்று சொல்லியிருந்தோம்.

424. இதனடிப்படையில் திருச்சியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை பயன்படுத்தி வகுப்புகள் நடத்திய மாவட்டங்கள் ஒரு சில மாவட்டங்கள்தான் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இதை ஒரு கட்டாயப் பணியாக மாவட்டக்குழுக்கள் செய்ய முடியவில்லை.

425. மேலும் 14வது அகில இந்திய மாநாடு முடிந்த பிறகு, கட்சியின் தத்துவார்த்த நிலைபாடு, (2) கட்சி ஸ்தாபன கடமைகள், (3) அரசியல் பொருளாதாரம் ,என்னும் 3 - தலைப்புகளில் கிளைச்செயலாளர்கள், கட்சி உறுப்பினர்கள், பரீட்சார்த்த உறுப்பினர்கள் அனைவரையும் கொண்ட வகுப்புகளை மாவட்டக் குழுக்கள் 3 - நாட்கள் நடத்த வேண்டும் என்றும் கேட்டிருந்தோம். இந்த வகுப்புகளை 1992 ஜூன் மாதத்தில் துவக்கி நடத்த வேண்டும் என்பதும் முடிவு.

426. இந்த வகுப்புகளை பல மாவட்டக் குழுக்கள் திட்டமிட்டு நடத்தின. ஆனால் வருகை என்பது சராசரி 50%-யைத் தாண்ட

வில்லை. இப்படிப்பட்ட, இதுபோன்ற முக்கியமான வகுப்பு களுக்கு கட்சி அணிகள் பெரும்பாலும் கலந்துகொள்ள முன் ஏற்பாடுகளை மாவட்டக் குழுக்களும், இடைக்கமிட்டிகளும் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

427. மத்திய பள்ளியில் எடுத்த வகுப்புகளின் குறிப்புகளை தமி ழில் மொழிபெயர்த்து புத்தகங்களாக வெளியிட்டதோடு, தமிழகத்திலும், இக்குறிப்புக்கள் மீது வகுப்புகள் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை, மதுரை, கோவை என மூன்று மையங்களாகப் பிரித்து வகுப்புகள் நடத்தப்பட்டன.

★ இந்திய உலக பொருளாதரம்

★ இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கை

★ தேச ஒற்றுமைக்கான பிரச்சனைகள்

★ கம்யூனிஸ்ட் கட்சி வரலாறு

428. மேலும் மாநில அளவில் இயங்கும் வர்க்க, வெகுஜன அரங் கங்களின் ஃபிராக்ஷன் உறுப்பினர்களுக்கு இந்த வகுப்புக்கள் மதுரையில் நடத்தப்பட்டன. ஒருசில அரங்கத்தின் மாவட்ட அளவில் இயங்கும் ஃபிராக்ஷன் உறுப்பினர்களுக்கும் அடுத்து இந்த வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

429. தனி அரங்கங்களுக்கு, மாநிலச் செயற்குழுவின் ஒப்புத லோடு மாநில அளவிலான வகுப்புக்கள் நடத்தப்பட்டன. எழுத்தாளர் அரங்கில் உள்ள முன்னணித் தோழர்களுக்கு திருச்சியில் இரண்டு நாட்கள் வகுப்புக்கள் நடத்தப்பட்டது.

430. மாநில அளவில் மாணவர் அரங்கில் பணிபுரியும் தோழர் களுக்கு சென்னையில் 3 நாட்கள் வகுப்புக்கள் நடத்தப் பட்டன. அவ்வாறே குற்றாலத்தில் 4 நாட்கள் மாணவர்களுக்கு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

431. விவசாய அரங்கில் பணிபுரியும் தோழர்களுக்கு மாநிலம் முழுவதும் இருந்து முன்னணித் தோழர்களை வரவழைத்து மகாபலிபுரத்தில் 3 நாட்கள் வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

432. தேவையைக் கணக்கெடுக்கிறபோது இவை போதாது. மாநில மையத்திற்கு இந்த விஷயத்தில் மேலும் கவனம் தேவைப்படுகிறது. கட்சிக் கல்விக்கென அமைக்கப்பட்ட குழுவை தொடர்ந்து செயல்படுத்துவதில் மாநிலச் செயற் குழுவுக்கு ஏற்பட்ட பலவீனமும் தொய்வுக்கு காரணமாகும்.

மூன்றாண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றம்

433. கடந்த மூன்று ஆண்டுகளில் நமது கட்சி கடைப்பிடித்த அரசியல் நடைமுறை கொள்கைகளினாலும், மக்கள் பிரச் சனைகளின் மீது நடத்திய இயக்கங்களினாலும் அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் மக்கள் மத்தியில் நமது கட்சி யின் மரியாதை உயர்ந்துள்ளது.

434. மாநிலத்தில் மாநிலக்குழு அவ்வப்பொழுது உருவாக்கிய அரசியல் அணுகுமுறை மக்கள் பிரச்சனைகளில் மாநில அள விலும் மாவட்ட அளவிலும் நமது கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகள் நடத்திய பல இயக்கங்கள் பரவலான மக்களின் ஆதரவையும் வரவேற்பையும் பெற்றது. முதலாளித்துவ பத்தி ரிகைகளே கூட நமது இயக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அளவிற்கு நமது இயக்கத்தின் வீச்சு இருந் துள்ளது.

435. தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழி லாளர்கள், வாலிபர்கள், மாதர்கள், மாணவர்கள் போன்ற அனைத்துப்பகுதி மக்களுக்காகவும், மனித உரிமை, பெண்கள் உரிமைகளுக்காகவும் நாம் நடத்திய இயக்கங்கள் கணக்கில் அடங்கா. மக்கள் நலனைக்காக்க நமது இயக்கத் தோழர்கள் தடியடி, சிறை, உயிர்த்தியாகம் உட்பட பல தியாகத்தை செய்தி ருக்கிறார்கள். இப்படிப்பட்ட இயக்கங்களினாலும் மாநிலத்தில் நமது கட்சியின் அரசியல் மரியாதை அதிகரித்துள்ளது.

436. கடந்த மூன்றாண்டுகளில் நமது கட்சி உறுப்பினர்கள் எண் ணிக்கை 29% உயர்ந்துள்ளது. வெகுஜன அரங்க உறுப்பி னர்கள் எண்ணிக்கையிலும் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள் ளது. கடந்த மாநாட்டின்போது 8,61,309 ஆக இருந்த வெகு ஜன அரங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை 12,55,757 ஆக

உயர்ந்துள்ளது. நமது தோழர்கள் தலைமையில் மத்தியதர வர்க்க, வெகுஜன அமைப்புகளில் உள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கையை இப்பட்டியலில் சேர்க்கவில்லை.

437. சர்வதேச ரீதியில் பல நாடுகளில் கம்யூனிச இயக்கத்தில் பின்னடைவு ஏற்பட்டபோதிலும் நமது மத்தியக்குழு காட்டிய வழியின் அடிப்படையில் தமிழகத்தில் செங்கொடியை உயர்த்திப் பிடிப்பதில் நமது கட்சி ஒன்றுபட்டு நின்றது.

438. மார்க்சிய - லெனினிய கொள்கை வழி நின்று செயலாற்றுவதில் தமிழகத்தில் நமது கட்சி உறுதியாக நின்றது.

439. முதலாளித்துவ கட்சிகளுக்குள் பிளவு, அடிதடி, கொலை, பணத்தை சுருட்டுவதில் மோதல் - மொத்தத்தில் இக்கட்சிகள் சீரழிந்த கலாச்சாரத்தில் சிக்கியுள்ளபோது, நமது கட்சி உருக்கு போன்ற ஒற்றுமையாகச் செயல்பட்டு வருகிறது.

440. அரசியல் என்றாலே சாக்கடை என்று மக்கள் அருவருப்பாக பார்க்கக்கூடிய இன்றைய சூழலில் மக்கள் நலனே எங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்று தடியடி, சிறை, உயிர்த்தியாகம் செய்யத் தயாராக உள்ள பல்லாயிரக்கணக்கான ஊழியர்களைக் கொண்டு செயல்படுகிறது நமது கட்சி.

441. முதலாளித்துவ கட்சிகள் ஆட்சியைப் பிடிக்க சந்தர்ப்பவாத கொள்கை என்ற சகதியில் இறங்கிய போதும் தேச ஒற்றுமை காக்க, வகுப்பு ஒற்றுமையைப் பாதுகாக்க, ஏகாதிபத்திய எதிர்ப்பு குரலெழுப்ப தமிழகத்தில் நமது கட்சிதான் அயராது பாடுபட்டு வருகிறது.

442. தமிழகத்தில் காவல் நிலையங்கள் மனித உரிமைகளை பறிக்கும் கூடங்களாக மாறுகின்றபோது மனித உரிமைகளுக்காக நாம் தான் முன்னின்று குரலெழுப்புகிறோம்.

443. கடந்த மூன்று ஆண்டுகளில் நாம் ஆற்றிய பணி, செய்த தியாகம் இவைகளினால் நமது கட்சி தமிழகத்தில் புறக்கணிக்க முடியாத சக்தியாக திகழ்ந்து வருகிறது.

444. தமிழகத்தில் நமது கட்சி மேலும் வலுவான சக்தியாக மலர இம்மாநாட்டில் வழிவகுப்போம்.

445. கடந்த 3 ஆண்டுகளில் ஓரளவு முன்னேற்றத்தை பெற்றுள்ளோம். இருப்பினும், 6 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழகத்தில் நாம் செல்ல வேண்டியது நீண்ட பயணம் என்பதை மனதில் வைத்து கீழ்வரும் எதிர்கால கடமைகளை அமுலாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

446. எதிர்கால கடமைகள்

- இடைக்கமிட்டிகளையும், கிளைகளையும் செயல்படும் அமைப்புகளாக உருவாக்குவது;
- வர்க்க - வெகுஜன அமைப்புகளின் மாவட்ட மையங்களைப் பலப்படுத்துவது;
- மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கட்சிக் கல்விக்கான உத்தரவாதமான ஏற்பாடுகளைச் செய்வது;
- நமது கட்சியின் ஏடுகளான தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட், பீப்பிள்ஸ் டெமாக்ரசி ஆகியவற்றின் விற்பனையை அதிகப் படுத்துவது;
- பெண்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை எதிர்த்து கட்சி முன்கை எடுத்து போராடுவது;
- தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையோர், பெண்கள் ஆகியோரை கட்சிக்குள் அதிக அளவில் கொண்டு வருவது;
- கட்சிக் கல்விக்காக நிரந்தரப்பள்ளி ஏற்பாடு செய்வது
- முதலாளித்துவ தத்துவத்திற்கு எதிராகவும், திராவிட கட்சிகளின் இனவாத திருகலுக்கு எதிராகவும், நமது வலுவான கொள்கைப் பிரச்சாரத்தை நடத்துவது;
- கட்சிக்குள் எழும் அந்நிய வர்க்க கருத்துக்களை களைந்தெறிய தொடர்ந்து நடவடிக்கை எடுப்பது;
- பிரிவினை, வகுப்புவாத, ஜாதிய சக்திகளை முறியடிக்க அனைத்து ஜனநாயக மதச்சார்பற்ற சக்திகளையும் ஒன்று திரட்டுவது;
- காட் ஒப்பந்த எதிர்ப்பு இயக்கத்தை வலுவாக நடத்துவது;
- தொடர்ந்து சுயேட்சையான இயக்கங்களுக்கு திட்டமிடுவது;

- ஸ்தல பிரச்சனைகளில் கவனம் செலுத்தி மக்களைத் திரட்டி இயக்கங்கள் நடத்துவது;
- கிராமப்புறங்களில் ஸ்தாபனத்தை விரிவுபடுத்த தொடர் முயற்சி எடுப்பது;
- கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்த தொடர்ச்சியான முயற்சி வேண்டும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 15வது மாநில மாநாட்டில்

தோழர் என்.சங்கரய்யா வழங்கிய தொகுப்புரை

79 தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். பொதுவாக மிக நல்ல முறையில் விவாதம்இருந்தது. எட்டே முக்கால் மணி நேரம் விவாதம், எழுத்து மூலமாகவும் கருத்துக்களை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். பிரதிநிதிகள் வருகை மிக நல்ல முறையில் அமைந்துள்ளது. உடல் நலமின்றி இருக்கும் இரண்டு மாநிலக்குழு உறுப்பினர்கள் தவிர அனைவரும் வந்துள்ளனர். பெண் தோழர்கள் விவாதத்தில் அனைத்து அம்சங்கள் பற்றியும் பேசி உள்ளனர் என்பது சிறப்பானது. முக்கியமான அரசியல் - ஸ்தாபன விஷயங்கள் பற்றி மட்டும் தொகுப்புரை வழங்குகிறேன். மற்றவை பற்றி மாநில செயற்குழுவும், மாநிலக்குழுவும் பரிசீலித்து முடிவு செய்யும்.

கூட்டு இயக்கம் பற்றி - பழனி, ராணிப்பேட்டையில் திமுக - காங்கிரஸ் உறவு பற்றி சிபிஐ, ஜனதா தளம் ஆகிய கட்சிகளுடன் கலந்து கொண்டு அறிவித்திருக்க வேண்டும் என்ற கருத்து வந்தது. திமுக-வுடன் பேசினோம். முன்னேற்றம் இல்லை. எனவே, வெளியிட்டோம். முடிவுகள் வந்த பிறகு அறிவித்திருந்தால் அதற்கு நோக்கம் கற்பித்திருப்பார்கள். திமுகவின் சந்தர்ப்ப வாதத்தை முழுமையாகப் பார்க்க வேண்டும். 356ஐ பயன்படுத்துவதையும் ஆதரித்தார்கள். இட ஒதுக்கீடு பிரச்சனையில் காங்கிரசை அழைத்தார்கள். அதிமுக - காங்கிரஸ் உறவு முறியும் நிலையில், காங்கிரசுடன் சேர திமுக முனைந்தது. ஆந்திரா, கர்நாடகா தேர்தல் முடிவுகளுக்கு பிறகு இரு பக்கமும் (தேசிய முன்னணி - காங்கிரஸ்) திமுக கதவைத் திறந்து வைத்துள்ளனர். திமுக ஊசலாடுகிறது. திமுகவை பின்பற்றும் லட்சக்கணக்கான மக்கள் நமது நிலையைப் புரிந்து கொள்ளவே கூட்டு இயக்கத்துக்கு அழைக்கிறோம். இது ஒரு அரசியல் நடைமுறை வழியாகும்.

சிபிஐயுடன் ஒற்றுமைக்காக தொடர்ந்து போராடுகிறோம். தஞ்சைப் பேரணி, மத்திய அரசின் கொள்கைக்கு எதிரான மறியல் இயக்கம் உதாரணங்களாகும். ஒருங்கிணைப்புக் குழு நல்ல ஏற்பாடு. ஆனால் திமுக - காங்கிரஸ் உறவு பற்றி நாம் அறிக்கை விட்டதிலிருந்தே, நமக்கும் - சிபிஐக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்து வருகிறது.

கர்நாடக - ஆந்திர தேர்தல்களில் காங்கிரசுக்கு வெளிப்படையாக ஆதரவளித்த திருநாவுக்கரசுடன், திமுக கூட்டு வைத்த போதும், இட ஒதுக்கீட்டில் திமுக வாழப்பாடி ஆதரவைக் கோரிய போதும், சிபிஐ ஆட்சேபிக்கவில்லை. சிபிஐ நமக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் காங்கிரஸ் பற்றி ஒரு வார்த்தைகூட இல்லை. திமுக நிலையுடன் தற்சமயம் அவர்கள் இணைந்து நிற்கின்றனர். சிபிஐ அணிகள் மத்தியில் நமது நிலையை விளக்கிக் கூற வேண்டும். மத்திய அரசை நம்மோடு சேர்ந்து எதிர்த்து போராடியவர்கள் தங்கள் தலைமையின் தவறை உணர வைக்க வேண்டும்.

மதிமுக, மத்திய - மாநில அரசுகளை எதிர்க்கிறது. இடதுசாரிகளுடன் கூட்டு இயக்கம் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளது. திமுக, சிபிஐ, ஜனதா தளம் ஆகியவற்றைத் தொடர்ந்து அழைப்போம். கூட்டு இயக்கத்தில் கொண்டுவர முயற்சிப்போம். மதிமுக ஒரு பிரதேச கட்சி. இதில் நமக்கு பிரமை இல்லை. இனவாத திருகல் - மதிமுகவிடமும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதை நாம் அறிவோம். சுயநிர்ணய உரிமை, பிராமண எதிர்ப்பு குறித்துதிரு. வை.கோ. பேச்சை ஆட்சேபித்து நமது நிலையை தெளிவுபடுத்தியுள்ளோம். காவிரி, மொழி, இட ஒதுக்கீடு ஆகியவற்றில் திமுக, அதிமுக, மதிமுக கருத்து ஒற்றுமை இருக்கும். கூட்டு இயக்கத்தில் ஆர்வமற்ற போக்கும், அதேபோல் வால்பிடிக்கும் போக்கும் இந்த இரண்டு திரிபுகள் பற்றியும் நமக்கு கவனம் தேவை. மத்திய அரசின் கொள்கைகளையும் எதிர்க்க வேண்டிய அவசியத்தை மதிமுக அணிகள் மத்தியில் மேலும் கொண்டு செல்ல வாய்ப்

புள்ளது. மதிமுகவுடன் பிரச்சனை அடிப்படையில் கூட்டு இயக்கம் தொடருவோம்.

கட்சியின் சுயேட்சையான இயக்கமும் பலமாக நடைபெறும். சிபிஐ கட்சியைக் கூட்டு இயக்கத்தில் கொண்டுவர தொடர்ந்து முயற்சிப்போம்.

செங்குத்தான பிளவு என்றால் சரிபாதி என்பது அல்ல, மேலிருந்து கீழ்வரை பிளவு. எனவே, அதில் முரண்பாடு இல்லை.

சிபிஐ பிரச்சனை சிக்கலானதுதான். அவர்களது ஆங்கில பத்திரிகையான "நியூ ஏஜில்" டி. ஞானய்யா நமது நிலைகளை எதிர்த்து விரிவான கட்டுரை எழுதியுள்ளார். அவர்களது அகில இந்திய தலைமையும், தமிழ்நாடு தலைமையும் இதில் ஒன்றாகவே உள்ளது. ஆயினும், நாகை மாவட்ட கட்சி மாநாட்டின்போது சிபிஐ நம் மாநாட்டை வாழ்த்தி தட்டி வைத்தது. அதற்கு நாமும் வாழ்த்தி தீர்மானம் போட்டோம்.

ஊழல் செய்கிற அதிமுக மீது நடவடிக்கை ஏன் இல்லை என்பதற்காக மட்டுமே காங்கிரசை திமுக எதிர்க்கிறது. வேறு பிரச்சனை பற்றி இல்லை.

நம் கிளர்ச்சி - பிரச்சாரம் பயனுள்ளதாக இருக்க, நாம் தனிப்பட்ட தலைவர்களை தாக்கிப் பேசக்கூடாது. கொள்கைகளை விமர்சிக்க வேண்டும்; அம்பலப்படுத்த வேண்டும். நம்முடைய மாற்றுக் கொள்கைகளை வற்புறுத்த வேண்டும்.

பா. ம. க.

ஸ்தல மட்டத்தில் மக்கள் பிரச்சனைகளில் கூட்டு இயக்கம் நடத்தலாம். மாநில ரீதியில் இல்லை. அரசியல் தலைமைக்குழுவிற்கு விவரம் கூறியுள்ளோம். மே மாதத்திற்குள் அரசியல் தலைமைக்குழுவுக்கு இக்கட்சி பற்றி மேலும் விவரம் தந்து, அதன் வழிகாட்டலைப் பெற்று, பின்பு தமது நிலையை இறுதி செய்வோம்.

மயிலை தேர்தல்

ஒசூர் மாநிலக்குழு கூட்டத்தில் நாம் நிறைவேற்றிய தீர்மானம், திமுக - மதிமுகவுடன் அரசியல் உறவு வேண்டாமென முடிவு செய்தது. எனவே, நாம் மயிலையில் போட்டியட வேண்டி வந்தது. அரசியல் தலைமைக்குழு கூறிய யோசனை, முற்போக்கு சுயேச்சையை ஆதரிக்குமாறு கூறியது. ரங்கராஜன் (இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்), வைகை வழக்கறிஞர் ஆகியோரை யோசித்தோம். முடியவில்லை. எனவே, தோழர் எம். ஆர். அப்பனை நிறுத்தினோம். நமது கட்சி சார்பில் முன்பு பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதியில் தோழர் வகாப் போட்டியிட்டதும், நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் நாம் சுதந்திரா கட்சியை ஆதரிக்க மறுத்து தோழர் அலி அவர்களை கட்சி வேட்பாளராக நிறுத்தி போட்டியிட்டதும் சரியானது. மயிலை தொகுதியில் நம் நிலைபாடு சரியானதே.

மாநில அரசை எதிர்த்து சுயேச்சையான இயக்கம், 5 முனைகளிலிருந்து பிரச்சாரப் பயணம் சிறப்பாக அமைந்தது. பிரசுரம் 11/4 லட்சம் விற்றது. திருச்சி அரசியல் மாநாடு - இம்மாநாட்டில் அதிமுக அரசை கடுமையாக விமர்சித்தோம். இதுவும் நம் சுயேச்சையான இயக்கமே. போக்குவரத்து, மின் அரங்கப் போராட்டங்களும் சுயேச்சையாக அதிமுகவை எதிர்த்தவையே. போலீஸ் கொடுமைகளைக் கண்டித்து நாம் நடத்தியுள்ளவை சுயேச்சையான இயக்கங்களே. பத்மினி பிரச்சனை - கட்சி எடுத்த நடவடிக்கை - போலீஸ் அதிகாரிகள் தண்டனை பெறும் அளவுக்கு கொண்டு சென்றுள்ளது. வாச்சாத்தி - நாம் தானே இயக்கம் நடத்தினோம். சுதேசமித்திரன் தலையங்கம் எழுதியுள்ளது. தர்மபுரியில் வாச்சாத்தி பெண்களை பொதுக்கூட்டத்தில் பேச வைத்தோம். மலைவாழ் மக்களை சென்னையில் திரட்டினோம். பஞ்சாயத்து தேர்தல் கோரி வி. ச. சார்பில் 1000 மையங்களில் உண்ணாவிரதம், எஸ்.டி.எஸ். ஏன் நாகை மாவட்டத்தில் முகாமிட்டுள்ளார்? அதிமுகவை எதிர்த்து நடந்த நமது இயக்கத்தின் வீச்சே காரணம்.

மத்திய அரசை தலையிட வேண்டுமென கோரமாட்டோம். தமிழக மக்களிடம் செல்வோம். ராஜினாமா செய்யக் கோரும் நிலைமை இன்னும் பக்குவமடையவில்லை என மாநில செயற்குழு கருதுகிறது. தொடர்ந்து மாநில ரீதியான இயக்கங்களுக்கு திட்டமிடுவோம்.

ஊழலை எதிர்த்து போராடுவது என்பதை பொதுவாகச் சொன்னால் போதாது. குறிப்பிட்ட பிரச்சனையில் இயக்கமாக்க வேண்டும்.

வகுப்புவாதத்தை குறைத்து மதிப்பிடாதீர்கள். அவர்களை (பிஜேபி) கோயில் நிர்வாகங்களை கைப்பற்ற அனுமதிக்காதீர்கள். சிறுபான்மை பழமைவாதமும் ஆபத்தானது. முஸ்லிம் மக்களுடன் நமது தொடர்புகள் மேலும் அதிகமாக வேண்டும். சிறுபான்மை பழமைவாதத்தின் அபாயத்தை அவர்களிடம் விளக்க வேண்டும்.

தலித்-நமது இருமுனை அணுகுமுறை சரியானது. ஒருபக்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை நாம் கடுமையாக எதிர்த்துப் போராடி, அம்மக்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும். மறுபக்கத்தில், தாழ்த்தப்பட்ட மக்களையும், பொதுவான வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். இதை எதிர்க்கும் தலித் இயக்கத் தலைமையின் தவறான போக்கை அம்பலப்படுத்த வேண்டும்.

தோழர் தங்கய்யன் கொலையைக் கண்டித்து, தோழர் ஜி. வீரய்யன் உண்ணாவிதம் - மாநில செயற்குழு 3 நாட்கள் மட்டுமே நடத்த முடிவு செய்தது. அம்பலப்படுத்தவே இயக்கம். ஜெயலலிதா வருகை - போலீஸ் வாக்குறுதி என்பதல்ல. நமது முடிவே அடிப்படை. கைது செய்ய வைத்து, ஜெயலலிதா வந்துபோன பிறகு முடித்திருக்கலாம் என்று மாநில செயற்குழு கருதுகிறது. மதிமுக, சிபிஐ, ஜனதா தளம் கண்டனக் கூட்டத்திற்கு வந்தனர்.

பிரேமானந்தா பிரச்சனை - மூட நம்பிக்கைக்கு எதிராக கட்சி போராடுவது என்பது சரியானது. தோழர்களின் வாழ்க்கையி

லேயே அது பிரதிபலிக்க வேண்டும். நாகையில் லெனின் ஆண்டு என்றுதான் நம் தோழர்கள் அழைப்பிதழ்களில் குறிப்பிடுவார்கள். அறிவியல் இயக்கம் அற்புதமான நூல்களை வெளியிட்டுள்ளது. இவற்றை நாம் விற்பனை செய்ய வேண்டும். மேலும் பிரசுரங்கள் வரவேண்டும். மத உணர்வுகளை புண்படுத்தாமல் இப்பிரச் சாரத்தை நாம் செய்ய வேண்டும்.

இட ஒதுக்கீடு பிரச்சனை - கட்சியின் 15வது அகில இந்திய மாநாட்டின் நகல் தீர்மானத்தில் நமது நிலை தெளிவுபடுத் தப்பட்டுள்ளது. தமிழகத்தில் நீண்ட காலமாக 69% உள்ளது. இருப் பதைக் குறைக்கக்கூடாது என்று கட்சியின் மத்தியக் கமிட்டி கூறி யுள்ளது. மாநில அரசுகளுக்கு உரிமை கொடுத்தால் 95% இட ஒதுக் கீடு என்று கூட ஆக்கி விடுவார்கள். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு 50% என்பது பொதுவாக சரி.

கூடுதலாக ஏற்கெனவே உள்ள இடங்களில் நீடிக்கட்டும். பிற் படுத்தப்பட்டவர்களில் வசதியானவர்கள் என்ற பிரிவு, மண்டல் கமிஷனின் சிபாரிசு அல்ல. உச்சநீதிமன்ற தீர்ப்பில் உள்ளது. நல்ல அம்சம். நாம் அதை ஏற்கிறோம். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பிற் படுத்தப்பட்டவர் கிடைக்கவில்லையென்றால், வசதிபடைத்த பிற் படுத்தப்பட்டவர்களுக்கு அந்த ஒதுக்கீடு செல்லட்டும். முன்னாள் பீகார் முதல்வர் கர்பூரி தாகூர் இதே நிலைதான் கூறினார். முற் படுத்தப்பட்ட ஏழைகளுக்கும் இட ஒதுக்கீடு தேவை என்று கூறி னார். உச்சநீதிமன்றம் அதனை ஏற்கவில்லை. ஆனால் நாம் ஏற்கி றோம். வி. பி. சிங் ஏற்றார். இட ஒதுக்கீடு பிரச்சனையில் திராவிட இயக்கம் அனைத்தும் ஒரே நிலைதான். சிபிஐயும், அகில இந்திய ரீதியிலும் இதே நிலையை ஏற்கிறது. இத்தகைய பிரச்சனைகளில் மக்களை மோதவிடக் கூடாது. நிலைமையை அமைதியாக சமா ளிக்க வேண்டும். இன திருகல்வாதத்தை ஆதரிப்பவர்கள் இன வெறியைத் தூண்டுவார்கள். நாம் இதை அனுமதிக்க முடியாது. மொழிப் பிரச்சனையில் இந்தி ஆதிக்கம் என்பதற்கு பதில் தமிழ் வளர்ச்சி என்கிறோம். மாவட்ட அளவில் மொழி பிரச்சனையில் கருத்தரங்கம் நடத்துங்கள். தமிழிலேயே தரமான ஆரம்பப்பள்ளி,

பாலர் பள்ளிகளை நடத்தப் போராடுவோம். நீதித்துறை மற்றும் அரசுத் துறைகளில் தமிழ்மொழி ஆட்சி மொழியாக வேண்டும். 14.4.95 அன்று தமிழில் தந்திக்கு பாடுபட்ட தோழர் ஏ. நல்லசிவன் அவர்களுக்குப் பாராட்டு விழா மாவட்ட தலைநகரங்களில் நடத்த வேண்டும். கட்சியின் சார்பில் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இலவச மின்சாரம்

ஏழை, சிறு விவசாயிகளுக்கு மட்டும் இலவச மின்சாரம் என்பதே நமது நிலை. பெரும் நிலப்பிரபு இலவசமாக மின்சாரம் பெற்று, விற்பனை செய்கிறார். இதற்கு உடன்பட முடியாது. ஏழை, சிறு விவசாயிகளுக்கு சலுகைகள் செல்ல வேண்டும்.

இறால் பண்ணை

விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாகை மற்றும் வள்ளலாரில் இயக்கம் நடந்துள்ளது. வி. ச. , வி. தொ. ச. சார்பில் மாநில ரீதியில் கருத்தரங்கம் நடத்துவோம். இயக்கத்திற்கு திட்டமிடுவோம். அயல்நாட்டு கப்பல்கள் மீன் பிடிக்க அனுமதி - மீனவர்களை பாதித்து உள்ளது. இதையும் சேர்த்து எடுப்போம். மீனவர்களை மே.வங்கத்தில் விவசாயிகள் சங்கம்தான் திரட்டுகிறது. இங்கும் செய்வோம்.

தமிழகத்தில் தொழில், விவசாய வளர்ச்சிக்கான திட்டம் உருவாக்க வேண்டும். அடுத்து மாநில செயற்குழு, மாநிலக்குழு கூட்டத்தில் இதுபற்றி வந்துள்ள குறிப்பையும் பயன்படுத்தி, வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவோம். பின்னர் இயக்கத்தை நடத்துவோம்.

மத்திய அரசு இனி பொதுத்துறைக்கு நிதி ஒதுக்காது. மாநில அரசு முடிந்தால் செய்துகொள்ளலாம். இந்த மாற்றத்தை கருத்தில் கொள்ள வேணடும். சிறுதொழில் பாதுகாப்பு, வேலை வாய்ப்பு அடிப்படைகளாக இருக்கும்.

கள்ளச்சாராயம் - சட்டத்தின் மூலம் அழிக்க முடியாது. மாநிலம் தழுவிய இயக்கம் சாத்தியமில்லை. எங்கெங்கு நாம் வலுவாக

இருக்கிறோமோ அங்கு அனைத்துப் பகுதி மக்களையும் திரட்டி இதனால் ஏற்படும் கொடுமைகளுக்கு எதிராக இயக்கம் நடத்த வேண்டும்.

செல்வி ஜெயலலிதாவை, ஜோதிபாசு மாநில முதல்வர் என்ற அடிப்படையில் பார்த்தது சரி. மாநில முதலமைச்சர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பது இயல்பானது.

பாண்டிச்சேரி - தனி மாநிலக்குழு - இன்றைய நிலையில் தேவையில்லை. பாண்டிச்சேரியில் 1950 முதல் காங்கிரசா, கம்யூனிஸ்ட்டா என்று இருந்த நிலை. இயக்கத்தை மேலும் பலப்படுத்த வேண்டும். கட்சியையும், இடதுசாரி இயக்கத்தையும் மீண்டும் முன்னிலைக்கு கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

கட்சி ஸ்தாபனம்

ஜனநாயக உரிமை அவசியம். கட்சியில் தேர்தல் என்பது புதிதல்ல. தஞ்சை மாநில மாநாட்டில் தேர்தல் நடந்தது. மாவட்ட செயலாளர், மாவட்டக்குழு, மாவட்ட செயற்குழு பற்றி மேல் கமிட்டி யோசனை கூறாது என்பதுதான் புதிது. கட்சிக்கு விரோதமான போக்குகள் கூடாது. கோஷ்டி நடவடிக்கை கூடாது.

மாநில செயற்குழு உறுப்பினர்கள் பற்றிய தனிப்பட்ட விமர்சனங்களுக்கு அவர்கள் பதில் சொல்ல மாநாட்டில் வாய்ப்பில்லை. இத்தகைய பிரச்சனைகளை மாநாட்டில் கூறக்கூடாது. மாநில செயற்குழுவுக்கு எழுத்து மூலம் கொடுக்க வேண்டும். அதன்மீது மாநில செயற்குழு பரிசீலிக்கும்.

மாநில மையம்

கடிதங்களுக்கு உடனடியாக பதில் அனுப்ப ஏற்பாடு செய்வோம். தீக்கதிர், வரும் புகார்களுக்கு பதில் எழுத வேண்டும். ஃபிராக்ஷன், சப்-கமிட்டி, வட்ட அளவில் தேவையில்லை. மாவட்ட கமிட்டி தேவையென கருதினால் வைத்துக் கொள்ளலாம். வட்ட அளவில் கூடாது. கோயம்புத்தூர் லோக்கல் கமிட்டிகளைப் பற்றி மாநில செயற்குழு பரிசீலித்து முடிவைத் தெரிவிக்கும்.

செந்தொண்டர் அணி அமைக்க மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது. அதற்கான ஏற்பாடுகளை தொடங்குவோம். தீக்கதிரில் ஜாதிய விளம்பரம் வந்தது தவறு. இனி வராது.

முழுநேர ஊழியர்கள் - ஊதிய விகிதம் பரிசீலிப்போம். முழு நேர ஊழியர்களை மாவட்ட கமிட்டிகள் பாதுகாக்க வேண்டும். வட்டக் குழுக்கள் அல்ல. நாகையில் கட்சி ஊழியர் சம்பளத் திற்கான பணம் தனியாக டெபாசிட் செய்து கொடுக்கிறார்கள். வேறு செலவுகளுக்கு பயன்படுத்துவதில்லை.

வெகுஜன ஸ்தாபனங்கள் - மாவட்ட சிஐடியு மையத்தை முத லில் பலப்படுத்துங்கள். வி. ச. மாவட்ட மையம் மேலும் ஊழியர்கள் தேவை. வாலிபர் சங்கம் வளர்ந்துள்ளது. மாணவர் சங்கத்தை கவலையோடு பார்க்க வேண்டும். இதில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. பொதுவான அரசியல் போராட்டங்களுக்கு மாணவர்களைத் திரட்ட வேண்டும். ஒருசில தோழர்களின் தவறை (கலை - இலக் கியம்) பொதுவாக்கக்கூடாது, கட்டுப்பாட்டுக்குள் வராதவர்கள் இந்தத் துறையில் தேவையில்லை.

மாதர் - மேற்கு வங்கம், கேரளா தவிர அதிக கட்சி உறுப் பினர்கள் தமிழகத்தில்தான் உள்ளனர். எனினும், மேலும் வளர்க் கப்பட வேண்டும். மாநில செயற்குழு வெகுஜன இயக்கங்களில் தலையிட்டு அவ்வப்போது வழிகாட்டியுள்ளது. வாலிபர் சங்கத் தின் நீண்ட பாதயாத்திரை முடிவு தவறானது. எனவே, மாநில செயற்குழு வாலிபர் சங்கத்தின் மூலமே அதை மாற்றியது. வெகு ஜன இயக்கங்களுக்கும் பொறுப்பேற்று மாநிலக்குழு, மாவட்டக் குழு, மாவட்ட செயற்குழு வழிகாட்ட வேண்டும்.

அறிவியல் - அறிவொளி இயக்கம் - மாநில மற்றும் மாவட்ட செயற்குழு கவனித்து வளர்க்க வேண்டும். இந்த இயக்கம், வர்க்க இயக்கங்களுக்கு பயன்படுமாறு நடத்தப்பட வேண்டும்.

கட்சியின் கல்விக்குழு வேலை பெரிதும் அதிகரிக்கப்பட வேண்டும். ஒரு நிரந்தரப் பள்ளி உருவாக்குவோம். மாநில

செயற்குழு, மாநிலக்குழு கட்சிக் கல்விக்கு முன்னுரிமை தரும். சுய கல்வி தேவை என்பதையும் வற்புறுத்துகிறோம்.

மாநாட்டில் வந்த விமர்சனங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு, தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட் உள்ளடக்கத்தை மேலும் செழுமைப்படுத்துவோம். வெளியிடப்படும் கட்டுரைகளை ஆழ்ந்து படிக்கும்படி கட்சி அணிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

மாநிலக்குழுவில், மாநிலக்குழு செயல்பாடு பற்றிய ஸ்தாபன பரிசீலனை செய்யாதது பலவீனம். வேலைப்பளு என்பது சரியான காரணமல்ல. இரு மாநாடுகளுக்கிடையில் ஒருமுறை மாவட்ட, மாநிலக்குழு, மாநில செயற்குழு தன் வேலை முறைகளை பரிசீலனை செய்வதை உறுதிப்படுத்துவோம்.

கட்சி அமைப்பில், கிளைகள், இடைக்கமிட்டிகள் முக்கியமான இணைப்பாகும். மக்களோடு தொடர்பை கூடுதலாக்குங்கள். கட்சி கிளைகளுக்கும் மக்களுக்குமுள்ள இணைப்பு தொடர்ந்து பலப் படுத்தப்பட வேண்டும்.

கட்சி நிதி தேவை. 75 லட்சம் நிதி திரட்ட மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது. மாநில, மாவட்டக்குழுக்களின் வளர்ச்சிக்கு இந்த நிதி பயன்படும்.

நிராகரிக்கப்பட முடியாத ஒரு சக்தியாக சிபிஐ (எம்) தமிழகத்தில் வளர்ந்து வருகிறது என்பதுதான் சரியான மதிப்பீடு தேசிய இன திருகல்வாதத்தை நாம் தொடர்ந்து சமாளிக்க வேண்டும். 45 பிரதிநிதிகள் கட்சி காங்கிரஸ் செல்கிறார்கள். தமிழக அரசியலில் ஒரு இடதுசாரி திருப்புமுனையை உருவாக்குவோம்.

திருத்தங்களோடு அறிக்கையை ஏற்க வேண்டுகிறேன்.

மாநிலக்குழுவின் வேலை அறிக்கையை மாநில செயற்குழுவின் தொகுப்புரையுடன் மாநாடு ஏற்றுக் கொண்டது.

-என். சங்கரய்யா

பிரகாஷ் காரத் நிறைவுரை

"தோழர்களே, நம்முடைய மாநாடு அதன் இறுதிக் கட்டத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. அரசியல் தலைமைக்குழு சார்பாக கலந்து கொண்டுள்ள நாங்கள், இங்கு மாநிலக்குழு சார்பாக முன் வைத்திருக்கக் கூடிய அறிக்கை மீது நீங்கள் நடத்திய விவாதத்தை மிகவும் உன்னிப்பாக கவனித்து வந்தோம்.

உங்கள் விவாதம் எங்களுக்கு மிகவும் பயன் உள்ளதாகவும், உற் சாகம் அளிப்பதாகவும் இருந்தது. விவாதத்தில் கலந்து கொண்ட தோழர்கள், அவர்களுக்கு முன்னால் உள்ள அரசியல் ஸ்தாபனக் கடமைகள் பற்றியும், தமிழகத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் பற்றியும் தெளிவாக எடுத்துக்கூறியதையும், மேலும் தமி ழகத்தில் இருக்கக்கூடிய அரசியல் நிலைமைகளைச் சந்திப்பதற்குத் தேவையான திறன் படைத்தவர்களாகவும் இருந்ததையும் பார்க்கி றோம். நீங்கள் நடத்தி இருக்கக்கூடிய விவாதத்திற்கு எங்களுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அறிக்கை முன்வைத்துள்ள அரசியல் ஸ்தாபனக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உங்களால் முடியும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது.

பிரதிநிதித் தோழர்கள் எழுப்பியுள்ள அனைத்துப் பிரச் சனைகள் மீதும் நான் இங்கே என்னுடைய கருத்துக்களைக்கூற விரும்பவில்லை. நேற்றையதினம் தோழர் பி. ஆர். சி. பேசுகிற போது விவாதத்தில் முன் வந்திருக்கக்கூடிய பல முக்கியமான பிரச்சனைகளைப் பற்றி எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

கடந்த மாநில மாநாடு நடைபெற்றபோது நடந்த விவாதங்களை நினைவுகூர விரும்புகிறேன். கடந்த மாநில மாநாட்டில் விவாதம் நடைபெற்றபோது, மதச்சார்பற்ற முதலாளித்துவ கட்சிகள் சம்பந்த மாகவுள்ள - திமுக சம்பந்தமாகவுள்ள - நம்முடைய அணுகு முறைகள் எப்படிப்பட்டது என்பதுபற்றி அழுத்தமான கருத்துக்கள்

தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு தெரிவிக்கும்போது நாம் நம்முடைய சுயேச்சையான நிலைகளை போதுமான அளவில் கூற வில்லை என்று விவாதம் வந்தது. கடந்த காலங்களில் தேர்தல் காலங்களிலும் மற்ற நேரங்களிலும் நம்முடைய அணுகுமுறைகள் எப்படிப்பட்டதாக இருந்தன என்று விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வதற்கும் நாம் முயற்சித்தோம். அதன் வெளிப்பாடாகத்தான் 14வது கட்சி காங்கிரசில் ஸ்தாபன அறிக்கையில் ஒரு முழுமை யான பகுதி. அதேபோன்று மதச்சார்பற்ற முதலாளித்துவ கட்சிகள் சம்பந்தமாகவுள்ள நமது அணுகுமுறைகளை விமர்சன ரீதியாக பரிசீலிக்க முயற்சித்தோம்.

அந்த கட்சிகளோடு பல்வேறு வகையில் ஒன்றுபட்டு செயல் படுகிறபோது, அவர்களோடு கூட்டணி அமைத்து தேர்தல் ஒப்பந் தங்கள் உருவாகக்கூடிய காலத்தில் ஒரு வகையான வால் பிடிக்கும் போக்கு என்பது இருந்திருக்கிறது. நம்முடைய நிலைபாடுகளை வர்க்க ரீதியாக எடுத்துச் சொல்வதற்கு நாம் போதுமான அளவிற்கு முயற்சி செய்யவில்லை என்று 14வது கட்சி காங்கிரஸ் அரசியல் ஸ்தாபன அறிக்கையில் குறிப்பிட்டோம்.

மிக முக்கியமானதும், அடிப்படையானதுமான பிரச்சனை, அந்தக் கட்சிகளுடன் இயக்கங்கள் நடத்துகிறபோது, நம்முடைய கட்சியின் செல்வாக்கிற்கு அப்பாற்பட்ட பகுதியில் உள்ளவர் களை நாம் வென்றெடுத்திருக்கிறோமா அல்லது நம்முடைய செல் வாக்குள்ள மக்களை அவர்களுடைய செல்வாக்கிற்கு விட்டுவிட் டோமா என்பதுதான் மிக முக்கியமான பிரச்சனையாக இருந் திருக்கிறது.

சென்னையில் நடைபெற்ற கட்சி காங்கிரசில் நாம் இதைப் பற்றி பரிசீலித்தபோது, நம்முடைய அணுகுமுறைகளில் பலவீனங் கள் இருந்தன. அந்த பலவீனங்கள் காரணமாக போதுமான அள விற்கு வெற்றி பெறவில்லை என்று பார்க்க முடிந்தது. அது சம் பந்தமான படிப்பினைகளைப் பெற வேண்டி இருந்தது.

கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற வேலைகளின் அடிப் படையில் இன்றைய நிலைமைகளைப் பரிசீலிப்போம். திமுகவில் ஏற்பட்ட பிளவு, மதிமுக சம்பந்தமாக அணுகுமுறை, அது சம்பந்த மாக இங்கே நடைபெற்றிருக்கக்கூடிய விவாதம், மதச்சார்பற்ற கட்சிகளோடும், இடதுசாரி கட்சிகளோடும் நம்முடைய அணுகு முறை என்பது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதும், பல சூழ்நிலைகளில் ஏற்படக்கூடிய மாறுதலுக்கேற்ப அதை நாம் செய்ய முடிந்திருக்கிறது என்பதும், சென்னை மாநாட்டினுடைய அனுபவத்தின் அடிப்படையில் தமிழகத்தில் அமுல்படுத்துகிற போது, பொதுவாக பார்த்தால் சரியான முறையில் அமுல்படுத்தி இருக்கிறோம் என்பது இங்கே நடைபெற்ற விவாதங்கள் மூலமும், நிறைவேற்றியுள்ள அரசியல் தீர்மானத்திலிருந்தும் பார்க்க முடி கிறது. மொட்டுமொத்தமாக, சரியான அணுகுமுறை என்பதை பார்க்க முடிகிறது. .

அதே நேரத்தில் இங்கு நடைபெற்ற விவாதத்தில், நம்முடைய தோழர்களுக்கு இருக்கக்கூடிய சில அச்சங்கள் அல்லது எச்ச ரிக்கைத்தன்மை பற்றி தெரிவித்தார்கள். அது சரியானது என்று பார்க்கிறேன். புதிதாக உருவாகி இருக்கிற மதிமுக சம்பந்தமாக நாம் நம்முடைய நடைமுறை தந்திரத்தில் அவர்களோடு இணைந்து செயல்படுகிறபோது, அவர்களோடு கூட்டான இயக்கங்கள் நடத்து கிறபோது, நாம் (பிரச்சனைகள் ஏற்படின்) தேவைப்படுமானால் தனியான சுயேச்சையான நிலைபாடுகளில் தெரிவிக்க வேண்டி இருக்கிறது. எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போதெல் லாம் மதிமுகவை விமர்சனம் செய்ய வேண்டும். இங்கு நடை பெற்றிருக்கிற விவாதங்களிலும் சரி, கடந்த காலஅனுபவங்களின் அடிப்படையிலும் சரி, அப்படிப்பட்ட பிரச்சனைகள் ஏற்படுகிற போது அதே போன்று உங்களால் செயல்பட முடியும் என்றும், இங்கு தெரிவிக்கப்பட்ட எச்சரிக்கைகள் அதற்கேற்ப நல்லமுறை யில் எடுத்துக்கொண்டு வருங்காலத்தில் செயல்பட முடியும் என் றும் கருதுகிறேன்.

தமிழகத்தில் மட்டுமல்ல, கர்நாடகாவில் ஜனதா தளத்துடன் ஏன் தேர்தல் உறவு ஏற்படவில்லை? அங்கு மட்டுமல்ல, ஒரிசாவிலும் கூட ஜனதா தளத்துடன் உறவு இல்லை. ஒரிசா மாநிலத்தைப் பொறுத்தமட்டிலும் அங்கு மாநிலக் குழு எடுத்த முடிவை, மத்தியக்குழு அங்கீகரித்தது. பிஜுபட்நாயக் தலைமையில் இருக்கக் கூடிய இன்றைய அரசாங்கம் கடைப்பிடித்து வருகிற கொள்கைகள் காரணமாக தேர்தல் உறவு ஏற்படுத்தினால், அது கட்சி நிலையைப் பாதிக்கும் என்று முடிவு செய்தது. மத்தியக் குழுவும் அதை அங் கீகரித்தது. பிஜுபட்நாயக் அரசாங்கம் பின்பற்றக்கூடிய கொள்கை களின் தன்மை நரசிம்மராவ் அரசின் பொருளாதாரக் கொள்கை களை ஆதரிக்கக்கூடிய ஒரு அரசாங்கமாக அது இருக்கிறது. நம் முடைய வர்க்கம் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு அந்த கொள்கை கள் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவேதான் உறவு இல்லை என்று சிபிஐயும், சிபிஎம்-மும் முடிவு செய்து போட்டி போடுகிறோம். மற்ற தொகுதிகளில் ஜனதா தள வேட்பாளர்களை ஆதரிக்கிறோம். ஆனால் அவர்களோடு சேர்ந்துகொண்டு கூட்டு மேடை இல்லை.

கர்நாடகாவில் உறவு ஏற்படுத்திக் கொள்ளத் தயாராக இருந் தோம். ஆனால் அது அந்தஸ்துக்கு ஏற்றதாகவும் இருக்க வேண் டும். 4 சீட்டு, 2 சீட்டு என்று ஒதுக்குவதை ஏற்றுக்கொள்ள மறுத் தோம். தனியாக போட்டி போட்டு நாம் வெற்றி பெற்றுள்ள இடத் தில்கூட அவர்கள் ஒதுக்கத் தயாராக இல்லை.

ஒரிசாவைப் பொறுத்தமட்டிலும் இன்றைக்கு அந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய நிலைமையானது கடந்த காலத்தில் இருந்த தேர்தல் முடிவைவிட மோசமாகிவிடுவதற்கு வாய்ப்பில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் இன்றைக்கு வெவ்வேறு விதங்களில் பிரச்சனை கள். ஆந்திராவில் தெலுங்குதேசத்துடன் தேர்தல் உறவு ஏற்படுத் தினோம். தேர்தல் முடிந்து ஒரு சில மாதங்களுக்குள்ளேயே பல் வேறு கொள்கை அறிவிப்புகளை எதிர்த்துப் போராட வேண்டிய வர்களாக இருக்கிறோம்.

முதலாளித்துவ கட்சிகளில் பல புதிய பொருளாதாரக் கொள் கைகளுக்கு எதிராக வருவதற்குத் தயாராக இல்லை. ஆகவே நம்மைப் பொறுத்தமட்டில் நம்முடைய சுயேச்சையான மேடை களில் இருந்து அந்தக் காரியங்களை நிறைவேற்ற வேண்டி யவர்களாக நாம் இருக்கிறோம்.

மேலும் சில முக்கியமான பிரச்சனைகள் குறித்து பி. ஆர். சி. குறிப்பிட்டார்கள். பல்வேறு மாநிலங்களில் நடைபெறுகின்ற மாநாடுகளிலிருந்து சற்று மாறுபட்ட நிலையில் சிபிஐயுடன் நெருக்கமான உறவு வளர்க்கப்பட வேண்டுமென்று அதிகமான பிரதிநிதிகள் பேசினார்கள் என்பதில் மகிழ்ச்சி. அவர்களோடு உற்வு உருவாக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும், வளர்க்கப்பட வேண்டும் என்று தோழர்கள் குறிப்பிட்டார்கள்.

ஒரு விவரத்தை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சிபிஐ இன்றைக்கு பல மாநிலங்களில் சிதறிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அகில இந்திய ரீதியாக ஒருங்கிணைந்து செயல்படவில்லை என்பது மட்டு மல்ல, பல மாநிலங்களிலும் அதே நிலைதான் இருக்கிறது. பல மாநி லங்களில் அது வேறு பல கட்சிகளுடன் சேரக்கூடிய நிலை இருக் கிறது. ஒட்டுமொத்தமாக அக்கட்சியின் நிலை, இடதுசாரி ஒற்று மைக்கு உகந்ததாக இல்லை.

உ. பி. யில் மாநில செயலாளரும் மேலும் பலரும் முலாயம் சிங் யாதவுடன் சேர்ந்ததைப் பார்த்தோம். ஜாதி ரீதியாக சேர்ந்திருக் கிறார்கள். அதேபோன்ற நிலைதான் பீகார், ராஜஸ்தான், குஜராத் போன்ற மாநிலங்களிலும் பார்க்க முடிகிறது. நாம் இது சம்பந்தமாக மகிழ்ச்சியாக இல்லை. காரணம், இடதுசாரி இயக்கத் தலைவர்கள், ஊழியர்கள் வேறு முதலாளித்துவ கட்சிகளோடு போவது என்பது இடதுசாரி இயக்கத்திற்கு ஒரு நஷ்டம் என்கிற முறையில்தான் பார்க்கிறோம்.

இதைத் தடுப்பதற்கான முயற்சி மத்தியபிரதேசத்தில் பார்த் தோம். ம.பி.யில் அக்கட்சியின் முன்னாள் மாநில செயலாளரும்,

கணிசமான ஆதரவாளர் பகுதியோடு நம்மிடம் வந்து சேர்ந் திருக்கிறார்கள். பி. ஆர். சி. யும் கூட அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உறவுகளை உருவாக்கு வதற்கு நம்முடைய தலையீடு தேவை என்ற உணர்வோடு மாநி லங்களில் ஒருங்கிணைப்புக் குழுக்களை உருவாக்குவது என்று முடிவு செய்தோம். அவர்களுக்குப் பின்னால் இருக்கக்கூடிய அணிகளை நாம் சிறப்பாக வென்றெடுப்பதற்கு முடியும் என்ற உணர்வோடு முடிவு செய்தோம். உ. பி. யில் ஒரு பகுதி சிபிஎம் மோடு போயிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக அவர்களோடுள்ள உறவுகளைப் பாதுகாத்து, மேலும் விஸ்தரிப்பது என்பது நிச்ச யமாக மாநில ரீதியாக உதவி செய்யும். அது இன்றைய நிலையில் அவசியமானது என்பதும், அவர்கள் கட்சியில் உள்ள அணிகளை வென்றெடுக்கவும் இது உதவி செய்யும்.

நாம் அவர்களிடமிருந்து வேறுபடுகின்ற எல்லா பிரச்சனைகள் சம்பந்தமாகவும் வேறுபடுத்திக் காட்ட வேண்டும். ஆனால் அதே நேரத்தில் கூட்டு இயக்கங்கள் நடத்துவதில் விசேஷமான கவனம் செலுத்த வேண்டும்.

இட ஒதுக்கீடு

இட ஒதுக்கீடு சம்பந்தமாக நடந்த விவாதத்தைக் கவனித்த போது அகில இந்திய அடிப்படையில் கட்சியின் அடிப்படையான நிலை என்ன என்பதை உங்களுக்கு முழுமையாகத் தெரிவிப்பதில் தோல்வி கண்டிருக்கிறோம் என்றோ அல்லது தமிழகத்தின் விசேஷ சூழ்நிலையில் மாற்றுக் கட்சிகள் எடுத்துள்ள நிலைபாடு நம்முடைய கட்சி தோழர்கள் மத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்றோ, இந்த இரண்டில் ஒன்று ஏற்பட்டிருக்கிற தென்று நான் கருதுகிறேன்.

அறிக்கையில் கூட தவறான முறையில் அர்த்தம் தரப்படக் கூடிய முறையில் இருக்கிறது என்று கூறி திருத்தங்கள் கூறப்பட்டு அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நகல் அரசியல் தீர்மா

னத்தில் இட ஒதுக்கீடு சம்பந்தமாகக் கூறப்பட்டுள்ள பகுதிகளைக் கவனமாகப் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டிலும் பிற்பட்ட வகுப்பின ருக்கு இருக்கக்கூடிய இட ஒதுக்கீடு என்பதையும், தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் சம்பந்தப்பட்ட இட ஒதுக்கீடு என்பதையும் தனித்தனியாகத்தான் பார்க்கிறோம். பிற்பட்ட மக்கள் சார்பாக இட ஒதுக்கீட்டில் ஒரு பகுதியில் பொருளாதார அம்சம் இருக்க வேண்டும் என்றும் நாம் கூறி வந்திருக்கிறோம்.

கடந்த 40 ஆண்டு காலத்தில் சுதந்திரம் அடைந்த பிறகு, பல் வேறு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதில் ஓர் அம்சம் இதர பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லக்கூடியவர்களில் ஒரு பகுதியினர் வசதி படைத்தவர்களாக மாறி இருக்கிறார்கள். அதை நாம் பார்க்க வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள பெரும்பான் மையான உழைப்பாளி மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்களாகவும், தாழ்த்தப்பட்ட மக்களாகவும் இருக்கிறார்கள். பீகாரிலும், உத்தரப் பிரதேசத்திலும் இருக்கக்கூடிய நிலைமைகளைப் பொறுத்தமட்டில் இதர பிற்படுத்தப்பட்ட பகுதியினர் என்பதற்குப் பின்னால் நிலப் பிரபுக்களும், பணக்காரர்களும்கூட உருவாகி இருக்கிறார்கள். பீகார் மாநிலத்தில் யாதவர்களில் பணக்காரர்களும் இருக் கிறார்கள். ஏழை விவசாயிகளும் இருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். இவர்கள் மிகவும் ஒடுக்கப்பட்ட பகுதியினராக இருக்கிறார்கள். எனவே பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் இவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்கிற முறையில் நாம் நிற்கிறோம்.

பிற்படுத்தப்பட்ட பகுதியினருக்குக் கொடுக்கக்கூடிய சலு கைகள், நிலப்பிரபுக்களுக்கும், பணக்காரர்களுக்கும் போய்ச் சேர்ந்துவிடக்கூடாது என்ற பார்வையோடு இதை நாம் அணுகு கிறோம்.

உச்சநீதிமன்றம் பிற்படுத்தப்பட்ட பகுதியினர் சம்பந்தமாக தீர்ப்பு அளித்திருக்கிறது. அதுபற்றி நீண்ட விவாதம் நடந்திருக்கிறது.

கேரளாவில் ஜாதி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு இருந்துவந்திருக்கிறது. பிற்பட்ட மக்கள் நாடு முழுதும் இன்றையதினம் இருந்துவரக்கூடிய நிலைமைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு நெடிய விவாதத்திற்குப்பிறகு நம்முடைய அணுகுமுறையை நாம் உருவாக்கி இருக்கிறோம்.

உ.பி.யில் உள்ள நிலைமை குறித்து ஒரு தோழர் விவாதத்தின் போது குறிப்பிட்டார் என்று நினைக்கிறேன். உத்தரப்பிரதேசத்தில் 27 சதவீதம் இட ஒதுக்கீடு என்று அமுல்படுத்துகிறார்கள். இந்த அறிவிப்பு வெளியானபோது எட்டு மலைப்பகுதி மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், இதற்கு எதிரான கிளர்ச்சிகள் நடந்தது. தேவையான மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கும் என்று நாம் சொன்னோம். இதனை மலைவாழ் பகுதி மாவட்டங்களில் அமுல்படுத்த முடியாது என்று நாம் சொன்னோம். முலாயம் சிங் யாதவ் அறிவித்தபோது 8 மலைப்பகுதி மாவட்டங்களில் எதிர்ப்பு இயக்கங்கள் வந்தபோது, மாநிலக்குழு, இந்த கிளர்ச்சி இட ஒதுக்கீட்டுக்கு எதிரான கிளர்ச்சி என்ற முறையில் விமர்சித்தது. ஒரு மாவட்டத்தில் நமக்கு செல்வாக்கு உண்டு. அந்த இயக்கத்தை எதிர்த்த உடனேயே, அங்கு நம்மால் நிற்க முடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் விவாதித்தபின், மீண்டும் அரசியல் தலைமைக்குழு சார்பாக தீர்மானம் வெளியிட்டது. பிரச்சனை என்னவென்று சொன்னால், உ.பி.யில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட மக்கள் என்பது மலைவாழ் பகுதியில் பார்க்கிறபோது, 8 மலைப்பகுதி மாவட்டங்களில் 2லிருந்து 3 சதவீதம்தான் இருக்கிறது. அதுவும்கூட மலை அடிவாரப் பகுதிகளில்தான் இருக்கிறார்கள். மலைகளின் மேல் இருக்கக்கூடியவர்கள் பெரும்பாலானவர்கள் மற்றவர்கள். எனவே 27 சதவீதம் என்ற முடிவு அவர்களுக்கு எதிரானது.

டில்லியில் உள்ள டீக்கடைகளில் வேலை செய்கிறவர்கள் பிராமணர்களாக இருப்பார்கள் அல்லது ராஜபுத்திரர்களாக இருப்பார்கள். பொருளாதார ரீதியாக பின்தங்கிய அவர்கள் இப்படிப்பட்ட வேலைகளை வேறு பகுதிகளுக்குச் சென்று செய்கிறவர்களாக இருக்கிறார்கள்.

முலாயம் சிங் யாதவ் 27 சதவீதம் பிற்பட்ட பகுதி மக்களுக்கு என்று அறிவித்ததனால், 8 மலைப்பகுதி மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், அங்கே இருக்கக்கூடிய குறைந்தபட்ச வேலைகளையும்கூட, வேறு பகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள் வந்து எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள் என்ற முறையில் கிளர்ச்சிகள் உருவாயிற்று. நாம் ஆலோசனை வைத்தபிறகு 8 மலைப் பகுதி மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் பிற்படுத்தப்பட்ட பகுதி என்ற கண்ணோட்டத்தோடு பிரச்சனையை அணுக வேண்டும் என்று முடிவு செய்தோம்.

இவ்வாறு மாநிலத்திற்கு மாநிலம் பிரச்சனைகள் வேறுபடுகின்றன. திரிபுரா மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட பகுதியினருக்கு 15 சதவீதமும், மலைவாழ் பகுதியினருக்கு 33 சதவீதமும் ஆக 48 சதவீத இட ஒதுக்கீடு இருக்கிறது. மற்ற பகுதியினருக்கு இல்லை. இப்போது உச்சநீதிமன்ற தீர்ப்புக்குப்பின் பிற்படுத்தப்பட்ட பகுதியினர் என்று யாரை சேர்த்துக்கொள்ளலாம் என்பது குறித்து கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது.

மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில் இதர பிற்படுத்தப்பட்ட பகுதியினர் என்ற நிலை இல்லாமல் இருந்தது. இதர மாநிலங்களில் பிற்பட்ட வகுப்பினராகச் சொல்லப்பட்டிருக்கிறவர்கள் மேற்கு வங்கத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டிருக்கிறார்கள். உச்சநீதிமன்ற தீர்ப்புக்குப்பின் மேற்கு வங்கத்திலும் பிற்பட்ட பகுதியினராக யாரைச் சேர்க்கலாம் என்பது குறித்து கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு வர்க்க ரீதியான கண்ணோட்டத்தோடு பிரச்சனைகளைப் பார்க்கிறோம். விவசாயிகள், விவசாயத்

தொழிலாளிகளை, அடித்தட்டு மக்கள் ஒற்றுமையை பாது காப்பதற்கு என்ன நிலையைக் கையாளுவது என்று பார்த்துத்தான் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது.

உத்தரப்பிரதேசம், பீகாரில் உள்ள நிலைமைகளைப் பார்க்கிற போது மிகுந்த கவலை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. உ. பி. யில் ஜாதி உணர்வு மேலோங்கி இருக்கிறது. திருடியவன் தன் ஜாதிக் காரனாக இருந்தால், போலீஸ்காரன் அடிக்க மறுக்கிறான். பீகா ரிலும் ஜாதி ரீதியாக இயக்கங்கள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்த அமைச்சருக்கு, அதே ஜாதியைச் சேர்ந்த வரைத்தான் பாதுகாவலராக நியமிக்க முடியும். இவையெல்லாம் ஒட்டுமொத்தமாக நம்முடைய செல்வாக்கைக்கூட பாதிக்கக்கூடிய நிலைமை. இவற்றினால் சிபிஐ அடித்தளம் பாதிக்கப்பட்டிருக் கிறது. சில இடங்களில் நம்முடைய தளமும்கூட பாதிக்கப்பட்டிருக் கிறது. இந்த சமூக நீதிக்கான போராட்டம் என்று சொல்கிறபோது, சமூக நீதி என்பது, வெறும் இட ஒதுக்கீடுதான் என்ற நிலை உரு வாவதற்கு நாம் அனுமதிக்க முடியாது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் இதுவரை இட ஒதுக்கீடு இருந்து வந்த நிலைமை - 69 சதவீதம் தொடர வேண்டும் என்று சொல்கிறோம். உச்சநீதிமன்ற தீர்ப்பில் அடிப்படையில் புதிதாக இட ஒதுக்கீடு ஏற்படுத்தும் மாநிலங்களில் இருக்க வேண்டும் என்று கூறுகிறோம். ஆனால் இவற்றை முதலாளித்துவ கட்சிகள் அவற்றின் விருப்பம்போல் அனுமதிக்க இடம் கொடுக்கக்கூடாது.

இந்த இட ஒதுக்கீடு பிரச்சனையில் மற்றோர் அம்சமும் இருக் கிறது. 27 சதவீதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது மத்திய சர்க்கார் பணிகளுக்கு என்று மட்டும் உள்ளன. மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய உத்தரவோ சட்டமோ இல்லை.

அஸ்ஸாமில் 27 சதவீதம் இருக்க முடியாது. நாகாலாந்து, திரிபுராவில் இல்லை. மத்திய அரசு வேலை பிரிவுகளில் மட்டும் தான் 27 சதவீதம் இருக்கிறது.

இப்பிரச்சனையிலும் சிபிஎம்க்கும், சிபிஐக்கும் இடையில் அடிப்படை வேறுபாடு இருக்கிறது. கேரளாவில் கருத்து மோதல்கள் நடைபெறுகின்றன. சிபிஐ தர்ணா நடத்தியது. 'கிரிமி லேயர்' ஆட்சேபணை செய்கிறார்கள். இதுகுறித்த நம் பிரச்சாரம், அவர்கள் அணிகள் மத்தியிலும் கடுமையான பாதிப்பை உருவாக்கி இருக்கிறது.

பீகாரில் சிபிஐ சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது. இந்திரஜித் குப்தா அந்தக் கூட்டத்தில் பங்கேற்றார். அந்தக் கூட்டத்திற்கு மேல் ஜாதியைச் சேர்ந்தவர் தலைவராக இருந்தார். அவர் நீக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அவ்வாறு செய்யவில்லை என்று சொன்னால் கட்சியிலேயே மிகுந்த பிரச்சனை உருவாகி இருக்கும்.

உ.பி.யில் மாநில செயலாளர் முலாயம் சிங் அவர்களுக்கு ஆதரவு இல்லை என்று சொன்னபிறகு இவர் கட்சியிலிருந்து நீங்கி அங்கே போய் சேர்ந்துவிட்டார்.

நம்மைப் பொறுத்தவரை, நாம் இப்பிரச்சனையை தற்காப்பு நிலையிலிருந்து அணுகவில்லை. நம்முடைய நிலைபாட்டை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு எந்தவிதத் தயக்கமும் காட்டவில்லை. மற்றவர்களிடம் வேறுபடுத்தி, மக்களிடம் கொண்டு செல்வதற்கு இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

புதிய பொருளாதாரக் கொள்கை

புதிய பொருளாதாரக் கொள்கையின் நேரடி விளைவுகள் பற்றி பல தோழர்கள் குறிப்பிட்டார்கள். அது சம்பந்தமாகவுள்ள நம்முடைய பரிசீலனையோடு புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்துப் போராடக்கூடிய பல்வேறு பகுதியினரையும் ஒன்றுதிரட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது.

மீனவர்கள் பிரச்சனை

மீனவர்கள் எப்படி எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள் பாதிப்பு பற்றி

எல்லாம் பிரதிநிதிகள் குறிப்பிட்டார்கள். இன்னும் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டி இருக்கிறது.

சமீபத்தில் மீனவர்கள் தேசம் தழுவிய முறையில் வேலை நிறுத்தம் செய்தார்கள். மீனவர்கள் மத்தியில் நம் செல்வாக்கு இல்லை. கேரளாவில் கூட குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கு இருப்பதாகச் சொல்ல முடியாது. அவர்கள் வேலை நிறுத்த அறிவிப்பு வந்தபிறகு, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மிகுந்த அளவுக்கு ஆதரவு இருந்ததைப் பார்த்தோம். குறிப்பிட்ட பிரச்சனையில் குறிப்பிட்ட நேரத்தில் திரட்டுவோமா னால், ஏற்கெனவே திரட்டியிருக்கக்கூடிய பகுதிகளோடு இதர பகுதியினரையும் ஒன்றிணைத்து விரிவான முறையில் கொண்டு செல்ல முடியும். அந்த விதத்திலும் மாநாட்டில் முடிவுகள் எடுக்கப் படவிருப்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கிறது. மாற்று ஆலோசனை என்ன என்பதையும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கேரளாவில் முயற்சி நடைபெறும். கட்சியும் ஏகேஜி சென்டரும் முயற்சி எடுத்து செய்தன. தமிழகத்தில் கூட நிச்சயமாக நம்முடைய மாற்று ஆலோசனைகள் என்ன என்பது பற்றி கருத்துக்களை முன் வைத்து அதற்கான முயற்சிகளை எடுக்கக்கூடியவர்களாகவும் அதற்கான நகல் தயாரித்து பல புதிய பகுதியினர் நம்முடன் செய லாற்றுவதற்குச் செய்ய முடியும்.

தோழர்களே, இரண்டு முக்கியமான விசேஷமான அம்சங் க்களைக் குறிப்பிட வேண்டும். அகில இந்திய உணர்வோடு - நாம் அகில இந்திய கட்சியின் ஒரு பகுதி என்ற உணர்வோடு - காரி யங்களைச் செய்ய வேண்டும். அது இந்த மாநிலத்தில் செயல் படுத்தப்படுகிறது. சமஷ்டிப் போக்கு இங்கு இல்லை.

அகில இந்திய இயக்கங்கள், ஸ்தல இயக்கங்களுக்கு உட்படுத் தப்படுவது என்ற போக்கு இல்லாமல், பிரச்சனைகள் ஏற்படுகிற போதெல்லாம், அகில இந்திய கண்ணோட்டத்தை கணக்கில் வைத்துக்கொண்டு, மத்தியக்குழு, அரசியல் தலைமைக்குழு ஆகிய

வற்றை கலந்தாலோசித்து முடிவுகளை அமுல்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. இது நாட்டிலுள்ள இதர பகுதியினரும் பின்பற்ற வேண்டியதாகும். இது அகில இந்திய மையத்தில் இருந்து செயல் படுகின்ற எங்களைப் போன்றவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கிறது.

இரண்டாவதாக, நல்லமுறையிலான கூட்டுச் செயல்பாடு இந்த மாநிலத்தில் இருக்கிறது. சரியான முடிவுகளை ஏற்படுத்துவதற்கு இது அவசியம். இவ்வாறான செயல்பாட்டின் காரணமாகத்தான் நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள 50 ஆயிரம் கட்சி உறுப்பினர் உயர் வில் தமிழகத்தில் மட்டும் 20 சதவீதம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மாநாட்டின் முடிவுகளை கட்சியினுடைய அடிமட்டத் திற்கும் கொண்டு சென்று, அனைத்து உறுப்பினர்களுக்கும் எடுத் துக்கூறி, தமிழகத்தில் மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்; அப்படிப்பட்ட வளர்ச்சி உருவாகும் என்ற எதிர் பார்ப்போடு விடைபெறுகிறேன்.

நன்றி தோழர்களே!

மக்கள் ஜனநாயகப் புரட்சி ஓங்குக!

மார்க்சியம் லெனினியம் வெல்க!

புரட்சி வாழ்த்துக்களுடன்

- மாநிலக்குழு -